
மர்ஹூம் புலவர் யூ.எல். இஸ்மாயில் (அதிபர்) இன்

# உபாக்கியான அந்தாதி



பதிப்பாசிரியர் :

ஐ.எம். வதுறுல் பௌளஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாக்கியான அந்தாதி

யூ.எல். இஸ்மாயில்

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

வெளியீடு :

Ismail Marikkar Foundation

இஸ்மாயில் மரைக்கார் பவுண்டேசன், மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UPAKKIYANA ANDADI

| | | |
|---|---|---|
| Authot | : | U.L. Ismail |
| Editor | : | I.M. Bathrul Fouz |
| Address | : | 554, Zam Zam Road, Maruthamunai-03. |
| | | +94 772993758 |
| First Edition | : | 1939 |
| Second Edition | : | 2018 |
| Cover Design | : | BF. Inafa Nafrin |
| Printers | : | New Ilampirai |
| Pages | : | 80 |
| Copies | : | 1000 |
| Size | : | A5 |
| Published | : | IMF - Maruthamunai. |
| Price | : | Rs. 450.00 |
| ISBN | : | 9789553876706 |

## உபாக்கியான அந்தாதி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | யூ.எல். இஸ்மாயில் |
| பதிப்பாசிரியர் | : | ஐ.எம். வதுறுல் பௌஸ் |
| விலாசம் | : | 544, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03. |
| | | +94 772993758 |
| முதற் பதிப்பு | : | 1939 |
| இரண்டாம் பதிப்பு | : | 2018 |
| அட்டை வடிவமைப்பு | : | BF. இனாபா நப்றின் |
| அச்சுப்பதிப்பு | : | நியூ இளம்பிறை |
| பக்கங்கள் | : | 80 |
| பிரதிகள் | : | 1000 |
| அளவு | : | A5 |
| வெளியீடு | : | இஸ்மாயில் மரைக்கார் பவுண்டேசன் |
| விலை | : | ரூ. 450.00 |
| ISBN | : | 9789553876706 |



வரவுப் பதிவு எண் 22651
வகுப்பு எண்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

உசாத்துணைப் பகுதி

# சமர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்து

ஆளாக்கி

உயர்த்திட்ட

என் அன்புத் தந்தை

மர்ஹூம் யூ.எல். இஸ்மாயில் மரைக்கார்

அவர்களுக்கும்

தாய்

உம்மு ஜெஸீமா,

மனைவி

ஹாரிதா

அவர்களுக்கும்...



பதிப்பாசிரியர் : ஐ.எம். வதுறுல் பௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

بسم الله الرحمن الرحيم

மருதமுனை தனது நீண்ட வரலாற்றுப் பாதையில் கண்ட பிரபல்ய கல்விமான்களுள் ஒருவராக பெரிய வாத்தியார் யூ.எல். இஸ்மாயீல் மரைக்கார் கருதப்படுகின்றார். அன்னாரால் வெளியிடப்பட்ட உபாக்கியான அந்தாதி எனும் நூலின் மறுபதிப்புக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன்.

ஒரு ஆசிரியராக, ஒரு உப அதிபராக தனது சேவைப் பணிகளை தொடர்ந்து பெரிய வாத்தியார் என்ற சிகரத்தைத் தொட்டு ஆளுமைமிக்க ஒரு தலைமையாசிரியராக மட்டுமன்றி, இன்றைய மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் ஆரம்ப நற்பெயருக்கு வித்திட்ட பெருந்தகையாகக் கருதப்படுகிறார்.

மருதமுனையின் கலை, இலக்கிய, அறிவியல் வெளிப்பாடுகளின் சொந்தக்காரராகவும் பெரியவாத்தியார் இஸ்மாயீல் மரைக்கார் திகழ்கின்றார் என்பதை அவரது வெளியீடுகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. இஸ்லாமிய நன்னெறிகளையும் நபி ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களின் பண்புக ளையும் நடைமுறை களையும், அன்னை பாத்திமா நாயகி, அன்னை ஆயிஷா நாயகி போன்ற இஸ்லாமிய வரலாற்று முன்னோடிகளை கவிதை வடிவில் வடித்து தந்த ஒரு கவிஞராகவும் திகழ்கின்றார்.

உபாக்கியான அந்தாதிப் பாடல்கள், தோத்திரக்கீர்தனாமிர்தம், கீர்த்தனைகள் போன்ற இவரது இலக்கியப் பங்களிப்புக்களில் இஸ்லாமிய நம்பிக்கைகள், வரலாறு, சாதனைகள் என்பன இழையோடிக் காணப்படுகின்றன.

“கல்விக்கு உயிர்கொடுப்போர் மரணிப்பதில்லை” என்ற சான்றோர் வாக்கிற்கு இணங்க பெரிய வாத்தியார் இஸ்மாயீல் மரைக்கார் தனது குறுகிய காலப் பகுதியில் இன்றைய பரம்பரை அறிய வேண்டிய பல கல்வி, கலாசார, கலை, இலக்கிய அம்சங்களை சொத்துக்களாக விட்டுச் சென்றுள்ளார். மருதமுனையின் பொது வரலாறு எழுதப்படும் போது இவருக்கு தனியான பக்கங்கள் விடப்படல் வேண்டும் என்பது எனது அவாவாகும்.

பெரியவாத்தியார் இஸ்மாயில் மரைக்கார் அவர்களின் நற்சேவைகளை அல்லாஹுத்தஆலா கபூல் செய்து, மறுமையில் அன்னாருக்கு சுவனம் கிட்ட மருதமுனை ஜம்இய்யதுல் உலமா, மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனமும் பிரார்த்திக்கின்றது.

அல்–ஹாஜ். எம்.ஐ. ஹுஸைனுதீன் (றியாழி)
தலைவர்,
மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா மற்றும்
அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம்.

உசாத்துணைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பா'வோடு பிறந்த மண்!

இந்த மண்ணுக்கு நீண்ட வரலாறு உண்டு. அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்ற மருதமுனைக்கு இலக்கிய ரீதியாக ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. 'பா' இந்த மண்ணோடு பிறந்தது. நெசவிற்கும் அங்கு பா ஓடுவார்கள்; இலக்கியத்திற்கும் அங்கு பா யாப்பார்கள். சின்னாலிம் அப்பாவோடு இந்த பா ஆக்கும் பண்பு மருதமுனையில் தொடங்குகிறது.

சின்னாலிம் அப்பாவிற்குப் பிறகு புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் பா யாப்பதிலும் கிழக்கு முஸ்லிம்களிடையே கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றியிருக்கிறார். இவர் விபுலானந்த அடிகளின் நேரடி மாணவன். இன்றும் இந்தப் பா ஆக்குகிற மரபிலே புலவர்மணியின் மகன் ஜின்னா ஷரிபுடீன் பெரும் சாதனைகளைப் புரிந்து வருகிறார். பல காவியங்களை ஆக்கி தன்னைப் பதிவு செய்திருக்கிறார். இந்த மரபுகள் எல்லாம் நிறைந்ததே மருதமுனை மண்.

இங்கிருந்துதான் ஆசிரியம், இலக்கியம் என்ற இரு மரபுக்கும் ஆளானவராக தமிழாசிரியர் யூ.எல். இஸ்மாயில் அவர்கள் பேர் பெறுகிறார். இவர் 1917 ஆம் ஆண்டு பிறந்தவர். மருதமுனையின் மூத்த ஆசிரியர்களுள் ஒருவர். இவர்அந்தக் காலத்திலேயே நூலாக்கப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். இந்த நூல் சுமார் 1000 பிரதிகள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் பார்க்கிறபோது மருதமுனைக்கு இந்தப் பாக்களினால் நூலாக்குகிற பணி ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இதுவும் சின்னாலிம் அப்பாவிலிருந்துதான் தொடங்குகிறது.

இந்த நூலின் ஆசிரியர் யூ.எல். இஸ்மாயில் அவர்கள் இந்நூலுக்கு எழுதிய முகவுரை முக்கியமானது. இவரிடம் இஸ்லாமிய வரலாற்றையும் அறிவினையும் தமிழிலே பாடவேண்டுமென்ற ஆர்வம் மிகைத்திருந்தது. பண்டைய நூல்களுக்கு உரை எழுதுவதைக் கொண்டு நம்மவர்களின் தமிழறிவினைக் கண்டு வியந்து இந்நூலாசிரியர் உபாக்கியானந்தாதியை ஆக்கியிருக்கிறார்.

> "இஸ்லாமிய சரித்திரங்களை நாகரீகவுலகுக்கேற்றவாறு வெளியிடு
> மறிஞர்கட்கீதோர் தூண்டுகோலாயிருக்கு மென்றேயிதனை
> வெளியிடத்துணிந்தனேயன்றி வேறின்று."

என்று அவர் தம் முகவுரையில் குறிப்பிடுகிறார்.

உபாக்கியானம் என்பது கிளைக்கதை ஒன்றைக் குறிக்கும் சொல்லாகும். இங்கு முஹம்மது நபி அவர்களின் காலத்தில் நடந்த ஒரு சரித்திரத்தைக் கொண்டு 111 விருத்தங்களால் பாடப்பட்டதே உபாக்கியானந்தாதியாகும். இத்தலைப்பில் உண்டான, இந்நூலில் இதனோடு தோத்திரக் கீர்த்தனாமிதர்தமும் இணைக்கப் பட்டுள்ளது. இது 20 கீர்த்தனங்களால் பாடப்படது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் விரும்பப்படுகின்ற இராகம் என்பதால் அதனைப் பாடியதாகவும் இசையின்பம் உள்ளோர்க்கு மத சரித்திரங்களைக் கற்பிக்க கூடியதென்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேலும், இந்நூலாசிரியர் இந்நூலாக்கத்திற் கொண்டுள்ள நம்பிக்கையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "இப்புத்தகம் என்போன்ற சிறார்களிடையும், கல்வியிற்றேறாத பாமரரிடையேயுமுலவின், அன்னவாகத்தில் மதப்பற்றையும், இஸ்லாத்தின் மாண்பையும், சரித்திர அறிவையும் ஊன்றப்பதிக்குமெனும் நம்பிக்கையுடனேயே இதனை எழுதலானேன். குறைந்த காலத்துடன் பாடி வெளியிடப்பட்டமையின் குறைகளிலிருத்தலுங் கூடும்."

சுமார் 3000 இற்கும் மேற்பட்ட நூல்களின் வரலாற்றினைக் கொண்ட இஸ்லாமியத் தமிழிலக்கியம் 20ஆம் நூற்றாண்டின் முதற்காலப் பகுதியிலேதான் அதிகமாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். மிகக் கவனமாக இஸ்லாமியக்கருத்துக்களை அவர்கள் தமிழிலே இலக்கியமாகப் படைக்கிறபோது அது இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு மாறாதது என்பதனை மிகக் கவனமாக அவர்கள் பரீட்சித்திருக்கிறார்கள். அவ்வாறான ஒரு பரீட்சிப்பினை இந்நூலில் பின்வருமாறு கண்டுகொள்ள முடியும்.

"உபாக்கியான அந்தாதி, தோத்திரக்கீர்த்தனாமிர்தம் என்னுமிரு நூல்களிலும் கூறப்பட்டுள்ள விஷயங்கள் குர்ஆனுக்கும், ஹதீதுக்கும் முற்றும் நேர்பாடா யேயுள்ளனவென்று நான் உறுதி கூறுகின்றேன்" என மட்டக்களப்பு மௌலவி மாஸ்டர் எஸ்.வை. செய்யது முஹம்மது மௌலானா அவர்களால் எழுதப்பட்டது இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நூலின் அட்டையலேயே உலமாக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

மேலும் இக்கால நூலாக்கத்திலுள்ள சிறப்பு இந்நூலாக்கம் பரிசோதனை செய்யப்பட்டதான குறிப்பும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. மெட்ராஸ் வரகவி அ. சுப்ரமணிய பாரதியாரால் பார்வையிடப்பட்டது என்றும் இந்நூல் பேரறிஞரும் தனவந்தருமாகிய ஏ.ஒ.எம். சாலிஹ்லெப்பை ஹாஜியார் அவர்களின் தனோபகாரத்தால் ஆக்கப்பட்டது என்றும் நூலில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் மூலம் அறியமுடிகிறது. பிரம்பூர் வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதியாரவர்கள் இந்நூலுக்கான சாற்றுக்கவியைப் பாடியுள்ளார். ஆனால் இந்தத் தகவல் பின்னைய ஆய்வாளர்கள் சிலரால் மஹாகவி பாரதி எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது தவறென்று நினைக்கின்றேன். இவர் பிரம்பூரைச் சேர்ந்த வேறொரு பாரதி. தமிழிலக்கிய வரலாற்றில் எழுந்த காவியங்களையொட்டி பல கிளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் நிலவுவதுண்டு. அதேபோன்று சமய குரவர்கள் பற்றிய புராண கதைகளையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இஸ்லாமிய வரலாற்றிலும் இத்தகைய கிளைக்கதைகள் நிலவி இருக்கலாமென்பதிலே சந்தேகமில்லை. தமிழில் வந்த இலக்கியங்களைப் பார்த்து பரிச்சயப்பட்ட நமது புலவர்கள் அதேமாதிரியான பண்களை ஆக்கத் துணிந்திருக்கிறார்கள். சீறாப்புராணத்திலே மானுக்குப் பிணை நின்ற கதையொன்று சொல்லப்படுகிறது. அதேபோன்று இந்த உபாக்கியான அந்தாதியிலும் கூறப்படுகிற கதை ஒரு புனைந்துரைக்கப்பட்ட கிளைக் கதையாக இருக்க வேண்டும். அல்லது நாட்டார் செவி வழி பரவிய கதையாக இருக்க வேண்டும். இந்தக் கதையே இங்கு அந்தாதியாகி வந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தோத்திரகீர்த்தனாமிர்தம் நபியையும் அவரது தோற்றப் பொலிவையும் கொள்கைகளையும் புகழ்வதோடு மறுமை வாழ்க்கையைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. அண்ணலாரின் மகள் பாத்திமா பற்றியும் இறைஞானிகள் பற்றியும் பல பாடல்களும் இதில் கீர்த்தனைகளாக வந்திருக்கின்றன. இந்த வடிவங்களைக் கையாள்வதிலும் அவற்றைப் பாடுவதற்கான இசை வரன்முறையிலும் இப் பாடல்கள் குறிப்பிடத்தக்கன என்று கூறவேண்டும். இந்தச் செய்யுள்களை வாசிக்கின்ற போது இசையோடு பாட வேண்டும்போல் இருக்கிறது. இந்தப் பாடல்களிலுள்ள நயம் கருதியும் இதன் பழமை கருதியும் தன் தந்தையாரின் ஆற்றல் கருதியும் இந்நூலாசிரியரின் புதல்வர்களில் ஒருவர் இந்நூலை மீளப் பதிப்பிப்பது மகிழ்ச்சி தருகிறது.

இஸ்லாமியத் தமிழிலக்கியத்திற்குச் சொந்தமான - இஸ்லாமியத் தமிழிலக்கியத்தை இயக்க ரீதியாகத் தொடக்கி வைத்த மருதமுனையில் இருந்து மற்றுமோர் இஸ்லாமிய இலக்கிய வடிவமாக உபாக்கியானந்தாதி வெளிவந்தது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகும். இந்நூலை மீளப் பதிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் யூ.எல். இஸ்மாயில் அவர்களின் புதல்வர் பதுறுல் பௌஸ் அவர்களுக்கு என்றும் நமது ஆசிகள் உண்டு.

பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் ஓர் அறிமுகம்

மருதமுனை ஈன்றெடுத்த பொக்கிஷங்களில் ஒன்றான இஸ்மாயில் மரைக்கார் அதிபர் அவர்களால் 1939 ஆம் ஆண்டு எழுதப்பட்ட அருங்காவியமான உபாக்கியான அந்தாதி என்ற நூலினை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்துவதில் அயராது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் நூலாசிரியரின் புதல்வரும் இந்நூலின் பதிப்பாசிரியருமான ஐ.எம். வதுறுல் பௌஸ் அவர்களைப் பற்றி அறிமுக உரை ஒன்றினை எழுது வதனையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

ஐ.எம். வதுறுல் பௌஸ் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை கமு/ மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்றார். பாடசாலைக் காலங்களில் மருதமுனை கோல்ட்மைன்ட் இளைஞர் கழக தலைவர், செயலாளர் பதவிகளை அலங்கரித்து இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

தனது கல்வியினை முடித்துக்கொண்ட குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே இலங்கை துறைமுக அதிகார சபையில் இணைந்து கொண்டார். இக்காலப் பகுதியில் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்று சமூகக் கடமைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பேரலை அவலத்தின் போது நிர்க்கதியான 50 குடும்பங்களுக்கு ஆரம்ப உதவியாக 50 கூடாரங்களை மருதமுனை மசூர் மௌலானா மைதானத்தில் அமைக்க *IOM* ஊடாக நடவடிக்கை மேற்கொண்டார். அக்காலப் பகுதியில் ஷம்ஸ் மத்திய கல்லூரி மேற்கை நோக்கி நகர்ந்த போது அதே இடத்தில் அல்-மதீனா வித்தியாலயத்தை ஆரம்பிப்பதற்கும், அதன் அபிவிருத்திக்காக பாடு பவர்களில் ஒருவராகவும் இவர் திகழ்கின்றார்.

இயற்கையை அதிகம் இரசனை கொள்ளும் இவர் பொது இடங்கள், நிறுவனங்களில் நிழல் மரக்கன்றுகளை நாட்டி இயற்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கை களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். மேலும் மருதமுனை யுனிவேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பிரதித் தலைவராக இருந்து மருதமுனையின் விளையாட்டுத் துறைக்கும் தனது பூரண பங்கினை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறான பல்துறைசார்ந்த சமூக சிந்தனை கொண்ட சகோதரர் வதுறுல் பௌஸ் அவர்கள் இந்நூலினை மீள்பதிப்புச் செய்வதனூடாக தனது தந்தையின் முயற்சியின் பயனை தமிழ் ஆர்வலர்கள் அனுபவிப்பதற்கு துணை நின்றிருப்பதானது மருதமுனை வரலாற்றில் என்றும் நினைவுகூரத்தக்கதான ஒரு முயற்சியாகும்.

இது சார்ந்த முயற்சிகளை இவர் எதிர்காலத்திலும் தொடர எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு தேகாரோக்கியத்தையும், பொருளாதார பலத்தையும் அருள வேண்டும் என இறைவனை இருகரம் ஏந்துகின்றேன்.

**அல்-ஹாஜ். எஸ். அன்வர்தீன்**
B.A.(Hons), PGDP, M.A., SLPS - 1
திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்ட செயலகம், அம்பாறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பதிப்பின் இன்றியமையாமை

மருதமுனையில் உதித்த இஸ்லாமிய இலக்கியத்தில் முத்திரை பதித்த, தென்கிழக்கின் மூத்த புத்திஜீவிகளுள் ஒருவராக இலங்கிய யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் அவர்களினால் 1939 இல் வெளியிடப்பட்டதே உபாக்கியான அந்தாதி எனும் பாடல் தொகுதியாகும்.

இவர் கல்வித்துறையில் பல்வேறு படிகளில் தமது சேவையைத் தொடர்ந்து பெரிய வாத்தியார் என ஊரவர்களால் பெருமைப்படுத்தப்படும் பாக்கியத்தைப் பெற்றார். இவரின் அறிவும், ஆற்றல்களும், அனுபவங்களும் இளம் சமுதாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய அற்புதங்களாகும். இவர்தம் சிறப்பான இலக்கியப் பணியின் பெறுபேறாக நமது சந்ததிகளுக்கு விட்டுச்சென்ற அறிவுக் கருவூலங்களுள் ஒரு மகத்தான பாடல் தொகுதியான இந்நூல் இறைதூதர் முஹம்மது நபியவர்களின் காலத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய சரித்திரம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மேலும் இந்நூல் இஸ்லாமிய சமுதாயத்திற்கு கிடைக்கப் பெற்ற ஓர் அழியாச் செல்வமாகும்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் பண்டைய காலத்தில் ஆக்கப்பட்ட ஆக்கங்கள் யாவும் அரும்பொக்கிஷங்களாகும். அவ்வாறான ஒரு படைப்பாகிய உபாக்கியான அந்தாதியில் 1000 பிரதிகள் பிரசுரிக்கப்பட்டு அக்காலத்திலேயே அனைத்தும் விற்பனை செய்யப்பட்டது மிகவும் ஆச்சரியமான ஒரு விடயம். இருப்பினும் இந்த ஆக்கமானது இன்று எங்காவது பெறக்கூடியதாக இல்லை. அரிய இஸ்லாமிய தமிழ் இலக்கியப் படைப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ள இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகத்திற்குக் கூட இந்நூல் கிடைக்கப் பெறவில்லை. எனவே பண்டைய இலக்கியங்களானது மறைந்தும், மறந்தும் காணப்படுகின்ற இன்றைய காலத்திற்கு மத்தியில் அறிவுக்கும் ஆய்வுக்கும் பயன் படுத்தக்கூடிய வகையில் இந்நூலினை மீள்பதிப்பு செய்வது மிகவும் இன்றியமையாதது.

ஏறக்குறைய எட்டு தசாப்தங்களின் பின்னர் மீண்டும் இந்நூலினை மீள் பதிப்புச் செய்ய முன் வந்துள்ள இவரது இளைய புதல்வர் ஐ.எம். வதுறுல் பௌஸ் அவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர். இம் முயற்சியில் முன்னின்று இந் நூலின் மீள் பதிப்பினை வெளியிடுவதில் இவர் செலுத்திய ஆர்வம் போற்றுவதற்கு மாத்திரமல்ல பின்பற்றக் கூடியதுமான ஒன்றாகும்.

தற்காலத்தில் மிகவும் அரிதாக காணப்படுகின்ற சமயசார் இலக்கிய அறிவுக் கருவூலங்களை தனது இலக்கிய பணியில் படைத்த யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் (வாத்தியார் மூத்தப்பா) அவர்களுடைய பெயர் உலகுள்ள வரை நிலைத்து நிற்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் மறுமையில் ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தினை அருள வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**எம்.எம். மஷ்றூபா**

பதில் நூலகர்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய வாத்தியார் - இஸ்மாயீல் மரைக்கார் 1957 - 1962

1911 ஆம் ஆண்டு மருதமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையென ஜனனித்து, பல பரிமாணங்களைக் கடந்து, இன்று அல்-மனார் மத்திய கல்லூரி எனும் நாமத்துடன் இலங்கைத் தீவு முழுமைக்கும் தன் கல்விக் கதிர்களைப் பரப்பி பட்டொளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நமது பாடசாலை மருதமுனை மண்ணுக்கு இறைவன் அளித்த பெரும் பேறாகும். இத்தகைய உயர்நிலையை அல்-மனார் எனும் கலங்கரை விளக்கம் பெற்றுக் கொள்வதற்கு தம்மை உரமாக வழங்கி உழைத்த அதிபர்கள், ஆயிரக்கணக்கான மூவின ஆசிரிய/ ஆசிரியைகள், பௌதீக வளங்களை அவ்வப்போது வழங்கிய இப்பாடசாலைப் பெற்றோர்கள், பிரமுகர்கள் ஆகிய அனைவரும் தனித்தனியே பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டியோராவார். ஆயினும் அது நடைமுறைச் சாத்தியமற்றதால் அவர்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வோர் சந்தர்ப்பத்திலாவது அவர்களை நினைவு கூர்வது கடப்பாடு மிக்கதாகும்.

இந்த வகையில் இப்பாடசாலை மாணவர்களால் பெரிய வாத்தியார் (உருவத்திலும் கூட) எனக் கௌரவமாக அழைக்கப்பட்ட தலைமை ஆசிரியர் மர்ஹூம் யூ.எல். இஸ்மாயீல் மரைக்கார் அவர்களின் நூற்றாண்டு (1917 - 2017) ஜனன நிறைவை நினைவுகூரும் இச்சந்தர்ப்பத்தில், அன்னாரது கனிவுக்கும் கண்டிப்புக்கும் இலக்கான மாணவனாயிருந்த நான் இந்நினைவுக் குறிப்பை வரைவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இஸ்மாயில் மரைக்கார் அவர்கள் தூரநோக்கும் புத்தாக்கச் சிந்தனையும் கொண்டவர். நினைத்த கருமத்தை உடன் நிறைவேற்றும் வேகமும் விவேகமும் கொண்டவர். எக்கருமத்தை யார் யாரைக்கொண்டு செய்விக்கலாம் என்பதைத் துல்லியமாக நாடி பிடித்தறிந்து தன் சூட்சசுமமான அணுகுமுறையாலும் உபசரிப்பாலும் வசப்படுத்துவதில் வல்லவர். அவரது ஆழமும் வினோதமுமான அணுகுமுறைகள் பற்றி விபரிப்பதாயின் நினைவுக் குறிப்பாகிய இவ்வாக்கம் தன் வரையறையை மீறிவிடும். எனவே இப்பாடசாலைக்கு அன்னார் புரிந்த வினைத்திற னும் முன்னோடித் தன்மையும் கொண்ட சேவைப் பரப்பின் சில திவலைகளை தொட்டுத் தெறிக்க விழைகிறேன்.

மருதமுனை வரலாற்றில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியொன்று முதன் முதலாக தலைமையாசிரியர் இஸ்மாயீல் மரைக்கார் அவர் களின் முன்னோடிச் சிந்தனையின் விளைவாக 1958ல் நடைபெற்றது. இதற்கென ஆசிரியர்களும், மாணவர்களும் காபூல், கெய்றோ, கராச்சி எனும் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டனர். திணைக்கள வழிகாட்டலுக்கு அமைவான தட, கள விளையாட்டுக்களில் மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அப்போது ஆலையடி மைதானமென அழைக்கப்பட்டதும், தற்போது அல்-மனார் மகளிர் மற்றும் ஆரம்பப் பிரிவு அமைந்திருப்பதுமான மணல் வெளியில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. இது மருதமுனையின் முதலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல விளையாட்டுப் போட்டியாதலால் முழுக் கிராமமுமே திரண்டு வந்து பெரு விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தது. அத்துடன் இப்பாடசாலையில் அப்போது கற்று வந்த பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடி, பெரிய நீலாவணை, துறைநீலாவணை, கல்லாறு, அன்னமலை, நாவிதன்வெளி ஆகிய அயற்கிராம மாணவர்களும் அவர் தம் பெற்றோர்களும் இந்நிகழ்வில் பங்கு பற்றிச் சிறப் பித்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளில் திறமை காட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. கூடிய வெற்றிகளைப் பெற்று சிரேஷ்ட, மத்திய, கனிஷ்ட பிரிவுகளில் *Champion* களாகத் தெரிவான மர்ஹூம் *M.P.* முகைதீன் (ஆசிரியர்), மர்ஹூம் லைப்றறி மஜீது மற்றும் பீர் முகம்மது (அதிபர்) ஆகியோருக்கு அப்போ தைய வட்டாரக் கல்வி அதிகாரி *(CEO)* ஐறாகூல்ட் அம்மையார் வெள்ளிக் கிண்ணங்கள் வழங்கிப் பாராட்டினார்.

அதே ஆண்டில் (1958) கல்முனை வட்டார விளையாட்டுப் போட்டி பாத்திமா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. தற்போதைய கல்முனைத் தொகுதியினுள் அடங்கிய பாடசாலைகள் அனைத்தும் அதில் பங்குபற்றின. அங்கு அதிக வெற்றிகளைப் பெற்று 1ம் இடத்தைச் சுவீகரித்துக் கொண்டது நமது பாடசாலை. அதனைக் கொண்டாடும் வகையில் மேள தாள நாதஸ்வர வாத்தியங்களுடன் ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலமாக அழை த்து வரப்பட்டனர். இதற்கான ஒழுங்குகளை நமது பாடசாலையின் தமிழர் ஆசிரியர் இருவர் தமது சொந்தச் செலவில் செய்து தந்தனர். வட்டாரப் போ ட்டிகளில் வெற்றி பெற்றிருந்த எம்மில் சிலர் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற மாகாண விளையாட்டுப் போட்டியிலும் பங்கேற்று வெற்றிகளை ஈட்டியிருந்தோம்.

மேலும், தலைமையாசிரியர் அவர்களின் ஊக்குவிப்பின் பேரில் பாடசாலை வளவினுள் இல்ல அடிப்படையிலான பயிர்ச்செய்கைப் போட்டிகள் நடை பெற்று, காய்கறி அறுவடை விழாவும் நடைபெற்றது. இஸ்மாயீல் மரைக்கார் / தலைமையாசான் அவர்களின் முன்னோடி முயற்சியும் துணிச்சலும் மிக்க சாதனைகளுள் முக்கியமானதாகக் கருதப்படுவது, நமது பாடசாலை 1959 ஆம் ஆண்டு மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவாகும். இது 13 நாட்களைக் கொண்டதும் 9 மாகாணங்களைத் தழுவியதுமான அகில இலங்கைச் சுற்றுலா வாகும். இதில் சுமார் 50 மாணவர்களும் 08 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இங்கு நீண்ட நாட்களைக் கொண்ட அகில இலங்கை கல்விச் சுற்றுலா ஒன்றை இப்பிரதேசத்திலுள்ள எப்பாடசாலையும் இன்று வரை மேற்கொண்டதில் லையென துணிந்து கூறலாம்.

இப்பிரயாணத்திற்குச் சிகரம் வைத்த சம்பவமாக 7359 அடி உயரமானதும், சிவனொளிபாத மலை / பாவா ஆதம் மலை / *Adam's Peak* / ஸ்ரீபாத மலை எனப் பலராலும் அழைக்கப்படுகின்றதுமான மலைச் சிகரத்தை அடைந்து அங்கிருந்து காண்பதற்கரிய சூரியோதயக் காட்சியைத் தரிசித்தமை அமைந்தது. இஸ்மாயீல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரைக்கார் த. ஆ. அவர்களின் சேவைப் பாதையில் மற்றுமொரு மைல் கல்லாய் அமைந்தது. 1960 இன் முற்கூற்றில் எம் பாடசாலையில் நடாத்தப்பட்ட கலை, கைப்பணி, விஞ்ஞானப் பொருட்காட்சியாகும். இங்கு ஆசிரியர்களின் வழி காட்டலில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட கலைப் பொருட்களும், கணித / விஞ்ஞான உபகரணங்களும், மாயக் கண்ணாடி, பேசும் தலை போன்ற வேடிக்கை விநோத அம்சங்களும் இடம்பெற்றன. அது மட்டுமன்றி, ஊர் மக்களின் கை வண்ணத்தில் உருவான பன், பிரம்பு, மரம் சார்ந்த கைவினைப் பொருட்கள், நம் கிராமத்தின் அடையாளத்தை நாடளாவிய ரீதியில் பிரபலப் படுத்திய கைத்தறி, நிலையடி, வாப்றோல் போன்ற கருவிகளும், நெசவு உற்பத்தி களும் கூட காட்சிப்படுத்தப்பட்டன. மூன்று தினங்கள் இரவு பகலாக இடம்பெற்ற இக்காட்சியைப் பார்வையிட அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த அனேக பாடசாலைகளும் பொது மக்களும் வருகை தந்தனர்.

பாடசாலை புறக்கிருத்தியப் பணிகளில் ஆர்வம் கொண்டிருந்த தலைமையாசிரியர் அவர்கள் கவர்ச்சிகரமான தலைப்புக்களில் பேச்சுப் போட்டிகளையும், விவாதப் போட்டிகளையும் நடாத்த தூண்டுதலளித்தார். அத்தகையவற்றுள், 'நம்மை விட நம் முன்னோர் சிறந்தவர்களா? அல்லது நம் முன்னோரை விட நாம் சிறந்தவர்களா?' எனும் மகுடத்தில் நடைபெற்ற விவாதப் போட்டியில் *(debate)* மாணவர்களாகிய நாம் ஆற்றிய ஆக்ரோஷமான விவாத வசனங்கள் இன்றும் நினைவில் நின்று ஆட்சி புரிகின்றன. மேலும், பாடசாலையில் மாதிரிப் பாராளுமன்றம் அமைத்து அரசியல், குடியியல், கட்சியமைப்பு, தேர்தல் நடைமுறைகள், சட்டவாக்கம், அரசியலாளர்களின் கடமைகள், உரிமைகள், பதவிப் படி முறைகள் போன்ற பரந்துபட்ட எண்ணக் கருக்களைச் செயற்பாட்டு *(practical)* ரீதியாக கற்றுக் கொள்வதற்கு களம் அமைத்துத் தரப்பட்டமை இஸ்மாயீல் மரைக்கார் அவர்களின் ஆழிய கற்றல், கற்பித்தல் உத்திகளு க்கு முத்திரை பதித்த முயற்சிகளாகும். அவரது காலத்தில் பயின்ற மாணவர் களின் அநேகர் சிறந்த பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், ஆசிரியர், அதிபர்களாகவும், நிர்வாகிகளாகவும் மிளிர்ந்தமை இதற்குச் சான்று.

இங்கு குறிப்பிட்ட விடயங்கள் மேலார்ந்த பார்வையில் இன்றைய அல்-மனார் மத்திய கல்லூரியின் அரை நூற்றாண்டுப் பருவத்தை ஒட்டிய சம்பவத் திரட்டுப் போல் தென்பட்டாலும் அச்சம்பவங்களின் அச்சாணியாகவும் இயங்கு நராகவும் திகழ்ந்தவர் அந்நாளைய தலைமையாசிரியர் மர்ஹூம் யூ.எல். இஸ்மாயீல் மரைக்காரே என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது. குறுகிய காலப் பகுதியில் அவராற்றிய சேவைகள் இன்னும் பலவிருப்பினும் விரிவஞ்சி நிறைவு செய்கிறேன். அன்னாரின் பணிகளை ஏற்று அவருக்கு நற்கூலி வழங்குமாறு சர்வலோக ரட்சகனைப் பிரார்த்திக்கிறேன்.

அல்-ஹாஜ். எஸ்.எம். பீர் முஹம்மட்
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுபெற்ற அதிபர்,
மருதமுனை.

உசாத்துணைப் ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர் யூ.எல். இஸ்மாயில்

மருதமுனையின் கலை இலக்கிய அறிவியற் செயற்பாடுகளை ஆராயும்போது, இலைமறை காயாக மறைந்திருந்து இயன்றளவு இலக்கியச் சேவை செய்து மறைந்துபோன ஒருவரை நாம் கண்டு ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. எவ்விதமான சலசலப்பும் இல்லாத ஜனாப். யூ.எல். இஸ்மாயில் என்பவரே அவர். 1917.10.09 ஆம் நாள் மருதமுனையில் பிறந்த யூ.எல். இஸ்மாயில் அவர்கள் மருதமுனையின் வடக்குப் பாடசாலை என்று பெயர் பெற்றிருந்த, தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றவர். 1944, 1945, 1946 ஆகிய காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலா சா லையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றார். இவர் கல்கின்னை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தமிழ் ஆசிரியராகக் கடமைபுரிந்தார். பின்பு, மருதமுனை வடக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1962 ஆம் ஆண்டு வரை அதிபராகவும் கடமையாற்றினார்.

தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன், தமிழ்க் கவிதைகளில் மிகவும் ஈடுபாடு கொண்ட திறன்மிகு கவிஞராகவும் திகழ்ந்தார் என்பதற்கு இவரினால் பாடப் பட்ட பல கவிதைகள் சான்று பகர்கின்றன. இவரது கவிதைகள் முழு வதும்
நூலுருப்பெறாது போனாலும், இஸ்லாமிய நன்னெறிகளையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளையும், நடைமுறைகளையும், நான்கு கலிபாக்களினதும் பண்புகள், நடைமுறைகளையும், அன்னை பாத்திமா நாயகி, அன்னை ஆயிஷா போன்ற ஏனையோர்களினதும் சிறப்பம்சங்களைச் சித்தி ரித்துக் காட்டுவதுடன் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்வன போன்ற விடயங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. இவர் ‘உபாக்கியான அந்தாதி’ என்ற பெயரில் ஒரு அந்தாதியை வெளியிட்டுள்ளார். அத்துடன் ‘முஹிம்மா த்துல் முஸ்லிமீன்’ என்ற ஒரு நூலையும், ‘நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பலதார மணத்தின் காரணங்கள் என்ற ஒரு நூலையும் வெளியிட்டுத் தனக்கும் தனது தாய் மருதமுனைக்கும் புகழ்தேடித் தந்துள்ளார்.

### உபாக்கியான அந்தாதி :

கல்கின்னை அரசினர் பாடசாலையில் தமிழாசிரியராகக் கடமை புரிந்தபோது யூ.எல். இஸ்மாயில் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட உபாக்கியான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாதி (தோத்திரக் கீர்த்தனமிர்தமும் இணைக்கப்பட்டது.) 42 பக்கங்களைக் கொண்டதும், 1/8 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்டதுமாகும். இது 1939 ஆம் ஆண்டில் 1000 பிரதிகளாக வெளிவந்துள்ளது. இதனை வெளியிட பேரறிஞரும், தனவந்தருமாகிய ஏ.ஓ.எம். சாலிஹூ லெப்பை ஹாஜியார் நிதியுதவி செய்துள்ளார்கள். அத்துடன் உலமா சபையின் அங்கீகாரம் பெற்று, மாத்தளை அனுலா அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது.

ஜடாவள்ளவர், மாருதி விஜயம், பரதன், நந்தனார், பகவற்கீதை வசனம் முதலிய பல நூல்களின் ஆசிரியராகிய சென்னை பிரம்பூர் வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதியார் அவர்களால் சாற்றுக்கவி பாடப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக வுள்ளது. இலங்கையில் - மருதமுனையில் எழுந்த ஓர் அந்தாதிக்கு இந்தியா விலிருந்து ஒரு கவிஞரால் சாற்றுக்கவி பாடப்பட்ட முதலாவது புத்தகம் என்ற பெருமையும் இதனையே சார்ந்ததாகும்.

அகவற்பாவினால் பாடப்பட்ட சாற்றுக்கவியில் ஒரு பகுதி வருமாறு :

“ஒன்பொருள் காட்டும் உபாக்கியான
அந்தாதி யெனும் சிந்தாமணியும்
கீர்த்திசேர் தோத்திரக் கீர்த்தனாமிர்தமும்
ஆகுமாலி வைதர ஆதாரங்கொண்டவன்
விளைநிர் மருதமுனையெனு நற்பதி
மேவும் யூ.எல். இஸ்மாயீ லெனும்
தண்டமிழ் இன்பம் சந்தம் பருகும்
தனிப்பெரும் பேறுகள் சதுரன்றானே.”

உபாக்கியான அந்தாதி என்ற பெயரில் மூன்று பகுதிகளைக் கொண்டு இந்நூல் காணப்படுகின்றது.

1. உபாக்கியான அந்தாதிப் பாடல்கள்
2. தோத்திரக் கீர்த்தனாமிர்தம் 3. கீர்த்தனைகள்

1. உபாக்கியான அந்தாதிப் பாடல்கள் :

உபாக்கியான அந்தாதியின் பாடல்களைப் பார்வைக்குள் மடக்குகின்ற போது முதலில் படுவது வெண்பாவிலான ஒரு காப்புச் செய்யுள். இதனை அடுத்துக் கட்டளைக் கலித்துறையில் மூன்று பாடல்களும், அதன்பின் ‘நூன்முகம்’ அறுசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தில் ஏழு பாக்களும், எழுசீர் கழிநெடிலடியா சிரிய விருத்தத்தில் மூன்று பாடல்களும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடை முறைகளும், செயற்பாடுகளும், கலீபாக்களின் நடைமுறைகளும் செயற் பாடுகளும் இஸ்லாமிய உலகம் முழுவதும் பரவிவர வேண்டும் என்ற எண்ண த்தில் அதற்குத் தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதற் காக அந்தாதி இலக்கணத்திற்கு அமைவாக பல்வேறு சந்தங்களில் கவிதைகளைத் தொடுத்துச் சென்றிருப்பதைக் காண முடியும். தமிழ் இலக்கியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாதியின் இலக்கணத்தைப் பார்க்கும்போது, 'எச்சொல்லில் பாடல் ஆரம் பித்ததோ அச்சொல்லில் முடிவுறக் கூடியதாகவும், ஒரு அடியின் முடிவானது அடுத்துவரும் அடியின் ஆரம்பமாகவும் காணப்படல் வேண்டும்.' இவ்வகை களில் அந்தாதிப் பாடல்களைப் பாடுவது தமிழ் இலக்கியத்தில், இலக்கணத்தில், யாப்பியலில் மிகவும் துறைபோகக் கற்றவர்களுக்கும், ஆழ்ந்த அறிவுடை யவர்களுக்குமே கைவரக்கூடியதாகும். இத்தகைய கடினமான அந்தாதி அமைப்பில் **111** பாடல்களைத் தொடர்ந்து பாடியிருக்கின்றார் என்றால் அவரது தமிழறிவு போற்றத்தக்கதுதான்.

பல்வேறு வகையாகவும் வாழ்த்துப் பாடிவந்து, 'வாழ்க மாமதுரஞ் செறிமா-முனை' என்று மருதமுனையை ஏத்தி, வாழ்த்திச் செல்வது அவர் பிறந்த தாய்மண் மீது வைத்திருந்த தூய அன்பை வெளிப்படுத்துகின்றது.

**2. தோத்திரக் கீர்த்தனாமிர்தம் :**

முத்தரணியும் படைத்து, மூரிமிகுமோறாவாய்
முத்தரணியா யிலங்குமுன் னவனாய் - இத்தரணி
பத்தரையுந் தீயரையும் பண்புடனே யாணண்டறாளும்
கத்தவைனென் கவிக்கு காப்பு.

என்று காப்பு வெண்பாவுடன் ஆரம்பித்து, கட்டளைக் கலித்துறையில் இரண்டு பாட்டுக்களும், எழுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தத்தில் இரண்டு பாடல்களும், எண்சீர்கழி நெடிலாயாசிரிய விருத்தத்தில் இரண்டு பாடல்களுமாக மொத்தம் ஏழு பாடல்களுடன் தனது தோத்திரக் கீர்த்தனாமிர்தத்தை முடிக்கின்றார்.

**3. கீர்த்தனைகள் :**

பல்வேறு பாடல்களின் மெட்டுக்களில், பல்வேறு வகையில் இருபது பாடல்களைப் பாடியுள்ள புலவர் யூ.எல். இஸ்மாயில் அவர்கள், இதன் முதலாம் பாடலைப் பின்வருமாறு அமைக்கின்றார்.

'நல்வாக்கு நீ கொடடி' என்னும் இராகத்தில்
'நான்கவிகள் பாடிவர' என்று பாடுகின்றார்.

தனது கவிவளத்தைப் பெருக்கிக்கொள்ள வரம் கேட்டு நிற்கின்ற பாடலுடன் ஆரம்பித்து, மெட்டுகளுக்கேற்ப பல பாடல்களைப் பாடிப்போகிறார். இவ்வாறு இவர் பாடுவதற்கு, இவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட நல்ல பாடல்களுக்கு, அவற்றின் மெட்டுக்கள் மாறுபடாமல் பாடல்கள் இயற்றிப்பாடும் வழக்கம் காணப்பட்டதே காரணமாகும்.

இப்புலவர் தொடர்ந்து பாடல்கள் எழுதுவதை நிறுத்தியதினால் அவருக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. நமக்கே பாரிய நஷ்டம் என்பதனை கற்றோர் அறிவர். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து ஆண்டுகள்
# அல்–மனாரை அலங்கரித்த அதிபர்

மருதமுனையின் பூர்வீகம் 500 ஆண்டுகளைத் தாண்டிவிட்ட நிலையில், 1790 களில் சின்னாலிமப்பா என்ற பெருந்தகை இந்த மண்ணில் பிறந்தார்கள். அவரது தந்தை தென்னிந்தியாவைச் சேர்ந்த செய்கு இப்றாகிம் லெப்பை ஆலிம் ஆவார். அக்காலத்தில் நமது கிராமத்தில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு வசதிகள் இல்லா த காரணத்தினால் தனது பிள்ளையை தென்னிந்தியாவிற்கே அனுப்பி தமிழ்க் கல்வியையும், மார்க்கக் கல்வியையும் துறைபோகக் கற்பித்தார்.

சின்னாலிமப்பாவின் இயற்பெயர் மீராலெப்பை ஆலிம் ஆகும். ஆலிமாகி வந்தார். மா ர்க்கப் போதனையில் ஈடுபட்டார். அப்போது ஞானரை வென்றான் பாடல்களைப் பாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்துடன் தன் சொந்த வயலில் வாடிய வேளாண்மைப் பயிர்களுக்காக மழை வேண்டி மழைக்காவியம் பாடி மழை பெற்று அதிலும் வெற்றி கண்டார். இந்தப் பாடல்களை ஆழமா கப் பார்க்கும் போது சின்னா லிமப்பாவின் கல்வி யறிவும் மார்க்க ஞானமும் எமக்கு நன்கு புலனாகும். எனவே இவர்தான் மருதமுனையின் முதல் கல்விமா னும் அறிஞரும் கல்வியியலாளரும் எனக் கொள்ளலாம். மருதமுனையின் கல்வி வரலாற்றில் 1911 ஆம் ஆண்டு ஒரு முதல் மைல் கல்லாகும். அந்த ஆண்டில்தான் மருதமுனையின் முதல் முறையாகப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பிரதிபலனாக கிராமத்தின் கல்வியியலாளர்களாகவும், ஆசிரியர், அதிபர் களாகவும் பலர் உருவானார்கள். அதில் புலவர்மணி ஷரிபுத்தீன் ஹாஜியார் முதல் பத்து ஆசிரியர்களுள் யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் அவர்களும் அடங்குகி றார்கள். இங்கு அன்னாரைப்பற்றி சில குறிப்புக்களை பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஹலறல் மௌத் என்னும் எமன் நாட்டி லிருந்து இஸ்லாமிய தக்வா பணி நோக்கமாக அஸ்ஸெய்யித் உத்மான் அல் அஹிதலீ மௌலானா என்னும் பெரியார் இலங்கைத் திருநாட்டை வந்தடைந் தார்கள். அன்னார் எமது கிராமமான மருதமுனை என்னும் புண்ணிய பூமியை வதிவிட மாகத் தேர்ந்து கொண்டார்கள். அந்தமகான் யூ.எல். இஸ்மாயில் மரைக்காரின் ஒன்று விட்ட உம்மாவா கிய புன்னியவதியைத் திருமணம் முடித்து வாழ்ந்தார்கள். அஸ்ஸெய்யித் ஐதுறுஸ் மௌலானா அவர்கள் அவர்களுக்குத் தவப் புதல்வனாகப் பிறந்தார்கள். ஐதுறுஸ் மௌலானா அவர்கள் இஸ்மாயீல் மரைக்கார் அவர்களுக்கு ஒன்றுவிட்ட தாய் மாமாவாக இருந்தார்கள். இப்ப டியான ஒரு கண்ணியமானன குடும்பப் பின்னணியைக் கொண்டவர்தான் இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள் 1917.10.09 இல் (இற்றைக்கு 100 ஆண்டுகளு க்கு முன்) கனவான் உதுமாலெப்பை அவர்களுக்கு மகனாகப் பிறந்தார்கள். சிறு வயதிலேயே அக்காலத்தில் கல்வியைக் கற்பதில் ஆர்வமுடையவராக இருந்தா ர்கள். மார்க்கக் கல்வியை மர்ஹூம் செய்யித் அப்துல் காதிர் மௌலானா அவர்களிடம் கற்றுத் தேர்ந்தார்கள். தமிழ்க் கல்வியை கற்க அச்சம் கொண்டிருந்த அக்காலத்தில் அல்-மனார் மத்திய கல்லூரியில் சேர்ந்து தமிழ்க் கல்வியை முடித்தார்கள்.

பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்து பின்னர் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1944, 1945, 1946 ஆம் ஆண்டுகளில் ஆசிரியப்பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்கள். அதன் பின்னர் மலைநாட்டில் கல்கின்னையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம் பெற்றார். அங்கு தனது கற்பித்தல் திறமையினாலும் தமிழ் மொழிப் புலமையினாலும் ஊர்மக்களால் கவரப்பட்டார்.

தனது தமிழ்ப் புலமை காரணமாக பல இலக்கியப் படைப்புக்களை இவர் செய்து ள்ளார். இவர் மீது கொண்ட அதிக கௌரவமும் நம்பிக்கையும் காரணமாக கல்கின்னைப் பெரு மக்கள் இவருடைய ஆக்கங்களை அச்சுவாகனமேற்றி நூ லுருவாக் கத் தாராளமாகப் பொருளுதவிகளை வழங்கியுள்ளார்கள். அம்மக்கள் செய்த பொருளுதவிகளை இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள் நன்றியுணர்வுடன் பாராட்டி தன் சொந்தக் கையெழுத்தில் குறிப் பெழுதி வைத்துள்ளார்கள்.

அந்தவகையில், உபாக்கியான அந்தாதி ஏ.ஓ.எம். ஸாலிஹ் லெப்பை ஹாஜியாரின் பண உதவியாலும், முஹிம்மாத்துல் முஸ்லிமீன் எஸ்.எம். ஹூசைன் லெப்பை ஆராச்சியாரி ன் பண உதவியாலும், முனபிகாத்தே முஜீப் கல்ஹின்னை ஜமாஅத் தாரின் பொருளுத வியினாலும் அச்சிட்டு வெளியிடப்பட்டன என்பது அந்தக் குறிப்பு. இவரது இலக் கியப் படைப்புக்களை ஆராய்ந்து அவரது திறமைகளை நன்குணர்ந்த கவிஞர் மர்ஹூம்ஈழக்குயில் இத்ரீஸ் (கணக்காளர்) அவர்கள் அன்னாரைப் புலவர் யூ.எல். இஸ்மாயீல் எனப் பெயரிட்டுப் பாராட்டியுள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் நமது பகுதியிலுள்ள முதற்தர பாடசாலைகளி லிருந்து S.S.C. (= G.C.E.) பரீட்சையில் ஆண்டுதோறும் 4, 5 பேர்தான் சித்தியடைந்தார்கள். அதிலும் நமதூரில் 1, 2 பேர்தான். உதாரணமாக அல்-மனாரில் 1958 டிசம்பரில் நான் மட்டுமே S.S.C. பரீட்சைப் பெறுபேறு வந்து விட்டால் கல்விக் காரியாலயத்துக்கு அதிபர்கள் சென்று எனக்கு இன்னாரை ஆசிரியராகத் தாருங்கள், மற்றவர் என க்கு இன்னாரை ஆசிரியராகத் தாருங்கள் என்று கேட்பார்கள். இரண்டு வாரங்களுக்குள் ஒரு நேர்முகப் பரீட்சை, உடனே நியமனம். இப்படி ஆசிரியர்களுக்கு மௌசான காலம். இப் படியாக காலகட்டத்தில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு எப்படி மௌஸூ இரு ந்திருக்கும் என எண்ணிப் பாருங்கள். போட்டிக்கு ஆளில்லை. அதனால் இஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாரின் மருமகன் பை. ஆதம்பாவா விதானையார் தனது மூத்த மகளுக்கு இஸ்மாயீல் மரைக்கார் ஆசிரியர்கள் அவர்களை மாப்பிள்ளையாக எடுத்துக் கொண்டார்.

வெளி மாவட்டங்களில் உதவி ஆசிரியராகவும், அதிபராகவும் பல வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருந்த இஸ்மாயீல் மரைக்கார் அதிபர் அவர்கள் தனது சொந்த வலயமான கல்முனைப் பிரதேசத்துக்கு மாற்றலாகி வந்து சேவை செய்ய விரும்பினார்கள். அந்த வகையில் 1957 ஆம் ஆண்டு முற்பகுதியில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கு தலைமை ஆசிரியராக மாற்றம் பெற்று வந்தார்கள். அந்த நேரத்தில் புலவர்மணி ஷரிபுத்தீன் ஹாஜியார் அவர்களே அல்-மனார் மத்திய கல்லூரிக்கு அதிபராக இருந்தார்கள். இஸ்மாயீல் மரைக்கார் அதிபரானார். 1957 ஆம் ஆண்டு பெரும் வெள்ளமும் வந்தது. பாடசாலைக் கல்விப் போக்கில் வீழ்ச்சி ஏற்பட்டு 1959 ஆம் ஆண்டில் அதிபர் இஸ்மாயீல் மரைக்கார் தலைமையில் அல்-மனார் எல்லா வகையிலும் முன்னேற்றம் கண்டது எனலாம்.

அதிபர் அவர்கள் அரசியல் வாதிகளையும் மேலதிகாரிகளையும் கவர்ந்து பாடசாலைக்குத் தேவையான வளங்களைத் தேடிக் கொள்வதில் வல்லவராக இருந்தார். அந்த வகையில் 1959 இல் நியமனம் பெற்ற இளம் ஆசிரியர்கள் பலரை (நான் உட்பட) உதவி ஆசிரியர்களாக பெற்றுக் கொண்டார். கடந்த கால ஆசிரியர் பற்றாக்குறை பெருமட்டாக நீங்கியது. இக்காலத்தில் 1959 களில் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.எம். இஸ்மாயீல் அவர்கள் இவருக்கு உதவி அதிபராகக் கிடைத்தார். அவர் இவருக்கு மிகவும் பக்கபலமாக இருந்து நல்ல பல சேவைகளைச் செய்தார். இப்பாடசாலை வரலாற்றில் ஒரே நேரத்தில் எட்டு இளம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதும், பெருந்தொகை கொண்ட ஆசிரியர் குழு ஒன்று அமையப் பெற்றதும் இந்த ஆண்டில்தான் என அப்போது பேசிக்கொண்டார்கள். அதனால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஒரு உத்வேகம் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.


அந்தவகையில், இப்பாடசாலை வரலாற்றில் 14 நாட்கள் கொண்ட அகில இலங்கை கல்விச்சுற்றுலா முதன்முதலாக ஏற்பாடு செய்யப்பட்டது. தொலைபேசி வசதிகள் இல்லாத காலம். நீண்ட தூர பஸ் சேவைகள் இல்லாத காலம். மாணவர்கள் மட்டக் களப்பு, கொழும்புக்கே சென்றிராத காலம். இப்படியான காலகட்டத்தில் 13 நாட்கள் எவ்வித இடையூறுகளுமின்றி இந்தச் சுற்றுலா வெற்றிகரமாக நடந்து முடிந்தது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களுமாக சுமார் 50 பேர் இதில் கலந்து கொண்டனர். இத்திட்டத்தை வகுத்து சுற்றுலாப் பாதைப் படத்தையும் தன் கையாலேயே வரைந்து அதற்கான கால

அட்டவணையையும் தயாரித்தவர் இஸ்மாயீல் மரைக்கார் அதிபர் அவர்களே. அந்தச் சுற்றுலாப் பாதைப் படமும் கால அட்டவணையும் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா/மருதமுனை அரசினர் முஸ்லிம் வித்தியாலயப் பிரயாணக் கோஷ்டியின் அகில இலங்கைச் சுற்றுப் பிரயாண பாதைப் படம்: 1959.




MUSLIM VIDYALAYA, MARUTHAMUNAI, KALMUNAI. H.M.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

முஸ்லிம் வித்தியாலயம்.

மருதமுனை வடக்கு.

கல்விசம்பந்தமான சுற்றுப்பிரயாணம். காலம்: 11.4.59 — 23.4.59.

| திகதி | நேரம். | புறப்படுமிடம் | சேருமிடம் | தூரம் (மைல்) | பார்க்குமிடங்கள். |
| --- | --- | --- | --- | --- | --- |
| 11.4.59 சனி. | மு.ப. 9.00 – மு.ப. 11.00<br>பி.ப. 1.30 – பி.ப. 5.30 | மருதமுனை.<br>வாழைச்சேனை. | வாழைச்சேனை<br>கந்தளாய் | 48<br>107 | காகிதத்தொழிற்சாலை<br>சீனித்தொழிற்சாலை |
| 12.4.59 ஞாயிறு | மு.ப. 9.00 – 11.00<br>பி.ப. 1.00 – 1.30<br>பி.ப. 2.30 – 5.30 | [illegible]<br>ஹக்கல<br>நுவரெலியா | ஹக்கல<br>நுவரெலியா<br>மஸ்கெலியா | 29<br>6<br>51 | ஹக்கல பூந்தோட்டம்.<br>நுவரெலியா பட்டணம்<br>[illegible] மலை.<br>[illegible] |
| 13.4.59 திங்கள் | மு.ப. 10.00 – 11.00<br>பி.ப. 1.30 – 5.00 | மஸ்கெலியா<br>நோட்டன்பிரிஜ் | நோட்டன்பிரிஜ்<br>கண்டி.<br>(திங்கள், ஒய்வு) | 12<br>40 | [illegible] நோட்டன்பிரிஜ்.<br>[illegible], [illegible]<br>[illegible]<br>[illegible]<br>[illegible]<br>பேராதனைப்பூந்தோட்டம்.<br>[illegible] |
| 14.4.59 செவ்வாய் | பி.ப. 4.00 – 6.30 | கண்டி. | டம்புள்ளை | 35 | டம்புள்ளை விகாரை |
| 15.4.59 புதன் | மு.ப. 8.00 – 9.00<br>மு.ப. 10.30 – 12.00<br>பி.ப. 2.00 – 6.00 | டம்புள்ளை<br>சீகிரியா<br>பொலன்னறுவை. | சீகிரியா<br>பொலன்னறுவை<br>திருகோணமலை | 12<br>48<br>90 | சீகிரியா மலை.<br>புராதன கட்டடங்கள், பராக்கிரம [illegible]<br>[illegible]<br>[illegible] |
| 16.4.59 வியாழன் | மு.ப. 10.30 – 1.00<br>பி.ப. 3.00 – 9.00 | திருகோணமலை<br>திருகோணமலை | வீதிந்தலை<br>யாழ்ப்பாணம். | 47<br>127 | [illegible] புராதனக்கட்டடம்<br>[illegible]<br>[illegible]<br>[illegible]<br>[illegible] |
| 17.4.59 வெள்ளி | பி.ப. 4.00 – 10.00 | யாழ்ப்பாணம் | அநுராதபுரம். | 142 | புராதனக் கட்டடங்கள். |
| 18.4.59 சனி. | மு.ப. 10.00 – 11.30<br>பி.ப. 3.00 – 5.30 | அநுராதபுரம்<br>சிலாபத்து | சிலாபத்து<br>புத்தளம். | 36<br>45 | [illegible]<br>[illegible] (புத்தளம் [illegible])<br>உப்பளம். |
| 19.4.59 ஞாயிறு | மு.ப. 9.00 – 10.00<br>மு.ப. 10.00 – 11.00<br>பி.ப. 12.30 – 1.30 | புத்தளம்<br>சிலாபம்<br>நீர்கொழும்பு. | சிலாபம்<br>நீர்கொழும்பு.<br>கொழும்பு.<br>(ஞாயிறு, [illegible]) | 33<br>22<br>23 | முத்துக்குளித்தல்<br>விமான நிலையம்<br>[illegible]<br>[illegible]<br>[illegible] |
| 20.4.59 திங்கள் | | | [illegible] | | [illegible] |
| 21.4.59 செவ். | பி.ப. 2.00 – 3.30<br>பி.ப. 4.30 – 7.30 | கொழும்பு.<br>அளுத்கம. | அளுத்கம.<br>காலி. | 30<br>42 | [illegible]<br>[illegible]<br>[illegible] |
| 22.4.59 புதன் | மு.ப. 10.30 – 12.00<br>பி.ப. 1.00 – 4.30 | காலி.<br>மாத்தறை | மாத்தறை.<br>கதிர்காமம். | 33<br>75 | [illegible]<br>[illegible] |
| 23.4.59 வியா. | மு.ப. 7.00 – 9.30<br>மு.ப. 11.00 – 12.30<br>பி.ப. 1.30 – 4.30 | கதிர்காமம்<br>[illegible]<br>[illegible] | [illegible]<br>[illegible]<br>மருதமுனை. | [illegible]<br>36<br>82 | [illegible]<br>[illegible] |

## இரவில் தங்குமிடங்கள்.

11.4.59 அரசினர் முஸ்லிம் பாடசாலை, [illegible].
12.4.59 [illegible], மஸ்கெலியா.
13.4.59 அரசினர் முஸ்லிம் பாடசாலை, கட்டுகஸ்தோட்டை, கண்டி.
14.4.59 அரசினர் [illegible] பாடசாலை, டம்புள்ளை.
15.4.59 „ [illegible] மகாவித்தியாலயம் - திருகோணமலை
16.4.59 [illegible] கல்லூரி, யாழ்ப்பாணம்.
17.4.59 அரசினர் மத்திய கல்லூரி, அநுராதபுரம்.
18.4.59 „ முஸ்லிம் பாடசாலை, புத்தளம்.
19.4.59 „ முஸ்லிம் [illegible] பாடசாலை - [illegible] கொழும்பு.
20.4.59 „
21.4.59 „ முஸ்லிம்பாடசாலை, [illegible], காலி „
22.4.59 முஸ்லிம் [illegible]

சுற்றலாப் பயணத்தில் மூன்று வேளை உணவும், இராத்தங்கல் வசதிகளும் எவ்வளவு முக்கியமானது என்பதை நாமறிவோம். இந்த ஏற்பாட்டில் அதிபர் அவர்கள் தனது சொந்தச் செல்வாக்கையும் திறமையையும் வெளிக்காட்டி இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்களின் ஆசிரியர் கலாசாலை நண்பரான ஒரு யாழ்ப்பாண தமிழ் ஆசிரியர் எங்களுக்கு ஒரு பகல் உணவு வழங்கினார். சைவச் சாப்பாடு, வாழையிலையில் பெரிய அரிசிச்சோறு உட்பட பப்படம், பருப்பு வடை என்னன்னவோ எல்லாம் பதினொரு ஐற்றம். இந்த நேரத்தில் அந்த அரு அதிபர் நண்பர்களுக்கும் நன்றி கூறினேன். அதேபோன்று காலியில் ஒரு சாப் பாடு ஏற்பாடு. அது அக்கால காலி மாநகர மேயர் அல்-ஹாஜ். தாஸிம் அவர்களால் வழங்கப்பட்டது. முழுக்கோழியும் முட்டைப் பொரியலும் பழங்களும் ஜூஸ்களும். சாப்பிட்டு முடிவில் கை துடைக்க தூய வெள்ளைக் கைலேஞ்சி. சிலர் ஞாபகத்துக்கா கவோ என்னவோ கூடவே கைலேஞ்சியையும் தனதாக்கிக் கொண்டார்கள்.

கிளிநொச்சி மார்க்கட்டில் ஒரு இடைத்தேநீர். சிற்றுண்டி, நல்ல பெரிய கதலி வாழைப்பழம், பசுப்பால் ரீ. அதனை வழங்கியவர்கள் பானு டெக்ஸ் எஸ்.எம். ஹனிபா ஹாஜியும், கே.சீஎம். லொட்ஜ் ஐ.எல். முகைதீன் கணக்கப்பிள்ளை அவர்களும். நாவலப்பிட்டியில் ஒரு காலைச் சாப்பாடு. வழங்கியவர் எங்கள் மாமா காதர் எஞ்ஜினியர் அவர்கள். (அப்போது அவர்கள் நாவலப்பிட்டியி ல் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள்) ரம்மியமான சூழல், தேயிலைச் செடியைத் தொட்டுப் பா ர்த்தும் கசக்கி முகர்ந்தும், சப்பித்தின்று பார்த்தும் மகிழ்ந்தார்கள் மாணவர்கள். இதுபோல இன்னும் பல இவ்வாறான ஏற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத் தக் கூடிய செல்வாக் குடையவராகவும் ஒரு திறமைசாலியாகவும் திகழ்ந்தார்கள் அதிபர் யூ.எல். இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள்.

இந்தப் பாடசாலைக்கு முதன்முதலாக விஞ்ஞான ஆசிரியர் நியமிக்கப்பட்டதும் அந்த அதிபர் காலத்தில்தான். (பீ. செல்வராஜா - பளுகாமம்) அப்போது ஏற்பட்ட உற்சாகமும், தைரியமும் காரணமாக கிழக்கு மாகாணமே பேசும் படியான விஞ்ஞானப் பொருட் காட்சியொன்றை அதிபர் ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அப்போது மின்சாரம் இல்லை. எவ்வகையான வசதிகளும் இல்லை. காட்போட்டினால் நன்கு வர்ணம் தீட்ட ப்பட்ட பெரிய தாமரை மலர் நீர்த்தொட்டி ஒன்றில் அதனை வைத்து பெற்றி மூலம் மின்சாரம் கொடுத்து சுற்றவைக்கப்பட்டது. அதனை அனைத்து மக்களும் ஆச்சரிய மாகவே பார்த்தா ர்கள். இதுபோன்று அப்போதைக்குப் புதுமையான எத்தனையோ விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அல்-மனார் மத்திய கல்லூரியில் அதிபர் இஸ்மாயீல் மரைக்கார் அவர்களின் காலத்தில் 1959 இல் மிகவும் பிரமாண்டமான ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது அல்-மனாருக்கு விளையாட்டு மைதானம் இல்லை. தற் போது அல்-மனார் பெண்கள் பிரிவாக இருக்கும் வளாகத்தில் தான் அது நடைபெற்றது. அப்போதைக்குள்ள புத்திஜீவிகள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி மாதிரி என வர்ணி க்கக்கூடிய அளவுக்கு சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. அதிலும் இறுதிநாள் போட்டி நிகழ்ச்சிகளுக்கு வெளியூர் பாடசாலை மாணவர்களும் பார்வையாளர்களாக வந்திருந்தார்கள். அந்த அளவுக்கு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கொள்ளாக் காட்சியாக அந்த மைதானமும் நிகழ்ச்சிகளும் அமைந்திருந் தன. இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி காரியங்களைச் சாதிப்பதில் வல்லவ ரான அதிபர் அவர்கள், தனக்கு உதவி அதிபராக இருந்த சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜனாப். ஏ.எம். இஸ்மாயீல் அவர்களின் ஆளுமையையும் திறமையையும் செல்வாக்கையும் பயன்படுத்தி அதிபர் இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள்தன் சேவையில் பெரும் வெற்றியும் புகழும் அடைந்தார்கள்.


மேலும் இஸ்மாயீல் மரைக்கார் அதிபர் அவர்கள் உதவி அதிபர் ஜனாப். ஏ.எம். இஸ்மாயீ ல் அவர்களைக் கொண்டு சிறந்ததொரு சாரணர் படையை உருவாக்கினார்கள். அந்த படை யை முதன் முதலாக முறையாகப் பதிவுசெய்து மாவட்டத்தில் பிரகாசிக்கச் செய் தார்கள். 1957 இல் கிழக்கில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. தரைமார்க்கங்கள் அனை த்தும் துண்டி க்கப்பட்டமையால் உணவுப் பஞ்சம், கோதுமை மாவுக்குப் பஞ்சம். கொழும்பிலிருந்து கல்முனைப் பகுதிக்குரிய உணவுப் பொருட்கள் ஹெலிக்கொப்டரில் கொண்டு வரப்பட்டு கல்முனை வாடிவீட்டு மைதானத்தில் இறக்கப்பட்டன. அப்போது கல்முனை ஸாஹிறா சாரணர் படையும் எமது சாரணர் படையும் சேர்ந்து அவைகளை ஏற்றி இறக்கிப் பங்கி டுவதில் பெரும் பங்காற்றினர். அதற்காக எமது சாரணர் படைக்கு அக்கால கல்முனை D.R.O. அவர்களால் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இன்னும் கல்முனை ஸாஹிறாவோடு ஒத்ததான முதலுதவிப் படையொன்றும் அன்னா ரின் காலத்தில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டது. கல்முனைக் குடியைச் சேர்ந்த மயக்க மருந்து நிபுணரான Dr. ஸனா அவர்களின் தந்தையான ஆங்கில ஆசிரியர் ஜனாப். ஏ.எம். கமால் தீன் அவர்கள் முதலுதவிப் படையின் பொறுப்பாசிரியராக இருந்து செயல்பட்ட ார்கள். குறிப்பிட்ட முதலுதவிப் படையினரும் அதிபர், பொறுப்பாசிரியரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் உங்கள் பார்வைக்குத் தரப்பட்டுள்ளது. 100 வயது அதிபரும், 80 வயது ஆசிரியரும் அதில் அமர்ந்திருக்கின்றனர் 70 - 75 வயது மாணவர்கள் அதில் அமர்ந்திருக்கின்றார்கள். பார்த்து மதியுங்கள் - மகிழுங்கள்.

இவ்வாறு 1959 - 1962 வரை இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்கள். அன்னார் காலத்தில் அல்-மனாரில் கற்றுத் தேறிய பலர் ஆசி ரியர்களாகவும், அதிபர்களாகவும், வேறு பல நல்ல நல்ல பதவி உத்தியோகத்தர்களாகவும் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார்கள். உதாரணமாக முன்னாள் Z.D.E. ஜனாப். M.H. காதர் இப்றாகீம் அவர்கள், முன்னாள் ஷம்ஸ் அதிபர் ஜனாப் A.M.A. சமது அவர்கள், கல்விக் கல்லூரி உப பீடாதிபதி எம்.ஏ.எம். ஜெலீல், அல்-ஹாஜ். Z.A செய்னுலாப்தீன் அவர்கள், அல்ஹாஜ். A. மீராமுகைதீன் அதிபர் J.P. அவர்கள், அல்- ஹாஜ். M.C. அஹமது முகைதீன் அதிபர் J.P. அவர்கள், மர்ஹூம்களான நூலகர் A.L.A. மஜீத் J.P. அவர்கள், ஜனாப். K. அல்லாபிச்சை அதிபர் அவர்கள் போன்றவர்களையும் இங்கு குறிப்பிட்டுக் கூறலாம். (முக்கியமான சிலர் விடுபட்டிருக்கலாம், மன்னிக்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்னும் இஸ்மாயீல் மரைக்கார் அதிபர் அவ்ாகள் சமூக சேவையிலும் தன்னை ஈடுபடு த்திக்கொள்ளத் தவறவில்லை. மஸ்ஜிதுன் நூர் முன்னாள் தலைவர்களுள் ஒருவரான அப்துல் றகுமான் லெப்பை - இஸ்மாயீல் ஹாஜி அவர்கள் வபாத்தா னதன் பின்னர் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் என்ற வகையில் நமது அதிபர் அவர்கள் வபாத்தானவரது வாரிசுரிமைக்காரராகவும் ரஸ்ரியாகவும் செயற்பட்ட ார். அத்துடன் சிலகாலம் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலில் பேஸ் இமாமாகவும் கடமையாற்றினார். இன்னும் குர்ஆன் மத்ரஸா நடாத்தி அதிலும் பல மாண வர்களைத் தேர்ச்சிபெறச் செய்தார். மேலும் எங்கள் அன்புத் தமிழான அரபுத் தமிழிலும் தேர்ச்சியுடையவராகவும் இருந்தார். இரு கைகளாலும் சரளமாகவும் அழகாகவும் எழுதக்கூடிய அற்புதத் திறமையுடையவராகவும் இருந்தார்.

றாணமடுப் பகுதியில் இவருக்கு வயல் காணிகள் இருந்தது. விவசாயத்திலும் ஈடுபட்டார். சோம்பலற்ற மிகவும் உறுசுறுப்பானவர். வீட்டுத் தோட்டம், முயல் வளர்ப்பு, கோழிப் பண்ணை முதலான முயற்சிகளிலும் ஈடுபட்டார். சமகால த்தில் ஒரு பிரதேசத்தில் உற்ப த்தியாககும் மரக்கறி, இலைக்கறி, பழ வகைகள், தானியங்களை அந்தந்தக் காலத்தில் அதிகமாக உண்ண வேண்டும். அது அல்ல ாஹ்வின் அருட்கொடை, அது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும் என அடி க்கடி அறிவுரை பகர்வார்.

இவ்வாறாக 77 ஆண்டுகள் சிறப்புற்றுப் புகழுடன் வாழ்ந்த பெருந்தகை அதிபர் ஜனாப். யூ.எல். இஸ்மாயீல் மரைக்கார் அவர்கள் 1994 டிசம்பர் 24 ஆம் திகதி வபாத்தானார்கள். இன்னாலில்லாஹிவஇன்னாஇலைஹிறாஜிஊன். எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் நற்பணிகளை அங்கீகரித்து ஜென்னத்துல் பிர்தௌஸ் என்னும் மேலான சுவனபதியை வழங்குவானாக எனப் பிரார்த்திப்பே ாமாக.

**அல்–ஹாஜ். எஸ்.ஏ.ஆர்.எம். இஸ்மாயில் மௌலானா**
**அகில இலங்கை சமாதான நீதவான்,**
**ஓய்வுபெற்ற அதிபர், மருதமுனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் யூ.எல். இஸ்மாயீல் அதிபர்...

புலவர் யூ.எல். இஸ்மாயீல் அவர்கள்
கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருதமுனையில்
1917.10.09 ஆந் திகதி பிறந்தார்கள்.

மருதமுனை வடக்குப் பாடசாலை என்று அழைக்கப்பட்ட தற்போதைய மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுத் தேறியவர்.

அதன் பின்னர் 1944, 1945, 1946 ஆகிய மூன்று ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்.

இவர் கல்கின்னை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரியில் 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1962 ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமை யாற்றியவர்.

கொழும்பு - மல்வானை அரசினர் கலவன் பாடசாலையி லும் 1935.05.01 இல் தமிழ் ஆசிரியராகவும் 1945.07.04 இல் அதிபராகவும் பணியாற்றியவர்.

இவர் எவ்விதமான சலசலப்புமற்ற ஒரு சிறந்த புலவராகப் பரிணமித்தவர் என்பதற்கு இவரால் எழுதப்பட்ட நூல்களே சான்று பகர்கின்றன.

இவர் புகழ் என்றும் நின்று நிலவுவதாக. இவருக்கு இறைவன் ஜன்னத்துல் பிர்தெளஸ் என்னும் சுவனத்தை வழங்கி அருள் புரிவானாக.

அல்-ஹாஜ். எம்.ஏ.எம். ஜெலீல் M.A., P.G.D.E.
கலாபூசணம், வித்தகர்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுபெற்ற அட்டாளைச்சேனை தே.க.க. உப பீடாதிபதி,
அனுமதிபெற்ற மொழிபெயர்ப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியகாரர்கள் மறந்து விட்ட உமறுப்புலவரின் வாரிசு

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தேவையா? இல்லையா? என்பதற்கப்பால் அதன் வரன்முறைக்குள் நின்று எழுதியவர்களும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்திருக்கின்றனர் என்பதற்கு மருதமுனை யூ.எல்.இஸ்மாயிலும் சான்றாகின்றார்

1966 ஆம் ஆண்டு தொடங்கி 2016 ஆம் ஆண்டுடன் பொன் விழாவான இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் 1939 ஆம் ஆண்டு கல்ஹின்னை அரசினர் தமிழ்ப்பாடசாலையின் தமிழாசிரியராக இருந்து ஆயிரம் பிரதிகளைப் பரப்பிவிட்ட யூ.எல்.இஸ்மாயிலின் "உபாக்கியான அந்தாதி" யைக் கண்டு கொள்ளாமை விசித்திரமானதே

இலக்கியம் தொடர்பான ஆய்வியல் தேடலில் பதிப்பிக்கின்ற முயற்சியும் முக்கியமானது. இது தொடர்பில் எவ்வித முன் ஈடுபாடுமில்லாத நண்பர் பதுறுல் பௌஸ் திடீரென இம்முயற்சிக்குள் தன்னை நுழைத்துக் கொண்ட விபத்து மருதமுனையின் இலக்கிய அடையாளப்படுத்தலின் அல்லது மீள் இழுத்துக் கொடுத்தலின் முக்கிய அம்சம் எனலாம். மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என வரையறுக்கின்றவற்றுள் உயர் முயற்சியென இதனைக் கொள்ளலாம். அதற்காக அவர் மேற்கொண்ட பயணங்களையும் தேடலையும் விடா முயற்சியையும் நாம் அறிவோம். இம் முயற்சிக்குப் பின்னரான அடையாளத்தில் பதுறுல் பௌஸ் தன் பெயரை பதித்திருப்பது அபரீதமான முயற்சியே.

உமறுப்புலவர்-வண்ணக் களஞ்சியப்புலவர்-குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் வரிசையில் நின்று இஸ்லாமியத் தமிழ்ப்புலமை மரபு பிசகாமல் பாடிய மருதமுனையின் சின்னாலிமாப்பா-புலவர் மணி சரிபுத்தீன்-ஹஸன் மௌலானா வரிசையில் வைத்து எண்ணத்தக்கவரே யூ.எல்.இஸ்மாயில் ஆவார்

உமறுப்புலவர் எவ்வாறு நபியவர்கள் மானுக்குப் பிணை நின்றதான படலத்தை அமைத்தாரோ அதற்குச் சமாந்தரமான கற்பனையில் வேடனிடமிருந்து முயல்களை மீட்ட சம்பவம் ஒன்றையும் அதனோடிணைந்த நபியவர்களின் புகழையும் மேல் ஓங்கச் செய்து அவற்றுடன் பல்வேறு பிரசாரக் கருத்துக்களையும் கொண்டு "உபாக்கியான அந்தாதி" யை சமைத்துள்ளார் நூலாசிரியர்

முற்காலத்தில் நிகழ்ந்ததை அறிவிக்கும் கதை அல்லது இதிகாசக்கதை அல்லது கதை சொல்லுதல் முறை முதலியவற்றை உள்ளடக்கிய சொல்லாடலே "உபாக்கியம்" என்பதாகும். ஒரு பாடல் முடிவில் உள்ள எழுத்து-அசை-சீர்-அடி அடுத்துவரும் பாடலின் தொடக்கமாக வருவதே அந்தாதித் தொடை. இவை இரண்டையும் இணைத்து அவற்றின் இலக்கணம் மாறாமல் "உபாக்கியான அந்தாதி" ஆக்கி இருப்பது மெச்சத்தக்க முயற்சியாகும்



பதிப்பாசிரியர் : ஐ.எம். வதுறுல் பௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்ற மறைநாய்களினைக் கண்டமுயற்சேய்கள்
நேசபுதரான தினைத்தேடியே நுளைந்து
வென்றிபுரி நாய்களினை யஞ்சியே யொடுங்கி
வேதநபி பாதமெனவேண்டி மறைவாக

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

மறைவாகநின்ற பெருமா முயலைக்கண்ட
மறைநாய்க ளோடியதன் மார்பிட ரிதீண்ட
இறைபாதமென விதயமுறு நாதமுயலும்
பறைவாக லோரொலியைப் பரவினோடுகாட்ட" தொய்தலின்றி இவ்வாறாகவே அந்தாதி அசைகின்றது

உபாக்கியான அந்தாதியின் ஆசிரியர் யூ.எல்.இஸ்மாயில் முஹிம்மாத்துல் முஸ்லிமீன், நபி(ஸல்) அவர்களின் பலதார மணத்தின் காரணங்கள் ஆகிய நூல்களின் சொந்தக்காரர். கலித்துறை-ஆசிரிய விருத்தம்-வெண்பா யாப்புக்களில் தமக்கிருந்த அனுபவங்களோடு கர்நாடக இசையின் வழித்தோன்றலான கீர்த்தனைக்குரிய மெட்டு-ஓசை-அனுபல்லவி-சரணம் விரவி வர தோத்திரிக் கீர்த்தனாமிர்தத்தையும் இணைத்திருப்பது கவனத்துக்குரியது

முந்தைய காலத்தில் தான் எழுதும் நூலுக்காகப் பெரும் புலவர்களிடம் கேட்டுப்பெறும் கவியான சாற்றுக்கவியினை இந்நூலுக்காக அகவற்பாவில் வழங்கியிருப்பவர் வரகவி அ.சுப்பிரமணிய பாரதியார்(1880-1955) இவரும் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரும்(1885-1921) சம காலத்தவர்கள். மகா கவி பாரதி யாப்புக்களில் எவ்வாறு தேர்ச்சி பெற்றிருந்தாரோ அவ்வாறே வரகவி சுப்பிரமணி பாரதியாரும் புலமை பெற்றவர். மாருதி விஜயம்-ஜடா வள்ளல்-பரதன்-நந்தனார் -பகவற் கீதை வசனம்-பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்-பால கோபால லீலை முதலிய நூல்களின் ஆசிரியர். சிறந்த கட்டுரையாளர் 1904 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகா கவி பாரதியும் இவரும் சுதேச மித்திரனில் பணிபுரிந்துள்ளனர். "புழுவும் எறும்பும்" தொடர்பில் 1940 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் மகா கவி பாரதி தன்னுடன் பகிர்ந்து கொண்ட தத்துவார்த்த விடயங்களை வாசகர் மத்தியில் பகிர்ந்ததன் மூலம் மகா கவிக்கும் தனக்கும் இருந்த இலக்கியத் தொடர்பை உலகறியச் செய்தார்.

இத்தகு சிறப்புக்கள் மிக்க வரகவி பாரதியார் இந்நூலுக்கு சாற்றுக்கவி வழங்கியிருப்பது பெருமைக்குரியது. இலங்கையில்-மருதமுனையில் எழுந்த இவ்வாறானதொரு நூலுக்கு இந்தியாவிலிருந்து ஒரு கவிஞரால் சாற்றுக்கவி பாடப்பட்டதென்பது பெருமைக்குரிய விடயமே

இந்நூலில் பல்வேறு பிரசாரக் கருத்துக்களும் இணைக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டியது. தனியே போற்றுதல் அல்லது சிறப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் உள்ளடக்கும் அக்கால இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்கள் எனக் கூறப்பட்டிருக்கின்றவைகளிலிருந்து சற்று வழுவி புத்திமதி கூறலான பாடல்கள் மீதும் நூலாசிரியர் கவனம் செலுத்தியுள்ளார்.

"குறுஆனிருக்குதொரு மூலையிலே-கீதம்
குதுாகலிகத்தாடுதையா காலையிலே-மனம்
சறுகாதிருக்கமறையேற் பாயெடா-மாய
சங்கீதக்கச்சேரியைத் தோற்பாயடா"
என்ற பாடலை இச்சமையலுக்கான பதமாகக் குறிப்பிடலாம்

நூலிலை முடிக்கும் போது
"சீலமுடன்நபிசொல் பாருங்களே-இந்தச்
சிறுவனிசுமாயீல்சொல் தேருங்களே-வரு
காலநடைதிருத்திப் பாருங்களே-உயர்
ஹக்கையுணர்ந்து களிகூருங்களே" என நூலாசியர் விடுக்கும் அழைப்பு உவந்தேற்கத்தக்கது

செய்யுள் தொடங்கி கவிதைகளாய்ப் பல்வேறு உருக்கொண்டு தாண்டவமாடும் இக்காலத்தில் சுமார் எட்டு தசாப்தங்களை முன்னோக்கிய இலக்கிய ரசிப்புக்கு எம்மை இழுத்துச் செல்லும் முயற்சியில் இறங்கி எம்மையும் நனையவைத்திருக்கும் இஸ்மாயில் பதுறுல் பௌஸின் இம்முயற்சி பாராட்டத்தக்கது. இதனோடு நின்று விடாமல் இந்நூலின் செய்யுள்களை சந்திபிரித்து தற்கால உரைப்பொழிப்பொன்றைச் செய்து வெளியிடுகின்ற பணியில் நண்பர் வதுறுல் பௌஸ் இறங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அவரது முன்னெடுப்பினை இலக்கிய உலகு அரவணைக்க உளமார்ந்த பிரார்த்தனைகள்.

**ஜெஸ்மி எம். மூஸா**
M.phil. (Re), MA (Tamil), BA (Hons)
PGDE,Dip in HR(Pera) & Journalisum
16.12.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாய்வு

அண்ணல் நபி அஹமது றசூல் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் போதித்த போதில் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றதாகச் சரித்திரம் கூறுகின்றன.

மானுக்குப் பிணை நின்ற ஓர் சம்பவம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு கிளைக் கதையாகும். அதே நபியவர்கள் காலத்தில் நடந்த மற்றுமொரு சம்பவத்தை உபாக்கியான அந்தாதியைப் பாடி பெருங்கவிஞர் யூ.எல். இஸ்மாயீல் அவர்கள் செய்யுள் வடிவில் மிகத் தெளிவாக படம்பிடித்துக் காட்டுகின்றார்.

முதல் செய்யுளின் இறுதிச் சொல்லை அடுத்து வரும் செய்யுளின் முதற் சொல்லாக அமைத்து பாடல் புனைவதே அந்தாதியென அழைக்கப்படும். அவ்வாறான ஓர் பெரும் முயற்சியை தனது ஆசிரியப் பணிக்காலத்தில் கவிஞர் மேற்கொண்டு பெரும் வெற்றி பெற்றுள்ளார்.

சங்ககால இலக்கியங்கள் பல அந்தாதிச் செய்யுளாக அமைந்திருந்தன. அவைகள் அன்றைய கற்றறிஞர்களால் மிகவும் போற்றப்பட்டன. செய்யுள் பாடும் போது எதுகை மோனையுடன் பாடுவது மரபு வழியாகும். கவிஞர் அவர்கள் மிக அழகாக தமிழில் பல கலைச் சொற்களோடு தமது செய்யுள்களை அளித்துள்ளார். அவற்றி னூடே வர்ணனை, உவமை, உருவகம் என்பனவைகளை செறிவாகக் காணக்கூடிய தாக உள்ளது. இலக்கிய வரம்பை மீறாது காப்பு வெண்பா கட்டளைக் கலித்துறை, அறுசீர், எழுசீர்கழி நெடிலடியார் ஆகிய விருத்தத்துடன் இந்நூலை யார்த்துள்ளார்.

தனது நூலுக்கு உபாக்கியான அந்தாதி எனப் பெயரிட்ட கவிஞர் - உபாக்கியானம் என்ற சொல்லுக்கு கிளைக்கதை என்பது கருத்து - கருத்துக்குப் பொருந்தும் விதத்தில் நபி வாழ்வில் முயலும் குட்டிகளும் சம்பந்தப்பட்ட சம்பவம் சேர்க்கப்பட்டுள்ளது. இதிகாசம் என்பது இன்னுமோர் கருத்துச்சொல். இது முற்காலத்தில் வரலாறு / பழங்கதை என்பதைக் குறிக்கும். அதேவேளை உபாக்கியானம் என்பது இலக்கிய போதனை என்பதனையும் குறித்து நிற்கின்றன. கவிஞர் உபாக்கியானம் என்ற சொல்லை மிகவும் பொருத்தமாகத் தேர்ந்துள்ளார்.

மருதமுனையில் பல புலவர்கள் வாழ்ந்தனர். பிற்காலத்தில் பல புலவர்களும் கவிஞர் களும் வாழ்ந்தனர். புலவர்கள் பல்வேறு சம்பவங்களையும் தம் கவிகள் மூலம் மிக மிகத்தெளிவாக மனக்கண் முன்கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர். வெள்ளக் காவியம், புயற்காவியம் போன்றவைகள் பாண்டித்தியம் பெற்ற பலரால் (வரகவி களால்) பாடப்பட்டன.

ஆனால் உபாக்கியான அந்தாதி மிகவும் பொறுப்புடன் இஸ்லாமிய நெறிகளுக்கு முற்றிலும் இசைவாகப் படைக்கப்பட்டுள்ளது. 1939 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சமூகத்தில் பல்வேறு இறையடியார்கள் (அவுலியாக்கள் - குதுபுமார்) மரியாதைக் குரியவர்களாக மதிக்கப்பட்டனர். அதன் காரணமாக கவிஞரின் செய்யுள்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் உதவியும் கோரப்பட்டுள்ளமை தவிர்க்கப்பட முடியாதவை.

பாண்டியத்துவமிக்க பல அறிஞர்களிடம் பயின்ற கவிஞர் அவர்கள் தமது நூலில் மிகவும் வளமான சொற்களை கையாண்டு தமது புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

## கதைச்சுருக்கம்

மதீனா நன்நாடு இறையருளால் செழித்து வளம்பொங்க கடைகளும் இரைச்சலுடன் கூடியதெருவும் வான்முட்டும் மாளிகைகளும் மாலைகள் அணிந்த வணிகர் கூட்டமும் தொடரிடி போன்ற முகம்மதைப் புகழும் சலவாத்தும் எல்லாத் திசை யெல்லாம் கேட்க நிதி பெருகி தருமம் வளர்ந்து நேர்மையும் வணக்கமும் இலங்கி மனம்கசிய தீனவர்கள் தொழுது எங்கும் தவம் ஓங்கி நாடுகட்கெல்லாம் அணிகல னாய் இலங் கியது. அந்நகரில் அண்ணல் முகம்மது நபியவர்கள் வீற்று அரசாளும் காலத்தில் மதீனா நகரை அண்மித்த ஆதித்தன் என்ற சிற்றூரில் உமறு என்ற ஏழை இறைவனைத் தினமும் போற்றி வாழ்ந்து வந்தான்.

பக்கத்திலிருந்த காட்டிற்குச் சென்று விறகினை வெட்டி அக்கம் பக்கத்து ஊர்களில் அதை விற்று தேவையான உணவுப் பொருட்கள் காய்கறிகள் வாங்கி வந்து சீவியம் செய்தான்.

காட்டிலே வந்த மிருகங்களை கண்ட உமர் சில நாட்கள் சென்றதும் தனது பழைய நினைப்புகளுடன் வந்து குந்திப் பதுங்கி அந்த மானைப் பிடிக்க முயன்றான். ஒரு நாள் உமறு தனது உறுமும் நாய்கள் மூன்றுடன் காட்டிற்கேகி பலபுதர்களை அகற்றி அங்கு மிருகத்தைத் தேடினான். ஒன்றும் இல்லாததால் ஏங்கி மயங்கினான்.

மயங்கி ஓர் மரத்தினடியில் சேர்ந்து கை கால்கள் சோர்ந்திட அசதியாயிருந்த வேளையில் ஒரு வெண் முயல் வந்தது.
அதைக் கண்டவன் மகிழ்ந்து உறுமும் வீர நாய்களை அழைத்து பாய்ந்து முயலைப் பிடிக்க முயன்றான்.
நாய்கள் முயலின் முகத்தைக்கண்டு கூடி வந்து முயலதைத் தேடி நின்றது. நாய்களைக் கண்ட முயற்குட்டிகள் வேறு ஒரு புதரைத் தேடி வேட்டை நாய்களிலிருந்து தப்பி நபி பாதத்தினை மறைவாக வேண்டி நின்றது.

மறைந்து நின்ற பெரு முயலைக் கண்ட நாய்கள் ஓடி அதன் பிடரிகளைத் தீண்ட இறைவனின் பாதத்தை இதயமும் நாட முயலும் அலறி பெரும் சத்தமிட்டது.

சத்தத்தைக் கேட்டு முப்பக்கமும் கூட்டத்துடன் வேட்டையாட நின்ற உமறைக் கண்டு நீட்டு செவிகளையும் இரு விழிகளையும் வெறியுடனும், உறுமிய நாயைக் கண்டன. கண்டவுடன் காதையொரு நாயும் வேமாக வந்த நாய் தலைப்பகுதியையும் மற்ற நாய் நீண்ட நெஞ்சுப் பகுதியையும் ஒரே நேரத்தில் கடித்து வேதனை செய்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிகள் மூன்றும் மிக வரண்டு வாடியுலர்ந்து தளர்ந்து நாய்களினைக் கண்டு மீட்சிபெற வழியில்லையோ! இது தான் தலைவிதியோ!! என இறைவனின் பாதம் பணிந்து இதயத்தை வருத்திக் கூறியது.

எமது தாயை எம்மிடம் உரிமை விட்டனுப்பு வீராவேகமாக எம் அன்னையை வீணாகக் கொலை செய்தீராயின் அது எம்மூன்று பேரையும் கொலை செய்த பாவமாகும்.

எமக்கு யாருமே இரங்குவார்கள், பால் மணம் மாறாத குழந்தையாம் எமக்கு தானாகவும் உணவு தேடவும் முடியாது. எமது தாயைத் தாரும். ஆதம் நபியின் இறப்பை நோக்கி குறைகளை அகற்றுவீர், அகற்றுவீர் என்ற வார்த்தையைக் கேட்டு மிகவும் பயந்து பூமியில் நடுக்கமுற்று பூமியில் எங்கும் கேளாச் செய்தியை இங்கு காண வைத்தவன் இறைவன். இது பெரும் அதிசயம் என்று உமர் அருகில் உள்ள சிசுவை நோக்கி தேன்பாயும் மதீனா நாட்டின் தாஹா மீது ஆணை. நீண்ட வாதம் செய்யவரும் சிறு தோழர் கேளீர், நீதிகள் சொல்லாதே, புதரைச் சேரும் வேடன் சிந்தித்தான். உலகில் அரபி மொழியில் முயல் சொன்னதை சிந்தித்து பூமியில் பிறையை அழைத்த கருணை நபி மீது ஆணை என்பதை உணர்த்தும் மனம் துணிந்து சிந்தித்து அனைத்தையும் உள்ளத்தில் நிறுத்தி அங்கிருந்த முயலை நோக்கி பணிந்து நான் வணங்கும் தெய்வத்தின் மீது ஆணையாக துணிந்து இதை அறுத்து உண்போம் என்றான். இதனைக் கேட்ட முயல் குட்டிகள் மூன்றும் வீரத்துடன் சென்ற உமரை நோக்கி மணம் வீசும் நபிகள் நாயகத்தை நாம் சென்று கண்டு எமது துயர்கூறி வரும் வரை எம் தாய்க்கு எத்தீங்கும் செய்யாமல் வைத்துக்கொள் என்றது. குட்டிகள் கூறியதைக் கேட்டு கண்முன் இருந்த முயலின் கால்களைக் கட்டி மின்னலைப் போல் விரைந்து வீடு சென்று முயலை வைத்துவிட்டு வீட்டிலுள்ள மகனை இரக்கத்துடன் அழைத்தான். வெள்ளை நிற தாய் முயலைப் பிடித்ததையும், தேடி வந்த குட்டிகளை விட்டதையும் மிகவும் விரிவாகக் களைப்புடன் சொல்லி முடித்தார்.

இதனைக் கேட்டு மகனின் தாமரை போன்ற முகம் வாடி தந்தையை நோக்கி தந்தையே முயல் சொன்ன வார்த்தை அரபு மொழியாக இருப்பதால் மறைந்த சந்திரனை நிறைவாக வருமாறு அழைத்த மாநபி குறித்து ஓதியதால் இம்முயல் அடையும் துன்பங்களைக் கழைந்து பால் கொண்டுவந்து அருந்தக் கொடுக்குமாறு வேண்டினான். தந்தை உமர் சொன்னதும் மகன் கண்ணீர் சிந்தி பக்கத்தில் இருந்த அன்னையிடம் சிறிது பாலை வாங்கி வந்து முயலினைக் கட்டுக்களுடன் பால் பீங்கான் முன்னே விட முயலும் துடிதுடித்து இங்கு வைத்த பால் அமுதத்தினைப் பார்த்து மிகவும் தூய்மையாகக் கூறுகின்றது. கூடிநிற்போர் மனம் தாக்க தான் தரும் பாலை தான் அருந்தினால் தனியே இருக்கும் குட்டிகள் மூன்றும் இரை தேடத் தெரியாதவை. மூன்று நாட்களாகப் பட்டினி கிடக்கின்றன. நீங்கள் தரும் அமுதினை அருந்த மனம் வரவில்லை என அழுதது. அழுத முயலின் துயரம் கேட்க அங்கு கூடிய உமர் வீட்டார் பழுது வந்துவிட்டது. இறைவன் தண்டிப்பான் எனப் பயந்து அதிகமாகப் பாவமன்னிப்புத் தேடினர். அழுத முயலும் அதிக துயர் அடைந்தவாறு அழுது புழுதியில் புரள மணலை வாரிப்போட்டு வழிபட்டு ஒப்பாரிச்சத்தமிட்டனர். உமர் வீட்டில் அழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டு அயலில் உள்ளவர்கள் உமர் வீட்டைச் சேர்ந்து உங்களுக்கு ஏற்பட்ட துன்பம் என்னவென்று சொன்னால் எங்களால் தீர்க்கமுடியும் என்றனர்.

உமரின் மனைவியும் பிள்ளைகளும் நடந்த துயரத்தைக் கூறினர். இத்துன்பம் எங்களுக்கு வந்தது போல் உங்களது வீட்டிக்கு வந்து சேர்ந்த துயரமே இன்னும் என்ன வந்து சேருமோ என்று முயல் கூறியது. முயலின் கூற்று கூடியநாரரசம் போன்றது. தாம் என்ன செய்வோம் என்று ஏங்கி, அலறினர். முயல் கூறியது போல் எம் முன்னால் கூறினால் நபியினை நாம் உவந்து அவருக்கு கலிமா உரைப்போம் என்றனர். இதனைக் கேட்ட உமரின் மனைவி எழுந்து பானையில் இருந்த பாலை ஊற்றி அங்கு கூடிய மனிதர்களுக்கு மத்தியில் நன்றியுடன் முயலின் முன்னால் வைத்தாள். கன்றை இழந்து அலறியது போல் முயல் அரபியினால் அங்குள்ள அமுதை நோக்கி என் குட்டிகள் மூன்றும் தனியே புதரில் உறைகின்றன. தாகத்தோடும் பசியோடும் குட்டிகள் மூன்றும் புதர்தன்னில் சிறையிருக்க யான் அமுதம் உண்ணச் செய்த பாக்கியம் நன்று. இந்த அமுதத்தை எனக்களித்த நாயனே என் குட்டிகளைக் காத்து விரைவில் என் வசம் அனுப்பு. கூடிநிற்கும் மனிதர்களே என் இறைவனுக்கே புகழ் அனைத்தும் என்று கூறி பாலைக் குடித்து மகிழ்ந்தது.

முயல் கூறியதைக் கேட்ட மக்கள் மாநபியையும் குர்ஆனையும் வாழ்த்தி இஸ்லாத்தை ஏற்று கலிமாவை ஓதி இரக்கத்துடன் நபியைப் புகழ்ந்தனர். மூன்று நாட்கள் புதரில் புழுக்கத்துடன் இருந்ததால் கவலையடைந்து தாயைக் காணாததால் சிறப்பான மதினா நகருக்கு நபியை நாடிச் சென்றது. மதீனா நகர் வந்தடைந்த முயல்கள் நீரோடையை அண்மித்து நின்று பார்த்த போது அம்பு வில்லுடன் நின்ற பெண்ணொருத்தி முயல்களை வேட்டையாட வந்தாள். வேட்டையை விரும்பிய பெண் தோட்டம் தோட்டமாகத் தேடி மிருகங்களையும் புறாவினையும் பாடிப்பாடி வேட்டையாடுவாள். அதன் மூலம் தந்தையான மன்னன் வஅதாவை மகிழ்விப்பாள். கூட்டமாக வந்த முயல்களையும் பிடித்தாள். பிடித்த முயல்களின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தியது. மீண்டும் நோக்கிய போது எமக்கு வரும் துன்பம் இப்படிச் சேருதே தூயவனே என அறபு மொழியில் முயல் கூறியது. இதைக்கேட்ட பெண் மயங்கி, மோசம் வந்தது என்று கூறி தோழரே அடுத்தடுத்து உமக்கு வந்த துன்பம் என்னவென்று கூறு எனக் கூறியது. தாயும் நாமும் புதரில் இருக்கும் போது தாயை உமர் வேட்டையாடி தன் வீட்டில் சிறை வைத்துள்ளான். இதை மதீனா நகர் மஹ்மூது நபிக்கு சொல்லவந்த சிறியோராகிய எம்மை நீங்கள் நின்று நெருக்கிப் பிடித்துள்ளீர். இதுதான் நீதியா? மானுக்குப் பிணையிருந்த நபி அடிமைகளை விடுவித்தாரே என்று முயற்குட்டிகள் மூன்றும் மிகச் சத்தத்துடன் அரபு மொழியில் கூற மன்னன் மகள் மயங்கி நடுநடுங்கி பதறி உயிர்ப்பயம் ஏற்பட பிடித்த கரம் நெகிழ முயற்குட்டிகளை விடுவித்து உமது நபியைக் கண்டு நடந்ததைக் கூறி உமது தாயை மீட்க படைகளோடு இவ்வூருக்கு வரும் வழியில் அன்புடன் நபியைக் கண்டு கலிமாவை ஓத நீ வந்து எனக்கு சேதி சொல் என்றாள்.

இதை ஞாபகத்தில் வைத்து மூன்று முயல்களும் அவளிடம் இருந்து விடைபெற்று மதினாவை நோக்கி ஓடும் போது ஊர் முழுவதும் புதுமை, புதுமை என முயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் ஓட முஹம்மது நபியின் வாசலுக்குச் சென்று முயல்கள் சலாம் கூறியது. சலாம் சொல்லி மரியாதையுடன் நபியை நெருங்கி அவர்களின் பாதத்தைத் தொட்டு கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் சொட்ட அழுத முயல்களின் வாடிய முகத்தைக் கண்டு உபசாரம் செய்து நடந்தது என்னவென்று கூறுங்கள் என்று கேட்டார். வேடன் தாயைப் பிடித்ததையும் அவனிடம் கெஞ்சித் தாயை விடுவிக்குமாறு கேட்டதையும், தாயை உமர் தமது வீட்டில் தங்க வைத்திருப்பதையும் நபியிடம் கூறி எமது தாயை மீட்டு எமது துன்பத்தைப் போக்குவீர் குறைசிக்குல மணியே என்றது.

நீதி நபி முயல்கூறியதைக் கேட்டு அறிஞர்கள் சபையில் ஆராய்ந்து முயலின் துன்பத்தை நீக்க அலியை அழைத்துவருமாறு வீரன் ஒருவரை அனுப்பினார். பின் அலியிடம் படைகளைத் திரட்டுமாறு கட்டளையிட்டார். அலி படைகளைத் திரட்டிக் கொண்டு நபிகள் நாயகத்தையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். குதிரைப்படையும், ஒட்டகப்படையும், வீரர்களும் உடன் சென்றனர். மூன்று முயற்குட்டிகளும் ஒரு கழுதையின் மேல் ஏற்றப்பட்டன. படையுடன் வரும் போது மன்னன் வஅதாவின் மகள் எம்மைப் பிடித்து நாம் அலறி மனம் வருந்தியபோது நபிகளுடன் நீங்கள் திரும்பி வரும் போது உங்களைக் காட்டுமாறு கேட்டாள். கேட்டவர்களுக்கு வழிகாட்டும் மன்னனே, தாம் வந்த செய்தியை அப்பெண்ணுக்குக் கூறிவர விடை தருமாறு கேட்டது. முயல் கேட்டதும் இரண்டு முயல்களை வைத்துக்கொண்டு ஒரு முயலை அனுப்பினார். அம்முயல் வஅதாவின் மகளின் தோட்டத்தை அடைய ஒரு நாய் முயல்மீது பாய்ந்துவர முயல் வாயைத் திறந்து நாயை நோக்கிக் கோபத்துடன் என்னை நெருங்க வேண்டாம். முஹம்மது நபியிடம் இருந்து வருகிறேன் என்று கூற நாயும் பதறி ஓடிற்று. முயல்குட்டி வஅதாவின் வீட்டைக் கண்டதும் மலர் சோலை நடுவில் இருந்த பெரிய மாளிகையில் வஅதாவின் மகள் உறங்கும் மாளிகைக்குச் சென்று அவளை அழைத்தது. வந்தவள் முயலினை எடுத்து அணைத்து மணம் வீசும் நபியைக் காட்டு என்றாள். முயலும் சென்று காட்ட மனம் வருந்தி நல்லொளியான பேதை கலிமாவை ஓதி வீட்டை அடைந்து தந்தை, தாய், தம்பி சகலருக்கும் செய்தி சொல்ல அனைவரும் நபி முன்வந்து கலிமாவை ஓதி பாதம் பணிந்து நபியைப் போற்றி வீடு அடைந்து வணங்கிய கற்களை உடைத்து வீசி விண்ணவர் போற்றும் குர்ஆனை ஓதி விளங்கினர். நபியும் அலியும் தம் குதிரைகளில் ஏற மூன்று முயல்களும் கழுதையில் ஏறின. வீரன் ஒருவன் விரைந்து போய் படை ஊருக்கு வரும் உண்மையை மன்னருக்குத் தெரிவித்தான். மன்னர் புஸ்பகுராசன் சிறந்த முறையில் நாட்டை ஆள வேண்டுமாயின் குளிர்ந்த நிலா போன்ற வதனத்தையுடைய மதினா நகர் முஹம்மதைப் போல் ஒருவரைக் காணேன். அவர் முகம் காண விழி கூசின. அவருடன் உலகம் முழுவதும் இரவு பகல் முழுக்க பாய்ந்து உயிரோட்டும் அலியும் வருகிறார். நபியின் படைகளுக்கு நிகரான வேறுபடை எங்கும் இல்லை. ஏன் இங்கு வருகிறார் என்று நான் அறியேன் என் ராச சிங்கமே முஹம்மது இங்கு வரும் செய்தி அறிந்து முஹம்மதின் படையினால் அழிய முன் எம் இனிய உயிரினைப் பாதுகாப்போம் என அஞ்சி.

கூ.... கூ.... என்று கண்மூடி மண்ணடி வீழ்ந்தனர். பலர் மன்னன் அடி வீழ்ந்தனர். ஏகனே நீ எங்களைப் பார் மன்னன் அமைச்சரைப் பார்க்க அமைச்சர் மன்னனே நபியும் அலியும் படையுடன் வந்தால் அவர்களை வெல்ல முடியாது. மேகக் குடை நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்முன் கனக மணியும் மாலையோடு பொன்னும் எடுத்துச் சென்று அடிபணிவதே சிறப்பு என்றார். அமைச்சர் கூறியதற்கு மன்னன் இசைந்த பொழுது ஒரு வீரன் வந்து பணிந்து மன்னனைப் புகழ்ந்து போற்றி நான் கூறும் செய்தியைக் கேள் மன்னவனே என்று கூறி, ஆதித்தன் ஊர் உமறு என்று பணிந்து கூறினார். வேட்டையாடச் சென்ற போது செழுமையான வெண் முயலைக் கண்டு சிரமத்துடன் பிடித்தேன். கோபத் துடன் மூன்று முயற்குட்டிகள் தாயை விடுவிக்குமாறு அரபு மொழியில் பேசின. நான் இணங்காததால் நபி மேல் ஆணையிட்டு எமது தாயை அறுத்து விடாதே நபி யைக் கூட்டிவரும் மட்டும் வழிபார்த்திரும் என்று என்னோடு வாதாடிச் சென்றன. மதினா நகர் சென்று மஹ்மூது அவர் துணையுடன் துணை மன்னரோடும் மன வலி மையோடும் வீரரோடும் நாட்டுக்கு வரும் படையினரை வரவேற்றுக்கொள் என்று கூறினான். நபியின் வருகை மன்னனுக்கு மகிழ்வூட்டியது. மகிழ்ச்சியோடும் பயத் தோடும் வியப்போடும் நின்ற புஸ்பகு மன்னன் தனது மண்டபத்துக்கு வந்த உமரை நோக்கி பிடித்த முயலை இங்கு கொண்டு வா என்றதும் வேடுவன் பதைபதைத்து மனம் வாடித் தேம்பி அரசர் முன் கொண்டுவந்து சேர்க்க முயலைப் பார்த்து உமக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கூறு என்று கேட்க, முயல் கூறியது, நான் எனது குட்டிகளோடு காட்டில் எனது மக்களுடன் கூடி இருக்கும் வேளையில் உமர் கண்டான். தனது நாயின் உதவியுடன் என்னைப் பிடித்தான். எனது குட்டிகள் மனம் வாடி முஹம்மது நபியின் உதவி தேடி தமது தாயினை சிறைமீட்க தக்க படையோடு இவ்வூர் வந் துள்ளன. மன்னர் புஸ்பகுராசன் மந்திரி முதலானோரை நோக்கி மகிழ்ச்சியோடு எந்தன் ஆருயிர் நண்பனே எங்கும் காணாத புதுமை வந்த முயலும் இங்கு அரபியில் பேசின. மகிழ்ந்து மனம் பூரிப்படைந்து மகிழ்கிறேன். சிறந்த பெரும் மதீனா அதி பதி திரண்ட எம் ஊரைச் சேரும் முன் மாமணி சிறக்கவே கொடுத்து எதிர்கொண்டு அழைக்க நினைத்துள்ளேன் என்று அங்குள்ள அமைச்சர், மக்கள் மத்தியில் கூற, அதுவே சரியொன்று அவர்களும் பதிலளித்தனர். அவ்வேளை தம்முன் நின்ற புத் தியுள்ள வீரரை நோக்கி மாநபி கூறினார் படைகளுடன் நபி கூடி உன் தேசம் நுழை யும் முன் உமர் தன் வீட்டில் மன்னனை நம்பிச் சிறைவைத்துள்ள பெரிய முயலை வெகு விரைவில் எம்மிடம் தந்தால் உன் உயிர் தப்பும். இதுவே நிச்சயம். இங்குள்ள பயிர் முதலானவையும் நகரும் அழியவே விரைவில் இங்கு வருவர் என உரைத்து வா என நபி விடு தூதரும் நொடிப்பொழுதில் அரசினை நோக்கிக் கூற இடிக்கு மேல் இடி தொடுப்பது போல் வருகிறது என மன்னன் நடுக்கத்தோடு வந்த தூதனுடன் மிகவும் பணிவாகக் கூறினார். நபி தூதர் எமது ஊரை அண்மித்தார் என்ற உரை கேட்டு அவர் பாதம் பணிந்து அன்புடன் வரவேற்கவிருப்பத்துடன் நான் இருக்க றேன். நீர் ஏன் இங்கு வந்தீர் என்று நான் கூறியதாக நபியிடம் போய்ச்சொல் என்ற தும் அச் சஹாபி சென்று நபி முஹம்மதிடம் அரசன் கூறியதைச் சொன்னான். நபி அவர்கள் அலியை அழைத்து இதைக் கூறினார்கள். நல்லது என்று நபியும் சேனையும் அலியும் அங்கு தங்கினர். அங்கு புஸ்பகு மன்னனும் பரிவாளரும் சுற்றத்தோடு தூக்க முடியாத அளவு பொன்மணியுடன் உமர் பிடித்து வைத்திருந்த தாய் முயலினையும் கொணர்ந்து உள்ளம் உருக வேண்டி அவைகளைப் பரிசளித்தான். மாநபியும் அலியும் படைபரிவாளங்களுடன் இறைவனைப் புகழ்ந்தனர். மன்னனையும் அமைச்சரையும் வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி தூதனை விழித்து முயல் குட்டிகள் மூன்றினையும் விரைவில் கொண்டுவா என்று கூற கொண்டுவந்து நபி முன் விட்டதுடம் அவை தம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குள் மகிழ்ந்து பேசி உறுதியுடன் அரபு மொழியில் அரபிகளின் தலைவரே! அஹமது நபியே, இறைவனின் அருள் பெற்ற மணியே, குறைசிகுலக் கண்மணியே, உலகத்தின் குறைதீர்த்து உயிர்களுக்கு உதவிட வரும் குருவே! பொறுமையுடனும் நிறைவுடனும் எதிரிகளின் குறைகளும் போக்கிடும் சீரிய நற்குண நிலவொளி முகமே எனப் புகழ்ந்த ன்ர். அம்முயல்கள் முஹம்மது நபியை நோக்கி தயவுசெய்து தமது தாயைத் தாருங்கள் என கூறின. வேடன் பயல்களே உமது தாயினை அறுத்து உண்டுவிட்டேன் என உமர் கூற, உமரை நோக்கிக் குட்டிகள், முஹம்மது நபி மீது ஆணை, நீ பிடித்த எம் தாயை நீ கொல்லவில்லை. இன்றுவரை உன்னிடமே இருக்கி ன்றது என்று கூறியது. இதனைக் கேட்ட தாய் நபிநாதரை விழித்துக் காட்டில் அலையும் குட்டிகளுக்கு மிகவும் உபகாரியானீர். துன்பத்தைப் போக்கும் ஐயா வள்ளலே! எமது வாழ்வைக் காத்தருள். எமக்கும் குட்டிகளுக்கும் வாழ்வளித்த நபி நாயகமே உமது பாதத்தை பணிய மேன்மை தந்தாய். மறுமை நாளில் நிகரற்ற இறைவன் முன் மன மகிழ்வுடன் உமது பெருமையைக் கூறுவேன். சீரான இறைவன் ஒருவன் நீதான் என்றும் அவ னுடைய தூதர் நபி என்றும் பூமியில் உதித்த தேவனே என்றும் பல தரம் கூறினான். நபியே மூன்று குட்டிகளும் தாய் நானும் கலிமாவை உரைத்து உமது மார்க்கத்தைச் சேர்ந்தோம். பாதை இது ஏற்று பண்புடன் தம் மனதை நிலைப்படுத்தி இறைவனுடன் ஒன்றித்தால் வேதனை தீரும். மிகவும் சுகமளிக்கும். இது இறைவனின் அருமைத் தூதர் முஹம்மதின் இனிய பாதை, இப்பாதை உள்ளத்தின் நோயை ஓட்டும். தமது உயிருக்கு அருமையூட்டம் நாளை மறுமையில் ஈடேற்றம் தரும். இப்பாதையை நாடினோர் இம்மையில் அனைத்தையும் அடைந்தவர் ஆவர்.

தேசகீர்த்தி. அல்–ஹாஜ். ஏ.எம்.ஏ. சமது
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுபெற்ற அதிபர்,
மருதமுனை.

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள அரங்கேறும் செய்யுள் இலக்கியம்

ஊரவர், உறவினர், நண்பரானவர் இவற்றிற்கெல்லாம் வேறாக - சுனாமி யின் பிந்திய குழந்தையாய் 2009 இல் பிறப்பெடுத்து பத்தாவது வயதில் பயணிக்கும் கமு/ கமு/ மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்தின் ஆர்வ முடைய பெற்றோர்களில் ஒருவர் என்கின்ற அடிப்படையில் என்னோடு, இப்பாடசாலையோடு நெருக்கமாகி நிற்பவர்தான் தனது தந்தையின் 'உபாக்கியான அந்தாதி' எனும் இந்நூலை மீளப்பதிப்பிடும் ஐ.எம். வதுறுல் பௌஸ் அவர்கள்.

இவ்வெளியீடு குறித்து இவரோடு ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் பகிர்ந்தவர்களில் நானும் ஒருவனாவேன். என்றாலும், பௌஸ் அவர்களின் தொடர்ச்சியான முயற்சியினால் சிறந்த, தேவையான எனக் கருதக்கூடிய முன்னுரைக் குறிப்புக்கள், கட்டுரைகளுடன் இந்நூலைக் காண்கின்றேன்.

என்றோ மரணித்துவிட்ட தனது தந்தை மீதான ஈடுபாட்டை வெளிக் கொணரும் பதிப்பாசிரியர் இலக்கிய ஆர்வலர்கள், ஆய்வாளர்களுக்கு முக்கியமான பொக்கிசம் ஒன்றினை முன்வைக்கின்றார்.

இன்று, பாடசாலை மற்றும் பல்கலைகக்கழகங்களில் தமிழ் மொழி பயிலுவோரின் பாடத்திட்டங்களில் இவ்வாறான செய்யுள் இலக்கியங் களும் விரவிக் காணப்படுகின்றன.

இந்த அந்தாதிச் செய்யுள்களை சந்திபிரித்து பொழிப்புரை எழுதும் முயற்சி நடைபெறுமாயின் சிறப்பாக அமையும் என்பதோடு மீள அரங்கேறும் இச்செய்யுள் இலக்கியத்தை உரியவர் அவதானம் பெறச் செய்வதும் அவசியமாகும்.

**ஏ.ஆர். நிஃமத்துல்லா**
அதிபர்
கமு/கமு/ மருதமுனை மதீனா வித்தியாலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியரிடமிருந்து...

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே, அல்ஹம்துலில்லாஹ். எனது தந்தை மர்ஹூம் யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் அவர்களால் சுமார் 78 வருடங்களுக்கு முன்னர் நூலுருவில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்நூலை மீள்பதிப்புச் செய்து வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றேன். உபாக்கியான அந்தாதி எனது கைக்குக்கிட்டிய நாள் முதல் பலரது ஆலோசனைகளையும் பல்வேறுபட்ட தேடல்களையும் மேற்கொண்டு மீண்டும் வெளியீடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூல நூலின் உள்ளடக்கங்கள் அப்படியே மாற்றம் ஏதுமின்றி தற்போதைய தமிழ் எழுத்துக்களுக்கு அமைய எழுத்துக்கோர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை விசேடமாகும்.

எனது இந்த வெளியீட்டுக்கு ஆரம்ப ஊக்கத்தைத் தந்த அருமை நண்பர் கவிஞர் ஆகவே ஜபார் (இலங்கை திட்டமிடல் சேவை முன்னாள் பணிப்பாளர் - பதிப்பகமும் வெளியீடும், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்), ஏ.ஆர். நிஃமத்துல்லா (அறநிலா) அதிபர், உரைகள் தந்த பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், மாவட்ட திட்டமிடல் பணிப்பார் அல்-ஹாஜ். எஸ். அன்வர்தீன், கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ், அல்-ஹாஜ். எம்.ஐ. ஹுசைனுடீன் (றியாழி), அல்-ஹாஜ். ஏ.எம்.ஏ. சமது (ஓய்வுபெற்ற அதிபர்), அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மட் (ஓய்வுபெற்ற அதிபர்), அல்-ஹாஜ். எஸ்.ஏ.ஆர்.எம். இஸ்மாயில் மௌலானா (ஓய்வுபெற்ற அதிபர்), அல்-ஹாஜ். எம்.ஏ.எம். ஜெலீல் (ஓய்வுபெற்ற அட்டாளைச்சேனை தே.க.க. உப பீடாதிபதி), ஜெஸ்மி எம். மூஸா (ஆசிரயர், ஊடகவியலாளர்), செவ்வை பார்ப்பதில் பெரும் பங்காற்றிய எம்.ஐ.என். ஹமீம் (ஆசிரியர்), ஆதம்பாவா சியானா (ஆசிரியை), அச்சுக்கோர்ப்பில் உதவிய எனது மகன் அதீக் பௌஸ், அட்டை வடிவமைப்பில் உதவிய எனது மகள் இனாபா நப்றின், எனது செல்வங்கள் ஆரா ஸுல்பத், முகம்மது யாபி, பாத்திமா அக்ஷா, அலிக்ஷா அப்ஸின் ஆகியோருக்கும், எனக்கு நூலாக்கம் தொடர்பான பல கருத்துக்களை வழங்கியதுடன் எந்நேரமும் முகங்கோணாது உதவிகள் பல புரிந்த தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எனது மருமகள் மஸ்றூபா மஜீத் அவர்களுக்கும், மேலும் எனக்கு துணைநின்ற நண்பர்கள் பிரதேச செயலாளர் ஏ.ஏ. லத்தீப், ஜனாப். எம். எப்.எச். ஹைக்கல், விஜிலி எம். மூஸா (ஆசிரியர்), பீ.எம்.எம். தஜ்மீல் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) எனது தந்தையை பற்றிய எழுத்துக்களை அறிமுகப்படுத்திய அல்-மருதமுனை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எம்.சீ.எம். அப்துல் காதர், அதனை எழுதிய மர்ஹூம் ஈழக்குயில் இத்ரீஸ் அவர்களுக்கும், ஊடகவியலாளர் பீ.எம்.எம்.ஏ. காதர் மேலும் எனக்கு உற்சாகமும் ஆலோசனைகளும் இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கும் அன்பு மனைவி ஹாரிதா பௌஸ் ஆகியோருக்கும், எனது சகோதர சகோரிகள், என்னால் தவறவிடப்பட்டுள்ள எனது அன்புக்குரியோருக்கும் இனிய நன்றிகள்.

இந்நூல் எம் அனைவருக்கும் ஒரு அரிய பொக்கிசமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**எம்.ஐ. வதுறுல் பௌஸ் SLPA.**
அகில இலங்கை சமாதான நீதவான்,
பிரதித் தலைவர், யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகம்,
பதிப்பாசிரியர்.

544, ஸம் ஸம் வீதி,
மருதமுனை-03.
தொலைபேசி : 0772993758



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜடாவல்லவர், மாருதி விஜயம், பரதன், நந்தனார்,

பகவத்கீதை வசனம் முதலிய பல நூல்களினாசிரியராகிய, சென்னை .

பிரம்பூர் வரகவி திரு.

## அ. சுப்ரமணிய பாரதியாரவர்கள்

பாடிய சாற்றுக்கவி.

### அகவற்பா.

\- - - - - -

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வளரும்,
அறிஞர்கண்டுவக்கும் அருட்பொருள் வளரும்,
பாரிலெதனு நல் வரகவி வளரும்,
மாண்புசேர் இஸ்லாம் மதத்தின் வளரும்,
கேதமகற்றும் நீதால் வளரும்,
ஆகரம் பெருக அமைத்துத் திரட்டி,
தேனும் பழமும் ஆவினிற் பாலும்,
சீனியுங்கூட்டிய தெவிட்டா அமிர்தம்,
வழங்கினன் எனவே மாநிலம்புகழ,
வழங்கினன் இரண்டு வளம்பெறு நூல்கள்,

அவைதாம் :-

ஒண்பொருள் காட்டும் "உபாக்கியான
அந்தாதி" யெனும் சிந்தாமணியும்,
சீர்த்திசேர் "தோத்திரக் கீர்த்தனாமிர்தமும்"
அருமையாயிவை தர ஆதரங்கொண்டவன்,
விளைநீர் மருத மூனைபெறு நற்பதி,
மேவும் மூ. எஸ். இஸ்மாயிலெனும்,
தண்டமிழ் இன்பம் சந்தம் பருகும்,
தனிப்பெரும் பேறுகொள் சதாவன்றுனே,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

# தோத்திரக் கீர்த்தனமிர்தம்.

## காப்பு-வெண்பா.

முத்தமணியும் படைத்து, மூமிமிருமோசருகுளாய்
முத்தமணியா யிலங்குமுன்னவனும்-இத்தரணி
பத்தனையுந் தீபமையும் பண்புடனே பாண்டருளும்
சுத்தனவனென் கவிக்குக் காப்பு.

## கட்டளைக் கலித்துறை.

சீர்சாலிசவி திலவுபுவி திகழ்ப்ரிவினமுன்
கார்சாலிரவு பகல்பாதிபாவ்டுக் கனித்தங்கி
போர்சாவருமம தெறுனைபி மார்க்கத்தெரிவிடுத்த
நேர்சாவிறைவ னெவனெஞ்சாசனத்து விதமமரே.

பொன்கொண்டமக்கா புவிமிற்பிறந்து புகழ்பெருக்கிப்
பின்கொண்ட மாமதீனாவின் மறைத்தொளிர்போலொளிவே
மின்கொண்ட வையகவினைகழ்ற்ற வெளியாமுனாகி
பின்கொண்ட பாதத்தினைக் கொண்டெனைமை யிதிக்கருளே.

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நறைமலமு ஹபீது னபியீனாமகனைரு
நாதர பூமாக்கர் பதமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 மதிவகல்ல கரிற்றிருமுகம்மகனார் மணியணிமருமக்காவே
பதிகளுக்கரசாய் மதிவகல்ல கரும்பாலிய வூர்களுஞ்சிறக்க
அதிதுடையூருட் சிறியவேளர் கூறுமாதித்த னென் றனையூரில்
மதிபுறம் வதனத்தமரெனும் பேரன்மாண்புடனிருந்த னன்-
னக்தேர.

வேறு.

14 இருந்தவாழ்ந்தவு மறெனுமேனமுதான்
தெரிந்துயவல்ல விறையவனைத் தினம்
வருந்தியன்னவன் வாழ்மகமு மொத்
துதித்துப்போற்றி யருட்டினைச் செப்புமே

15 வட்டிவிவ்வு மதேரியடர்புதர்
வெட்டியூரினைக் கட்டியதைவிந்து
கட்டுமாடையுங் காப்பதிபாதியுக்
கிட்டமாய்ப் பெற்றாச்சிவித்துவந்தனன்.

16 வந்தகல்லிருகக்கனைக் கண்டவன்
மிந்தவேவிததன் காப்புகளுடன்வந்து
குந்தியே பதுக்கிப்பாதுங்கித் தொடர்ந்
தந்தமானைப்பணிப்பவனவனுமா.

17 உமறவலொரு காளிற்றனதுமன்
துமுழு காப்புகளுடனுமடவிபுக்
கெலருக்காளும் புதர்களகற்றியும்
ஏதுமக்கிலை தேக்கிமயக்கினன்.

18 மயக்கமுற்றவு மதேருர்மகிழுமன்
அயர்க்கத்தன் காக்கைகளுஞ் சோர்த்திட
வியர்க்கவந்தவ் விருக்குமவ் வேலியில்
வெடன்கண் முடேனர்வென் முயல்வைக்கதோ.

வேறு.

19 வந்தமுயல்கண்டவுமர் சிக்கதவனிசாடி
குந்தியவர் குார் தனைமக்கூலர் பெதிரேவி
உக்தியிவனின்னுடைவருபர்க்கு செவிமோசியாப்
பக்கினைகள்செய்ய வெவப்பாலக்குடனே கட்டி.



பதிப்பாசிரியர் : ஐ.எம். வதுறுல் பௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

பிஸ்மில்லாஹி

# உயாக்கியான அந்தாதி

தோத்திரக் கீர்த்தனாமிர்தமு மிணைக்கப்பட்டுள்ளது.

இந்நூல்

கல்ஹின்னை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர்,

## யூ. எல். இஸ்மாயில் அவர்களாலியற்றப்பட்டு

மதறாஸ் வரகவி

அ. சுப்ரமண்ய பாரதியாராற் பார்வையிடப்பட்டது.

உலமாக்களின் அங்கீகாரம் பெற்றது.

பேரறிஞருந்தனவந்தருமாகிய

ஏ. ஓ. எம். சாலிஹ்லெப்பை ஹாஜியார்

அவர்களின் தனோபகாரத்தால்,

மாத்தளை "அனுலா" அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

# முகவுரை

பண்டைக்காலத்து முஸ்லீம்களிடைப்பல தமிழ்ப் பண்டிதர்கள் மிளிர்ந்தன ரென்பதற்கு, தற்போதீங்குலவும் சீறாப்புராணம், முகிய்யித்தீன் புராணம், இராசநாயகம் முதலாய பெருஞ்செய்யுனூல்கள் தக்க சான்றாகும். இவை இக்காலத் தமிழ்ப்பண்டித சிகாமணிகளாலும் பெரிதும் போற்றப்படு கின்றன. பண்டைய புராணாதிகட்குப் பிந்தியோரெழுதியுள்ள உரைக ளின் மாண்பே, பின்னர் முஸ்லீம்களிடைத் தமிழறிஞரிலங்கினமைக்குத் தக்க சான்றாயுளது. நாகையந்தாதியென்பது ஒரு சிறு பாடல். இதனு ரைப் புஸ்தகமொன்றை நான் பார்த்தபோது, தமிழிலக்கிய நூல்கட் கெழுது முரையுடனிரைக்கத்தக்கவாறு பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, அருஞ் சொற்பிரிப்பு, இலக்கணக் குறிப்பு, எடுத்துக்காட்டுகளாதியுடன் அஃதிலங்குமாறு என்னைப்பெரிதும் மயக்கிற்று. ஈதோர் தொன்னூலன்று, இதேபோன்ற பன்னூல்களை நம்முன்னோரருளிச் சென்றனர். தற்கால த்தவராயயாம் இத்தொன்னூல் பலவுடன், திருக்குறள், நைடதம், இரா மாயணம் முதலாந்தமிழிலக்கிய நூல்களையும், பாட்டிலக்கணங்களைப் பலப்பல ரூபத்திலும் படித்துப் பாண்டித்தியமடைந்துள்ளோம். எனவே பண்டையோரைப் பார்க்கிலும் நாம் தமிழறிவிற்றலை சிறந்துள்ளோ மென்பது தெளிபு. ஆயினும் நம்பிற் சந்ததி நமது நூற்றாண்டின் கல்வி த்திறனையறிவ தெதனால்? அன்றியும், பண்டைய சரித்திரங்களாய் வந்தவற்றுட்சில, நாகரீக மக்களுளத்தைப்புண்ணாக்கிப் புரட்டுந்தகை யன. சகல சமயத்தவரு மேற்றுக்கொள்ளுந்தகையவாய் எம்மாட்டுளவ ற்றை நன்முறையிலச் சிட்டுப் பரப்புதல் நம்மனோர் கடனே. பலரிதை நிறைவேற்றும் பண்புடையரா யிருந்தும் இவ்வினையிற் பிரவேசியமாமை க்கு, தூண்டுவோரின்மையுமோர் காரணமாயிருத்தல் கூடும். பேரறிஞருந், தனவந்தருமாகிய கனம் ஏ.ஓ.எம். சாலிஹ்லெப்பை ஹாஜியாரவர்களின் தூண்டுதலே நானிதை யெழுதியதற்கு மூலகராணமென்பது ஈங்கு குறி ப்பிடத்தக்கது. இஸ்லாமிய சரித்திரங்களை நாகரீகவுலகுக்கேற்றவாறு வெளியிடுமறிஞர்கட்கீதோர் தூண்டுகோலாயிருக்கு மென்றேயிதனை வெளியிடத்துணிந்தனனேயன்றி வேறின்று.

இந்நூல் இருபிரிவுகளையுடையது. அவற்றுள் முந்தியது உபாக்கியான அந்தாதியெனவும், மற்றையது தோத்திரக் கீர்த்தனாமிர்த மெனவும் நாமம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>உபாக்கியான அந்தாதி :</u> இது இறைவனின் தூதராம், முஹம்மது நபியவர்களின் காலத்துநடந்த ஓர் சரித்திரத்தையடக்கி நூற்றுப்பதினொரு விருத்தங்களாற் பாடப்பட்டுள்ளது.

<u>தோத்திரக் கீர்த்தனாமிர்தம் :</u> இது தற்காலததிற் சிறந்து விளங்குமினிய விராகங்களில், இருபது கீர்த்தனங்களாற் பாடப்பட்டது. இவை, இசையின்பமவாவுவோர்க்கு அவ்வழியே மத சரித்திரங்களையும் கற்பிக்குந்தகையன.

இப்புத்தகம் என்போன்ற சிறார்களிடையும், கல்வியிற்றேறாத பாமரரிடையேயுமுலவின், அன்னவாகத்தில் மதப்பற்றையும், இஸ்லாத்தின் மாண்பையும், சரித்திர அறிவையும் ஊன்றப்பதிக்குமெனும் நம்பிக்கையுடனேயே இதனை எழுதலானேன். குறைந்த காலத்துட் பாடி வெளியிடப்பட்டமையின் குறைகளிருத்தலுங் கூடும். ஆயினுமவை கண்டிந்நூலையெள்ளாதிருக்குமாறு அறிஞரை வேண்டுகின்றேன். கீர்த்தனங்கட்குச் சரித்திரந்திரட்டும் விஷயத்தில், அரபிக்கிரந்தங்களை மொழிபெயர்த்துதவிய கனம். மு.ஹா. முஹம்மது சரீபு ஆலிம்சாகிபு (அரசினரின் தகுதிப்பத்திரங்கள் பெற்றவர்) அவர்கட்கு என்மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும், சிரமம்பாராது இதனை முற்றும் பார்வையிட்டுத் தத்தம் அபிப்பி ராய உரைகளையளித்த அறிஞர் சகலர்க்கும் எனது நன்றி உரியதாக.

இங்ஙனம்,
ஆக்கியோன்.

---

மட்டக்களப்பு மவ்லவி மாஸ்டர்,

## எஸ். வை. செய்யது முஹம்மது மௌலானா

அவர்கள் எழுதுவது.

---

உபாக்கியான அந்தாதி, தோத்திரக்கீர்த்தனாமிர்தம் என்னுமிரு நூல்களிலும் கூறப்பட்டுள்ள விஷயங்கள் குறுஆனுக்கும், ஹதீதுக்கும் முற்றும் நேர்பாடாயேயுள்ளனவென்று நான் உறுதி கூறுகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜடாவல்லவர், மாருதி விஜயம், பரதன், நந்தனார்,
பகவத்கீதை வசனம் முதலிய பல நூல்களினாசிரியராகிய, சென்னை

பிரம்பூர் வரகவி திரு.

# அ. சுப்ரமணிய பாரதியாரவர்கள்

பாடிய சாற்றுக்கவி

## அகவற்பா.

உசாத்துணைப் பகுதி

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வளமும்,
அறிஞர்கண்டுவக்கும் அரும்பொருள் வளமும்,
மாசிலதெனு நல் வரகவி வளமும்,
மாண்புசேர் இஸ்லாம் மதத்தின் வளமும்,
கேதமகற்றும் கீதநல் வளமும்,
ஆதரம் பெருக அமைத்துத் திரட்டி,
தேனும் பழமும் ஆனினற் பாலும்,
சீனியுங்கூட்டிய தெவிட்டா அமிர்தம்,
வழங்கினன் எனவே மானிலம்புகழ,
வழங்கினன் இரண்டு வளம்பெறு நூல்கள்,

அவைதாம் :

ஒண்பொருள் காட்டும் "உபாக்கியான
அந்தாதி"யெனும் சிந்தாமணியும்,
கீர்த்திசேர் "தோத்திரக் கீர்த்தனாமிர்தமும்"
ஆகுமாலிவை தர ஆதரங்கொண்டவன்,
வினைதீர் மருத முனையெனு நற்பதி,
மேவும் யூ.எல். இஸ்மாயீலெனும்,
தண்டமிழ் இன்பம் சந்ததம் பருகும்,
தனிப்பெறும் பேறுகள் சதுரன்றானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாக்கியான அந்தாதி.

## காப்பு வெண்பா.

திருவே திருப்பொருளே தேரவருந்தேவே
கருவே கதியருளுங் கர்த்தாவே - பரிதிப்பேர்ப்
பட்டினத்திலேயுமறுட் பட்டமுயல் காதையினைக்
கட்டிக் கவி புகலக்கா.

## கட்டளைக்கலித்துறை

1 காரார்கவிக்குங் கவிகைக்கமழ் முஸ்தபாநபிபாற்
சீரார்மதினத்தைச் சேராதிரிச சஞ்செற்றகதை
ஊராருமன்னை யுறவாருந்தோற்று முருவுமிலாப்
போராரிறைவவோர் வாரத்துட்பாடப் பெலனருளே.

2 அருளுடையோனின் மிசமதாயிங் கவதரித்த
பொருளுடைராஜர் பணிமகாராஜ முகம்மதுவே
இருளுடையாகத் திணைருபி ரோட்டியிணைபரவி
வலுமுயல்காதை எழுத்தவென்வாக்கில் வரமருளீர்.

3. அருளீரென வபூபக்கரு மறுதுமானலியை
மருடீரென முகிய்யித்தீனை நாகைவருமொலியை
வருசீரிய வதுரீன்களை வாசவலி மகரைப்
பொருடாருமென்றெனற் புந்தியிலாழ்த்திப் புகல்வனரோ.

## நூன் முகம்

அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

4 உலகெலாமுலகுவாழு முயிரெலாம மைத்தபின்னர்
பலகலாநிதி சிரோனற்பராபரனவனின் றூதாய்
அலகிலா மறையினோடு அகுமது நபியுல்லாவை
மலர்குலாம்மக்க நாட்டில் மாண்புடன னுப்பினானே.

5 அனுப்பிய கவமலன்சொல்லைய குமதுநபியும்போற்றி
சனத்திரள்களினுட்சென்று சாவிலாவிறைசொல்கூறி
மனத்திருளகற்றிமக்க மா நகர்க்கரசராகி
தனத்திரள் பொலியவாங்கு தனியர சியற்றினாரே.

6 இயற்றும்மவ்வேளை வல்ல விறையருள் பொலிவதாகிப்
பயிற்றுவெண்மேக மோடிப்பரவைநீர் பருகச்சூலாய
வயிற்றினையசைக் கொணதாய் வானிடையே றொணாதாய்
கயிற்றிளையனையதாரைக் கார்மழை பொழியுமாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 பொழியும்மழைநீர் சேரப்பெருகிய நதியின்வெள்ளம்
களியுடன் கழனிதோறுங் கனபயிர் செழிக்கவைக்க
எழிலுடனாண் கடாமுமிழை மடப்பெண்கள் தாமும்
வழியுட னிறையைப்போற்றி வருநபி தமையும்வாழ்த்தி.

8 வாழ்த்தியே மக்கநாட்டார் வள்ளலைப் போற்றுநாளில்
வீழ்த்தியே கல்வணக்கம் வெறுத்துயர் மதினத்தூரார்
கால்த்தரை யடிபடாத கருணை நன்னபியைத்தேடி
வாத்துரைபுகன்று செங்கோல் வகிக்குமா றினிதுவேண்ட.

9 வேண்டவெம்மிற சூலுல்லாவிரைந்து தீன்பயிரைநாட்டி
ஆண்டுறைபசுவும் வேங்கையடி தொடர்ந்தினிதுவாழ
பாம்புடன்கீரிகோழி பருந்துடன் கிளியுலாவ
ஆண்டதை யாசுசெய்து, அவனியி லிலங்கினாரே.

10 இலங்குமாமதின நாட்டிலிறையவன் கிருபைபொங்கி
துலங்குசெங் கழனிதோறுங் கதிரிநெல்விளைவதாகி
நலங்கனிந்து திரநாடு நாடியேயிறையையேற்றி
கலங்குதற் கனவுமின்றிக் கடைகளுமுயர்ந்தமாதோ.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

11 கடைகளுந்தெருவுமாளிகை யெவையுங்கனகங் கொளிரைச்சலினார்ப்பும்
தொடையலாணிந்த வணிகரிபாலந் துலங்கிய செழுமையினார்ப்பும்
தொடரிடியெனலாய் வருமொலியாய திருமுகம்மதுஸலவாத்தும்
திடிர் திடிரெனவேதிருமதினாவிற்றிசை தொறுமிசைவனமதியே.

12. மதிமிகவரலாற் சுதைமிகவிளங் மலையெனத்துலங்கியமாடம்
நிதிமிகப்பெருகித்தருமமும் வளர்ந்துநேர்மையும் வணக்கமுமிலங்க
நதிவரப்பெருகல் புரையதீனவர்பால் நாயனைத்தொழுந்தவமோங்கி
பதிகளுக்கணியாய்ப் புவிதனிலிலங்கும் பரனருள் பெருகுமாமதினம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 மதினநன்ன கரிற்றிருமுகம்மகனார் மணியணையமருமக்காலை
பதிகளுக்கரசாய் மதினநன்ன கரும்பரவிய வூர்களுஞ்சிறந்த
அதிலுடையூருட் சிறியவோர் கூறாமாதித்த னென்றுரையூரில்
மதியுறழ் வதனத்துமறெனும் பேரன்மாண்புடனிருந்தன-
னந்தோ.

வேறு

14 இருந்துவாழ்ந்தவு மறெனுமேழைதான்
தெரிந்துவல்ல விறையவனைத் தினம்
வருந்தியன்னவன் வாயுமகமு மொத்
தறிந்துபோற்றி யருட்டலைக் கெட்டியே.

15 எட்டியிவ்வு மறேகியடர்புதர்
வெட்டியூரினைக் கிட்டியதைவிற்று
கட்டுமாடையுங் காய்கறியாதியுந்
திட்டமாய்ப் பெற்றுச்சீவித்துவந்தனன்.

16 வந்தநல்மிருகங்களைக் கண்டநாள்
பிந்தவேகித்தன் நாய்களுடன்வந்து
குந்தியே பதுங்கிப்பதுங்கித் தொடர்ந்
தந்தமானையணைப்பனவனுமர்.

17 உமறவனொரு நாளிற்றனதுமூன்
றுறுமு நாய்களுடனுமடவிபுக்
கெவருங்காணாப் புதர்களகற்றியும்
ஏதுமங்கிலா தேங்கிமயங்கினான்.

18 மயக்கமுற்றவு மறோர்மரநிழல்
அயர்க்கத்தன் கரங்கால்களுஞ் சேர்ந்திட
வியர்க்கவந்தங் கிருக்குமவ் வேளையில்
வேடன்கண் முனோர்வெண் முயல்வந்ததே.

வேறு

19 வந்தமுயல்கண்டவுமர் சிந்தைகனிவாகி
குந்தியமர் சூரர் தமைக்கூவி யெதிரேவி
உகந்தியிவணோடிவருயர்ந்த செவியோனைப்
பந்தனைகள் செய்ய வெனப்பாங்குடனே நாடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 நாடியுமர் நாய்களை நடத்தலுமவை போய்த்
தேடிவெண் முயற்புதரைச் சீலமுடனண்டி
பாடிமுயலோடிடாது கூடியே வளைந்து
சாடிமுயலான தினைத்தேடி நின்றனவே.

21 நின்ற மறைநாய்களினைக் கண்டமுயற்சேய்கள்
நேசபுதரான தினைத்தேடியே நுளைந்து
வென்றிபுரி நாய்களினை யஞ்சியே யொடுங்கி
வேதநபி பாதமெனவேண்டி மறைவாக.

22 மறைவாகநின்ற பெருமா முயலைக்கண்ட
மறைநாய்க ளோடியதன் மார்பிட ரிதீண்ட
இறைபாதமென விதயமுறு நாதமுயலும்
பறைவாக வோரொலியைப் பரிவினொடுகாட்ட.

23 காட்டவரு சத்தமதைக்கேட்ட முச்சசமும்
கூட்டமுடனின்ற வுமர்வேட்டை யினைக்கண்டு
நீட்டுசெவி காட்டிடாது கூட்டுவிழியதனால்
வாட்டமுடனன்னை யுறுவாதை கண்டனவே.

24 கண்டனத மன்னையது காதையொரு நாயும்
துண்டென விரைந்தொருநாய் கண்டமதுதனையும்
நிண்டமறுநாயயினையி னீண்ட நெஞ்சினையும்
ஒன்றவே கடித்துமிக வூறுசெய்தனவே.

வேறு

25 செய்தந் நாவரண்டு சோரச்சேயவை மூன் றும்வாடி
நையவே யுடலயர்ந்து நாயவை செயலைநோக்கி
உய்யவேவகை யின்றையோ ஊழ்வலியிதுகொலோவென்
றையனாம மலன்பாதவடி யகமிருத்திக் கூறும்.

26 கூறுமெம் மன்னையானகூன் முயலதனை நீவிர்
ஊறுசெய்யாதே யெம்பாலுரிமை செய்தனுப்புமையா
வீறுகொண்டன்னை தன்னைவீணிலே கொல்வீரென்னில்
கூறுமெம்மூன்று பேரைக் கொலைசெய்தபவமுமாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 ஆருமே யிரங்குவார்கள முதறாக் குழந்தையாமும்
தாரிலேயுணவு தேடுந்தகுதியை யடையாப்பாலர்
தாரீரோ வெமதுதாயைத் தண்ணபிதா ஹாதம்பேர்
கூறியவரிசை நோக்கிக் குறைதனை யகற்றுவீரே.

28 அகற்றுவீரென் றவார்த்தை யறைதலுமெகினரஞ்சி
இகத்தினில் நடுக்கமுற்றே யிறையு மறவனைநோக்க
செகத்தினிலெங்குங் கேளாச்செய்தியை யிவணான்காண
வகித்தவெனிறை வவீதோர் வருமதிசயமென்றோதி.

29 ஓதுவானுமறுமாங்கணுறு முயற்சிசுவைநோக்கி
தாதுபாய்மதின நாட்டில் தாஹாமேலாணைநீட்டி
வாதுகள் புரியவீங்கு வருசிறு தோழீர் கேளீர்
நீதிகள்புகலாதேகி நீவிரும்புதரைச் சேர்மின்.

30 சேர்மினென்றுரைத்து வேடன்சிந்தையிற் கருதலுற்றான்
பார்தனி லறபிப்பாஷையால் முயல்பகர்ந்தவாறும்
கார்தனிற்பிறை யழைத்தகருணை நன்னபி மீதான
சீரிதினுரைத்தவாறும் சிறுமனந் துணிந்தவாறும்.

31 துணிந்தவாறிவற்றையோர்ந்து தூய்மன வேடன்றானும்
அணிந்தவை யகத்துட்கொண்டு ஆங்குளமுயலைநோக்கி
பணிந்துயான் போற்றுந்தெய்வ லாத்தின் மீதாணையாக
துணிந்திதையறுத்துண் பேனானென்றலுஞ் சேய்கள்கூறும்.

32 கூறுமவ் வாத்தைகேட்ட குட்டியாம் முயல்கள்மூன்றும்
வீறுகொளெகினனோடு விரையுமவ்வுமறை நோக்கி
நாறுதார் நபியுல்லாவை நாமடைந்து துயர்நீக்க
ஊறுசெய்யா தெந்தாயையும் தகமிருத்திக் கொண்மின்.

வேறு

33 கொண்மின்னென வவைகூறிடக் கோதுற்ற தென்றவனும்
கண்முன்னுறை முயலின்னது கால்கள் தமைக்காட்டி
விண்மின்னென விரைவின்னுமர் வீடுற்றிதை வைத்துப்
பண்முன்னுள மகன்றன்னை நற்பரிவின் னொடழைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34 அழைத்தேய கந்தளைத்தேயுள வெளுத்த முயலதனை
குழைத்தோடிடு முடுவல்புதர்வளைத்தே பிடித்ததையும்
இளைத்தேவருமுயல் மூன்றவை விடுத்த கதைதனையும்
களைத்தேயுமர் கனமாதிரி விரித்தே புகன்றனனால்.

ஒன்பதின் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

35 புகன்றபின்னரு மகன்றனார்முக
மலர்ந்த தாமரையுலர்ந்து நோக்கியென்றசுதா
அகன்றமும் முயனவின்ற வவ்வுரை
அறபியாகிய நளினபாஷை யிலாதலின்
மறைந்தமாமதி நிறைந்துமே வர
வழைத்தமா நபிகுறித்து மோதிய தாதலின்
சிறந்தவிம் முயலுறுந் துயர்களைந்
தருந்துபாலினி லருந்துமாறு கொடுத்திடாய்.

வேறு

36 கொடுத்திடாயெனவு மறுக்கூறக் குமரனார்விழி தாரைசாய
அடுத்தேயாங் குளபாலிற்சிறி, தன்னைவார்த்திட வாங்கிவந்து
பிடித்தேமுயலினைக் கட்டுடனே பீங்கானதன் முன்னேவிட-
முயலும்
துடித்தேயாங்குள வமுதைநோக்கித் தூய்மையொடு நனி-
கூறுங்கொலோ.

37 கூறுமாங் குளவமுதை நோக்கிக்
கூடிநிற்போர் தம்மக முந்தாக்க
தாரு மமுதினையா னருந்திற்
தனியே யிருக்குமென் குட்டிமூன்றும்
பாரிலிரைதேட வறியாதவை
பட்டினியாச்சே மூன்றுநாளாய்
சேருமமுதினையா னருந்தச்
சிந்தையெள்ளு தென்றமுதததுவே.

 பதிப்பாசிரியர் : ஐ.எம். வதுறுல் பௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38 அழுதமுயலது துயரங்கேட்டு ஆங்குகூடிய வுமறுவீட்டார்
பழுதுவந்ததென்றிறை கனஸ்தைப் பாவமன்னிப்புத்தேடி-
னோராய்
அழுதமுயலினுமதிக துயரடைந்தவாறு போலழுதழுது
புழுதிபுரளவே மணலைவாரிப்போட்டு வீரிட்டொப்பாரியாக.

39 ஒப்பாரியாகவுமறுவீட்டில் ஓவென்றழுஞ்சத்தங் கேட்டயலார்
அப்பாவிவர்களுக்குற்றதே தென்றாய்குவோமென வகத்தை-
நாடி
தப்பாதுமக்குற்ற மிடியைச்சொல்மின் தணித்துவிடுகிறோ-
மென்றுகூறி
நிற்பாருமறுட மனைவியாளும் நிகழ்ந்ததைச் சொன்னாளல்ல-
லோடே.

40 அல்லலிதுபடக்காரியமோ அடியேங்களுக்காரும் பாக்கியமோ
வல்லவினையெல்லா மெங்களகம்வந்த தெம்முடைத்தந்தை-
மாரே
எல்லையுலகினி லினியிருக்கேம் ஏதுவிளையுமோ எங்களுக்கே
கல்லுமுருகுமிம் முயல்கூறிய கருணைவாக்கியங் காதிலேற.

41 காதிலேறியிம் முயல்கூற்றது கடியநாராசம் போன்றதம்மா
ஏதுசெய்வதென்று மறுபாரி ஏங்கியேங்கியே யலறிடலும்
சேதிநன்றிது காணிம்முயல்செப்பியது போலெம்முன் செப்-
பிடில்
ஆதிநபியினை யாமுவந்தே அவர்க்குக்கலிமாவு முரைப்போ-
மென்றார்.

42 என்றவாசகங் கேட்டவுமர் எழுந்தோர்பானையிற் பாலை-
வார்த்து
மன்றில்வந்துள மனிதர்சூழ மையஸ்தானத்தில் முயலைவைத்து
நன்றியுடனந்த முயல்முன்பாலை நாயகிகையால் வைத்திடலும்
கன்றையிழந் தலறானதுபோற் கதறிமுயலது அறபினாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43 அறபினாலே யம்முயலானது ஆங்குவைத்துள லமுதைநோக்கி
தரையிலீன்ற வென்குட்டிமூன்றும் தனியேபுதர்தனிலுறை-
கின்றன
குறையுந்தாகமும் பசியினோடுங்குட்டி மூன்றுமப்புதர்தன்-
னிலே
சிறையிலிருக்கயான முதமுண்ணச்செய்த பாக்கியம் நன்று-
நன்றே.

44 நன்றாமமுதினையெனக் களித்தநாயனென் பறழ்களையுங்காத்து
வென்றிமறை நபியவரருளால்விரகிலென்வச மனுப்பி-
வைப்பான்
நின்றாய்மனிதரே யிதையளித்த நீதவிறைநபிக்கே சோபனம்
என்று கூறியாங் குள்ளபாலை இனிதுகுடித்த சுமகிழ்ந்ததாலோ.

45 மகிழ்ந்துமுயலுறை வசனங்கேட்டு மன்றமதில்வந்த மனித-
ரெல்லாலம்
புகழ்ந்துமாநபி புறுக்கானையும்போற்றிச் சோபனங்கூறி-
வாழ்த்தி
இகழ்ந்துகடவுளாம் கனஸ்திலாத்தை யேற்றிநபி கலிமாவை-
யோதி
நிகழ்ந்தயாவையு மவண்பரப்பி நேசித்தே மெச்சினார்நபியை.

46 நபியைநம்பியகுருளை மூன்றும் நாடிமூன்று நாட்புதருணின்றும்
அவியவேதம தாவிசோர ஆசையன்னையைக் காணாததால்
புவியினணியானமதினபதிபோ யெமண்ணலைக்காண்போமென
நபிமுகம்மதர் நகரைநாடி நன்றிமுயலவை சென்றனவே.

47 சென்றமுயல்களெம் நபிபாற்கொண்ட சிறந்தநம்பிக்கை போ-
லயாமுங்
கொண்டல்குடை யிடுமகுமூதர்பால் குவலயத்தினிதுறுதி-
கொள்ளில்
சென்றநாடுகளெவையு நம்மைத்தேடி நாமுறைவீடுநாடி
நின்றுநம்மடி பணியுமென்று நிகழுங்கதை தனாலறிவீர்களே.

48 அறியுமுயலவை நபியைத்தேடி அழகின்மதினாவுக் கேகுமந்த
நெறியில்வன்னிப்பே ரோடையண்டை நின்றுமுயல்மூன்றும்-
பார்த்தபோது
செறியுமம்பு வில்லாதியோடு சீலகுணவிளமாதொருத்தி
குறியினிவைகளப்பார்த்தவாறே கூடிவந்தனன் நாடிவேட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49 வேட்டைநாடி யிம்மாதெந்நாளுந் தோட்டந்தோட்டமாய்த்-
திரிவள்விளி
காட்டுமிருகங்கள் புறவினமும்பாட்டு நடினத்தோடாடித்தேடி
வீட்டைநாடித் தன்றந்தையான வேந்தன்வ அதாவையுவப்-
பிப்பவள்
கூட்டமாய்வந்த முயலைக்கண்டு கூக்காளத்துடன் பிடித்துக்-
கொண்டாள்.

50 பிடித்துமுயல்களின் விழியைநோக்கப் பிறமும்விழியினீர்த்-
தாரைசாய
எடுத்து, அவைகளைவ அதாமகள், இனிதுநோக்கவே முயல்-
கள்கூறும்
தொடுத்துஎமைச்சாரும் மிடிமையீதோ, தூயநாயனேயென-
வறபால்
படித்தநல்லுரை கேட்டதோடு, பாவைமயங்கியேமுசலைநோக்கி.

51 முசலைநோக்கி யம்மடமானவள், மோசம்வந்ததென்றுரைத்த-
தோழீர்
வசையிலும்மை வந்தடுத்ததேது வழுத்துவீரெனவவை-
கூறிடும்
முதலேயா மெமதன்னையோடே, மூடுபுதரிடையிருக்கும்போது
கதறவெமதன்னை தன்னையுமர், கானில்வேட்டைய தாடிச்-
சென்றான்.

52 சென்றவு மறவன் தன்வீட்டிலே, சிறைவைத்திருக்கிறானெம-
தன்னையை
சென்றுமதினமன்னகு மதர்பால், சேதிகூறிடச் சிறியேம்வர
நின்றுவழியிலே நீரெங்களை, நெருக்கிப்பிடித்திட்டீர் நெறி-
யிதாமோ
அன்றுமான் பிணைநின்றநபி, அடிமைகளை விடுவித்திடாரோ.

53 விடுவித்திடுவரெம் நபியென்றந்த, வேகமுயற்குட்டி மூன்றும்-
வெகு
கடுசத்தத்துட னறபுப்பேச்சால், கலக்கமறக்கூறுங்காட்சி-
கண்டு
படபடத்துடல் நடுநடுங்கிப், பதறியாருயிர் சிதறமாது
பிடிபிடித்துளகர நெகிழ்ந்து, பேதைமயங்கியே யுரைசெய்-
வாளால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54 உரைப்பாள் முயல்களையுரிமைவிட்டே, உமதுநபியைக்கண்-
டுளதுகூறி
சிறப்பாய் வருமதன்னைமீட்கச் சேரும்படைகளோடாதித்
தன்பேர்க்
கரைப்பாழ்வன முளவூரைநோக்கிக் காதலுடன் வருவேளை-
யான்கண்
டிரைப்பாயவர் கலிமாவையோத, உரைப்பாயென்னுடனு-
வந்துநீயே.

55 நீயென்னோடுரை யென்றவார்த்தை நெஞ்சிலிருத்தியமுயல்கள்-
மூன்றும்
தாயன்னாளிடம் விடைகள்பெற்றே தனியோனருள் மதி-
னாவைநாடி
போகமதின மாவூரோரெலாம் புதுமைபுதுமையென்றவை-
பின்னோடே
ஏகனிறை முஹம்மதரின்வாசல் ஏகிமுயலவை சலாங்கூறியே.

56 சலாமுடன் முகம்மதரைமுயல் சாலுமரியாதையோ டண்டியே
கலாவுநறை, நபிகாலணைத்துக் கண்கள் தாரையாய் நீர்ச்சாய்ந்திட
நிலாவுதனை நிகர்வதனம்வாடி நீவிரமுவதே நிகழ்ந்ததேதென்
றுலாவுகார் கவிழ்கவிதைநபி, உபசரணைசெயவு வகையோடே.

57 உவகையோடு மும்முயற்குட்டியும் உண்மைநாதராம் நபியை-
நோக்கி
கவலையுறப்புதரிருந்தவாறும் காலனுமறன்னை கவர்ந்தாவறும்
வருந்தியுமறக மன்னைதங்கி வள்ளலடி போற்றிவாழுவாறும்.

58 வாறுபல பல்வகையுமண்ணல் வரிசைநிறை மதிவதனநோக்கிக்
கூறியெமதன்னை தன்னைமீட்டுக் குவலயத்துறுமிடி போக்குவீர்
நாறுதாரணி நாதரேறே நபியேமுஹம்மது முஸ்தபாவே
கூறுமென்பிணி போக்குமையா குறைஷிகுலமணி நவநீதரே.

59 நீதர்முகம்மது முஸ்தபாவும் நிகழ்ந்தகாரியங் கேட்டவ்விடங்
கூடியுள பலவறிஞரோடு, குளறுமுயல்மிடை தீர்க்கவென்று
வேதரலிதமை யழைத்துவர வீரனொருவனை யனுப்பவந்தார்
காதலகு மதரலியினோடு, கலந்துபின் வருமாறோதுவார்.

 பதிப்பாசிரியர் : ஐ.எம். வதுறுல் பௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 ஓதுவார்நபி யலியைநோக்கி உறுதிகொண்டெமையடைந்த-
முயல்
வேதனை தனைத்தீர்த்தல்விதி வேண்டும்படைகளைச் சேர்ப்-
பீரேன
நாதர்புலிய லிவிரைந்துசென்று நாற்பாற்படையுடனபியை-
யணடி
பாதமடி படாப்பயஹாம்பரோ, பரியிலேறுமினென விண்டனர்.

61 விண்டஅலியுரை கேட்டநபி விரைந்துவீரர்கள் பலரினோடும்
அண்டவமார் பூவடிசுமக்க அதிகஒட்டகை குதிரையேறி
கண்டசிறுமுயல் மூன்றினையுங் கதறுகோவேறு கழுதையேற்றி
விண்டுகழ் புகுந்தினிதுமாய வீரவெறியுடனே கினாரால்.

62 ஏகுமகுமது நபியொட்டகை போகும்வன்னியா மோடைகாண
வீழ்குமுயலவை பூமிமீதில் வேதமுஹம்மத ரிதுவென்னென
வாகுபெறநாமுன் வருமந்நேரம் வஅதாவுடைமகள் வந்தித்-
தெமை
போகும்வேளையில் யாமலறப் புந்திவருந்தியம் மாதுவிட்டாள்.

63 விட்டம்மாதெங்கள் விஷயமோர்ந்து வேசமயிலரிவ் வீதியூடே
கட்டுசேனையோ டேகும்போது காட்டுமாறெமைக் கேட்டு-
நின்றான்
துட்டர்தமை நெறிநாட்டுவேந்தே துரிதமாயவள்கண்டுநாம்வந்
திட்டசெய்தியை யவள்முன்கூறி, விட்டுவர விடைதாருமையா.

64 தாருமெனவிடை நபியருளித், தரித்தார்முயல்களி லிரண்-
டைத்தம்பால்
ஏறுகழுமையி லிருத்தியொன்றை, ஏகவிட்டனரிறை தூதரும்
போகுமுயலதுவ அதாமகள் புனிததோப்பினை யடைய-
வோர்நாய்
வாகுபெற முயல்மீதுபாய, வரலுமுயலது வாய்திறந்தே.

65 வாய்திறந்தவண் வருசூரனை, வண்ணமுயலது நோக்கிக்கூறும்
ஓய் சினந்தெனை நெருங்கவேண்டாம் உலகரட்சகர்முஹம்-
மதுதம்
பாலிருந்துயான் வந்தேனெனப் பகரஞமலியும் பதறியோடும்
தாய்சிறைமீட்கும் முயற்குட்டியும் தாண்டிவ அதாவின்மனை-
கண்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
உசாத்துணைப் பகுதி

66 கண்டதே மலர்ச்சோலைநாப்பண் கனகமாளிகையான தினை
விண்டுகூற வேலாததனில் விரவுமுத்திரத் தினத்தினெண்ணை
சென்றமுயலதுவ அதாமகள் துஞ்சுமாளிகை தன்னையண்டி
நின்றுஓரொலி கூவிடலும் நேரிழை விரைந்தோடிவந்தாள்.

67 வந்தவ அதாவின்மகளானவள் வண்ணமுயலினை எடுத்-
தணைத்தே
எந்தனிருகணின் மணியேயுனை இன்றுகாணநான் செய்ததே-
தோ
கந்தநபியினைக் காட்டென்னலும் கடிதின்முயலது சென்று-
காட்ட
புந்தியுருகி நல்லொளிவுமாரப் பேதைகலிமாவை யோதினனே.

68 ஓதிவிரைவினிலகத்தை யடைந்துற்ற செய்தியை யுணர்த்த-
வவள்
தாதைவ அதாவுந்தாயுந்தம்பி சகலருஞ்சென்று நபிமுன்-
னின்று
லாஇலாக இல்லல்லாகுநல், முஹம்மதுர்ற சூலுல்லாகியென்
றோதிநபி தமையுண்மைகொண்டு, உளநல்லுபதேசம் பலவுங்-
கண்டு.

69 கண்டுநபி தமதடிபணிந்து, கனகமாலையும் மணிமுத்தாரமும்
கொண்டுமுறை முறைநபியையேற்றிக் கூறுங்கலிமாவோ-
டகத்தைநாடி
பண்டுவழிமுறை தெண்டனிட்ட பாரக்கற்களை யுடைத்துவீசி
அண்டர்புகழ் புறுக்கானையோதி அகத்திலிருந்தாரே யவ-
ரெல்லோரும்.

70 அவரெல்லோருந்தம்மனையேகிட, ஆதிநபிமுஹம்மது சல்லமும்
பவனியாய்ப் பரிமீதேறிடப் பாயுமலிப்புலி பாங்கேகிட
நவமுடன் வருஜெயவீரர்தாம், நாடியொட்டகை குதிரையேற
தவமிOகுந்தவம் முயல்கள்மூன்றுந் தாவிக்கோ வேறுகழுதை-
யேறி.

71 ஏறியாவரும் வன்னியோடை, இனிது தாண்டியே சேறக்கண்டு
வீறிட்டலறுவான் போன்றாங்குள வீரவிடைமக னொருவன்-
விரைந்
தூறுபுரிபடை யூரண்டமுன் உளதைமன்னருக்குணர்த்துமாறு
நாறுமலர்ப்புய நபிசேனையை நாட்டுமன்னனுக் குரைசெய்-
வானால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72 உரைசெய்வான் தனதாதித்தலூ ருடையபுஸ்ப குராசன்தனை
விரையவேகி மன்னடிபணிந்து வேந்தவெம்முறை கேட்டாள்-
குவீர்
தரையிற்சீரிய மதினவேந்தாம் தண்ணிலாநிகர் வதனத்தேசர்
புரையவவர் தமைப்போற்காண்கிலேன் புண்ணியர்பெயர்-
முஹம்மதாமே.

73 முஹம்மதாமவர் முகத்தினேர்மை முழுதுங்காண வென்விழி-
கூசின
தகைமையோடவர் படையினூடே தாளவீரரா யொருவர்வாறார்
பகலுமிரவுமா யுலகுயாவும் பரவியேறினும் பாய்ந்துசீறி
ககனந்துகளௌளவுயிரை யோட்டுங் கடியவீரர் பேரலியதாமே.

74 அலியுமுஹம்மதுங் குழுவிநாப்பண் அமரவவர்புடையறபிவீரர்
நிலவுமதன்புடை நிறைமீனும்போல் நிகரிலெழிலுடன் வரு-
கின்றாரோ
உலகிலவர் படைமிகவீரிய, துடைக்குப்படை யெங்குமில்லை-
யாமெங்
கிவர்கின்றாரென ஏழைகாணேன் ஏந்தலேயெம திறைசிங்கமே.

வேறு

75 சிங்கமுஹம்ம தங்குவருஞ்சே தியறிந்த
அங்குசுவிலங்கு மாடவரெல்லா மறிவேக
இங்குவரின் னெம்முயிரெம லோகம் மிவரும்மே
எங்குமறைந்தெம் மினனுயிர்காப்போ மேயாவா.

76 ஆவானென்றே யஞ்சினராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவிளிகொண்டா ரொருசாரார்
மாமாவென்றே மன்னடிவீழ்ந்தா ரொருசாரார்
ஏகாநீதாவென் செய்துமென்றா ரொருசாரார்

வேறு

77 சாராரமைச் சரைராசன்நோக்கச் சாற்றுவாரெம தரசரேறே
பேரார்முகம்மது மலியும்வரிற்போராங்லி வெல்வதுமாளாது-
தான்
காரார்குடைநபி வரமுன்கன, கனகமாலையும் மணியினோடும்
தேரார் வழியிலேசென்று கூடித்தெண்டனிடுவதே முறை-
யென்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78 முறைமையீதென வமைச்சர்கூற, முடிமன்னனு மொப்பி-
யிருக்கும்போழ்தில்
பறைகுவானொரு பிரசைவந்து, பணிந்துமன்னடி புகழ்ந்து-
போற்றி
நிறையுமன்னனின் னடிமைகூறும் முறைமைகேட்டருள்-
ளெனமன்னன்
அறையும்விடைபெற்று ஆதித்தனூ, ருமறுகூறுவா னெழி-
மையோடே.

79 எழிமையோடி யானெகினனோடு, எழுந்துவேட்டை மேற்-
சென்றபோது
செழுமையான வென்முயலைக்கண்டு, சிரமத்துடன் பிடித்-
திருக்கும்போது
விழுந்தது மூன்றுமுயற்குட்டிகள் விரைந்துதா யினை-
விடுவிக்குமாறு
நளினமாயு யரறிபினாலே நவிலநானிணங்காததாலே.

80 நானிணங் காதவாறுகேட்டு நபிமேலாணையிட் டன்னைதன்னை
நானிலத்தினி தறுத்திடாதே நபியைக்கூட்டியாம் வருமாட்டாக
மானினைப்பிணை மீட்டதேவர்வரவைவழி பாருமெனப்பல்வாறு
கானிலென்னோடு கடுவாநாடி, கடிதின்மதின மாபதியைநாடி.

81 மதினாமபதி நாடிமன்னர் மகுமூதவர்துணை தேடிமீண்டு
சுதியினோடவை னைமன்னரோடுஞ்க வனவலியொடும் வீரரோடெம்
பதியையடுத்தன விதைக்கேட்டருள் பரிதிமன்னவென்று-
மறுகூற
மதியையழைத்த நன்னபிவருகை மன்னனவற்கு நல்மகிழ்-
வூட்டிற்றே.

82 மகிழ்வினோடு மாராயத்தோடும் மனதிநாணொடும் வியப்பி-
னோடும்
தகையின்புஸ்ப குராசரேறு தனதுமண்டபத் துமறைநோக்கி
சுதைவணச்ச சமதனையீங்கு சேர்ந்துவிடுதி யென்றலும்-
வேடுவன்
பதைபதைத்துளம் வாடியோடிப் பாரிபாலுரை யாடித்தேடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83 தேடிமுயலினையு மறுதேம்பித் திருவினரசு பாலருளவேந்தன்
கூடியுனையடர் மிடிகூறெனக் கூம்பிமுயலது கூறுமாமே
சூடிஆதித் தப்பேரினோடு துலங்குமூரி னினயற்காட்டிடை
கூடியெனதுடமக்களோடு குலவுவேளை கண்டானிவ்வுமர்.

84 உமறுகண்டு தன்றிரிசூரரின் உதவிகொண்டெனைத் தனதாக்-
கினன்
எமதுசேயவை மனதுவாடி இறைமுகம்மத ருதவிதேடி,
தமதுதாயினைச் சிறையின்மீட்கத் தக்கபடையொடிவ்வூர்வந்தன
எனலுமன்னு புஸ்பகுராசனும் அனிதுகூடி மந்திரியினோடே.

வேறு

85 மந்திரிமுகனோக்கி மன்னனு மகிழ்வினோடுரை பகருவா
னெத்தனாருயி ரன்பரேயி:. தெங்குசுமேறிக ழாததே
வந்தமாமுயலுந் தீபூத்திவண் வழுத்துமா வறபிப்பதம்
சிந்தையேடென துந்தியாவதுஞ் சென்றுநின்று சிறக்குதே.

86 சிறக்குமாபதி தனக்கதீபதி திரண்டெமூரை யடுக்குமுன்
நிறக்குமாமணி சிறக்கவேகொடு வெதிர்க்துமாவடிதொடுக்-
குநற்
றாத்தரேயே யென்றுரைத்து புஸ்பகுநினைத்து வோதலு-
மாங்குள
பாத்துமாவிசைய மைச்சர்சீரி தென்றுரைத்து வாங்கமர்-
வேளையில்

87 வேளையின்னொடிகாளைய சுஹபிவீரர் தம்முளிலங்கிடு
நூழைசாலொரு வீரரைமுகநோக்கி மாநபி சாற்றுவார்
தானையொடுநபிகூடி யும்பதி தரவுமுன்னுமர் தன்னகம்
கோனைநம்பி யுளத்திருத்திய குருகுமா முயலன்னதை.

88 குருகுமா முயலன்னதை வெகுவிரைவி லெம் மிடமாகவே
தருகிலுன்னுயிர் நகருயாவதுந் தப்புமேயிது நிச்சயம்
திரிபுளத்தொடி ருக்கிலகுமதர திகவாயிரபயிரினை
விரியுமாநகரழியவே வெகுவிரைவி லீங்கண்விடுப்பரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89 விடுப்பரேயென வுரைத்துவாவென வேதநபி விடுதூதனும்
நொடிக்குளேயவ ணடுத்திராசனை நோக்கி யீதுரைசாற்றிட
இடிக்குளேயிடிதொடுப்பவதனிடை படுத்தபாங்கென-
மன்னவன்
நடுக்கமோட சுகாபிதன்னொடு நவில்வனே வெகுநரைவொடே.

வேறு

90 நசைவொடுநாத நபியெமதூரை நண்ணினரென் றுரைகேட்டு
பசைவொடுபாதம் பணிகுதுமெனவே பண்புடைனபி யகமேக
வசைவொடியாமும் பரிசனரெவரும் வருமுரையோரு-
மிவ்வேளை
குசைதொடு கரத்தீரிவணைமை யடுத்தீரிதை யுரைத்திடு-
னபியவர்பால்.

91 நபிமுஹம்மதர் பாலிதையுரையெனலும் நசைவொடு அசுக-
பியேகி
நபிமுஹம்மதர் பாலிதையுரைத்திட நன்னபியலியார் தமை-
யழைக்க
நபிமுஹம்மதர் பாலலிவரவிதனை நாதருமலி யொடுநவில,
நபிமுஹம்மதரு மலியுமற்றவரும் நன்றென வமர்ந்தனராங்கே.

92 ஆங்குபுஸ்பகுவு மாதித்தனூரி னரியருமைச் சுமற்றவரும்
தாங்குபொன்னோடு தளிர்விடுமணியும் தருமுமர் துகில்முய-
லதுவும்
ஓங்குமாநபி பாலுரிமைகள் செய்தேயுவப்புடனுளமுருகிடலும்
பாங்குளவலியும் பரிசனரெவரும் பரிவொடு கடவுளைப் புகழ்ந்தே.

93 கடவுளைப்புகழ்ந்தே நபிதமைச்சேர்ந்த கனமுடியரசனை-
யமைச்சை
திடமுறவிருத்திமு அதினைவிழித்து திருமுயற்குருளை மூன்-
றினையும்
கடியொடுகொணரு மெனவுர்கொணர்ந்து ஹாமீதுநபி-
முனர்விடலும்
கடியுறுவடி கடமைத்திடமுடனே கலந்தவையுரைத் திடு-
மறபால்.

94 அறபிகளணியே அஹ்மதுநபியே அமலனி னருளுடை-
மணியே
குறைஷிகண்மணியே குவலயத்துயிர் செய்குறைதவிர்த்-
திட வருகுருவே
பொறையுநனிறையும் புல்லர்தங் குறையைப்போக் கிடுசீ-
ரியநறையும்
நிறைவருநிசியே நினதடியெனவே நிரைத்தன பலபலமுயலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

95 முயலிவைபலதுமோதி முஹம்மது நபியைநோக்கி
தயவுடைத் தருமவேளே தாயினையருளுமென்னுஞ்
செயலிதை யறியும்வேடன் சீரியச சங்கள்தம்மை
பயல்களே யுமதுதாயைப் பண்டியானறுத் துண்டேனே.

96 உண்டன னுமதுதாயை யென்றலுமு மறைநோக்கி
முண்டகக் குருளைகூறும் முஹம்மது நபிமீதாணை
கொண்டவெம்தாயை நீயுங் குறியுட னரிந்தாயில்லை
இன்றது உனதுபாங்கு விருக்குது கேட்டியென்ற.

97 கேட்டியென் றிவைகளாங்கு கிளர்மொழி கேட்டதாயும்
பேட்டிகொண்டாடி யாங்குபிறை நிறையெனுறகூலை
காட்டினிலலையுங் குட்டிக்கருமுப காரியானீர்
வாட்டமத கற்றுமையா வள்ளலே யெனதுவாழ்வே.

98 வாழ்வுட னிறையுஞ்சேயும் வரிசையி னளித்தவாழ்வே
தாழ்விலா வுமதுபாதந் தனையணை தகுதிதந்தோய்
நீழ்குலா மறுமைவேளை நிகரிலா விறைமுன் கேட்போய்
வேள்குலாவியகஞ் சாரவிழைந் தனனுமது சீரே.

99 சீருடையிறை யொன்றென்றும் திருவிறசூல் நீரென்றும்
பாரிடையுதித்த தேவே பலபலதரமு மோர்ந்தேன்
தாருடை யரசமூன்று குருளையுந் தாயெனானும்
சீருடைகலி மாவோதிச் சேர்ந்தனமுமது பாதை.

100 பாதையிதரியபாதை பண்புடனண்டி நன்கு
காதொடு மனமொடுக்கிக் கலந்திடுலெழிது கண்டாய்
வேதனை யகற்றும்பாதை வெகுநல மளிக்கும்பாதை
தாதனினரியதூதர் நபிமுஹம்மதரின் பாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101 நபிமுஹம்மதரின் பாதை நமதக நசலையோட்டும்
நபிமுஹம்மதரின் பாதை நமதுயிர்க் கறிவுகாட்டும்
நபிமுஹம்மதரின் பாதை நாளையி லெமையீடேற்றும்
நபிமுஹம்மதரின் பாதை நாடினோர் தேடினோரே.

102 தேடினோர்பலருமாங்கு திருமுஹம்மதுவின் பாங்கு
கூடினோரரசனோடு குலம்பல பலவுமாக
நாடினார் கலிமாவோடு நமதுயர் நபியுல்லாவை
கூடினார் நபியுமாடிக் குழுவொடு களித்துமாதோ.

103 களித்தன ரிறைறசூலும் கடிகலிமாவையோத
புளிந்தனன் மொழிந்துமன்னன் புஷ்ப்பகு தானுமோதி
மொழிந்தன ரமைச்சரோடு முறைமுறையாக பலருமாக
மொழிந்தனர் லாஇலாக இல்லல்லாகூ வென்றாங்கே.

104 ஆங்கமர் முயல்கள் தம்மை யவையுறை வளத்திற்காக்கி
பாங்குறை புஷ்பகோடு பரிவாரம்பலவுமாக
வான்குறை யாதுபேய வரப்புயரூ ருக்காக்கி
தேங்கமழ்தேய மீழத்திரும்பின ரெமதுவேந்தர்.

105 வேந்தரெம்மிற சூலுல்லாவிரைய லிப்புலியுல்லாவும்
பாந்தலையெதிர்த்த வேகப்பலபல படைஞராரும்
போந்தனைபுய பராக்கிரமப் பெருபொருளரோடு
சாந்தையிவிலங்குஞ் செல்வஞ் சால்மதினாவெனூரை.

106 ஊரினிலெமதுகோனும் உமறுதுமானுஞ் சித்தீக்
வீரியவலியுமாங்கு வெகுமன விழைவினோடு
சீரியவிறையின் சத்யஞ் செறியிசு லாத்தையேற்றி
பாரினிலிருக்கச் செல்வப்பரனருள் சொரிந்தமாதோ.

வேறு

107 சொரிந்த மாமலர்சூழச் சிங்காதனத்
திருத்தவத் துடனின்ற முஹம்மதர்
கரிந்த கூந்தனற் காரிகையாரொடும்
தெரிந்ததே வனருளொடும் வாழியவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22651

108 வாழிமன்ன பூபக் கருமறவர்
வாழிமன்னு துமானொட லிப்புலி
வாழிமாநபி மாமகளா யுயர்
தோழிபாத்தி மாவீவியும் வாழியே.

109 வாழிமன்னர் ஹசன்ஹுசனாரு நீ
டுழியாயவர் தோழ ருறவினர்
வாழிமாவ குதாதுறை நாதரும்
காளைநாகைய தீபதி வாழியே.

110 வாழியின்னிலமீதின் மறைந்தொளிர்
வள்ளலான குதுபொலி யாவரும்
வாழியீழ மதனிலிலங் கொலி
வாழிமவ்லவி யாலீங்கள் வாழ்கவே.

111 வாழ்கவெம்மத வையகமாமணி
வாழ்கமா மதினாவொடு மக்கமும்
வாழ்கமாமதுரஞ் செறிமாமுனை
வாழ்கவெம்மிறை மாவருளோடரோ.

❖ ❖ ❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரக்கீர்த்தனாமிர்தம்

## காப்பு வெண்பா.

முத்தரணியும் படைத்து, மூரிமிகுமோருருவாய்
முத்தரணியா யிலங்குமுன்னவனாய் - இத்தரணி
பத்தரையுந் தீயரையும் பண்புடனே யாண்டருளும்
கத்தனவனென் கவிக்குக் காப்பு.

## கட்டளைக் கலித்துறை

சீர்சாலிரவி நிலவுபுவி திகழ்மீனினமுங்
கார்சாலிரவு பகல்மதியாண்டுங் கணித்துநல்கி
பேர்சாலகும் தெனுனபி மார்க்கத்தெனைவிடுத்த
நேர்சாலிறைவ வெனெஞ்சாசனத்து நிதமமரே.

பொன்கொண்டமக்கா புரியிற்பிறந்து புகழ்பெருக்கிப்
பின்கொண்ட மாமதினாவின் மறைந்தொளிர்பேரொளிவே
நின்கொண்ட லாயகவிகைநிழற்ற வெனையணுகி
மின்கொண்ட பாதந்தனைக் கொண்டெனாவை மிதித்தருளே.

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

நறைகமழு ஹாமீது நபியணையமகளருளு
நாதர பூபக்கர் பதமும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைபுரி தலிற்றமது மகனுயிருமோராத
முதல்வருமறிரு பாதமும்,
மறைவசனமொழிதலிற் குறைவரா தெழுதுமுயர்
மன்னருதுமான் பாதம்,
மகுமூதுநபி மருகரான அலிராஜர்தம்
மலர்ப்பதமு மேற்றிடுவனே.

திருயருவுமகுமூது நபிபேரரென்னவரு
தேவர்கௌ திருபாதமும்,
தென்னாகைவந்துபல மின்னார்தமலடுதொலை
தேவர்மீ றான் பாதமும்,
செருமருவி தினைலைநிறுத்திடற் குயிர்விட்ட
செல்வபது ரீன்கள்பதமும்,
சேயெனக்கதறி சுமாயீலெனு மெனிதயமலர்
சேவிக்கவந்திடுகவே.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருவறையுமட்ட நற்களப்படங்குந்
தேடறியதரளமா மொலிகடாமும்,
முருகுறையு மறுகின்மது ரமுனைவாழும்
மூதறிஞரான வுலமாக்கடாமும்,
வருகுறையுமறுகுறையு நீக்கவல்ல
வள்ளலாயுல குவாழொலிகடாமும்,
ஒருகுறையுமணுகாதிந் நூலைப்பாட
உதவுமெனவுள மகிழ்ந்துரைக்கின்றேனே.

சீர்பரவுகாரை மானகரெனாழி
சேவைபுரிகூர்தரளமா யுதித்து,
ஏர்பரவுமருதமா முனையிலேறி
எண்ணரியமாந்தர் முனிலங்காநின்று,
ஊர்பரவுமோர் முத்தாயுயர்முத்தாய
உரமிக்க குருமுத்தாம் வயிரமுத்தை,
வேர்வரவுமாறிதய மிளைத்தவீறே
வெறியூட்டியிவ் வினையைவிருப்பிற்றன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீர்த்தனைகள்

இலக்கம் 1.

நல்வாக்கு நீ கொடடி என்னுமிராகம்.

நல்வாக்கு நீர்தருவீர் - நபியே
நான்கவிகள் பாடிவர
செல்வாக்குடைய தேவே - இந்தச்
சீருலகி லென்றனக்கு (நல்வாக்கு

மக்கப்பதி பிறந்தீர் - வள
மாமதினா விற்சிறந்தீர்,
ஹக்கனருள்பொதிந்தீர் - இந்தக்
காசினியி லென்றனக்கு (நல்வாக்கு

சொல்லுங் கவிகள்மீதில் - வெய்ய
சொற்பிழைக ணேரிடாது,
நல்லவரமருளி - எந்தன்
நாவதிலே சீரருளி (நல்வாக்கு

இலக்கம் 2.

ததரத ராஜகுமாரா - என்னுமிராகம்.

பல்லவி

மங்கைமரிய மணவாழா - உயர்கோலா
இறசூலா - குணசீலா (மங்கை

அனுபல்லவி

மக்கநகருதித்த ஹக்கனின் தூதா
மிக்கபுகழிழைத்த மேதவ வாதா
தக்கவரமருளி இக்கணம் தாதா
தாபரித்தாள்குரு நாதா - நவநீதா
ஒளிர் பாதா மகுமூதா (மங்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் எடுப்பு.

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

காரிருளில் மதியைக் காட்டிய தீரா
அதிவீரா உய சூரா
ஒளிருளில் விண்சென்று ஓதிய வீரா
ஒளிருமிஸ் லாத்தினுக் குயிரருளீரா
சீரின்மிகுசுவனத் ததிபதியெனு மேரா
சிறந்தபுறக்கிலேறி யருள்தா - சத்தியவிரதா
மறைவிருதா வருவீரா (மங்கை

இலக்கம் 3.

பஜனைசெய்வோம் - எ. மெட்டு
உறுதிகொள்வோமிறை நபியை - நாம்
உறுதிகொள்வோமிறை நபியை - இனி
உவந்துதவம்புரிய வுவணையருள்பவரை
உளமீதிருத்து வோ மே (உறுதி

1. அல்லாவருளாலப் துல்லாமகவான
அகுமதரைத் துதிப் போமே (உறுதி

2. வரிசைபுறாக்கில் வானுலகேறிய
வள்ளல்நபியை நினைப்போமே (உறுதி

3. இறைவனைமறந்து இயற்றியபவனோய்
ஏறிடாதிறைஞ்சி டுவோமே (உறுதி

4. நாடொறுந்தீமை நாடியேசூடி
நடந்ததையெண்ணி நைவோமே (உறுதி

5. மஹ்ஷரெனு மிறை மைதானிலுதவு
மஹ்மூதரைத் துதிப்போமே (உறுதி

6. தாஸனிஸ்மாயில் வேஸமயிலரின்
தாழிணைசூடத துதிப்போமே (உறுதி

7. கவலைகள்தீர்க்கக் கங்கணங்கொண்ட
காசீம்நிபியை நினைப்போ மே (உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கம் 4.

காமசுந்தர ராங்கியுனது - எ. மெட்டு.

மாதரசே மறைநபிமீ
தாசைமீறியே அகமுருகுது அறைகுவாயடி (மாத

மகுடம்

மக்கத்திலுதித் தெம்முள்ளத்
துக்கத்தை விலக்குங்கோனடி (மாதரசே

மடக்கொடியே நொடிக்குளவரை
யடுத்தென்பணி முடிப்பாயடி (மாதரசே

மட்டற்றதுயர்க்கண் வலையுட்
பட்டுக்கெட்டுத் திடுக்குற்றேன் (மாதரசே

1. பாலவினை யாலேயென்றன்
பதைக்குடிதடி கதிக்குமுளம்
நினைக்குதடி அடிபடாநபியை (மாதரசே

2. ஆவலாலே கேவலஞ்செய்
தலைந்துதின முலைந்துஉனை
அனுப்பவென தகமுறையறையடி (மாதரசே

இலக்கம் 5.

குமாரனேயுன்னருமைவே செங்கோலா - எ. மெட்டு.

பல்லவி

தெரிவையாமினா ரளித்ததேகா
தாக வி வேகா (தெரிவை

அனுபல்லவி

தினகரனென வொளிரிருபத
சேவடிதர தேவரே வர (தெரிவை

தொகையறா

தேசங்கடோறுமுஞ் சேவடிபோற்றவே
பாசக்களிப்பினாற் பாடியானேற்றவே
ஈசனருளுட னெமைக்கரையேற்றவே
வாசவதனராய் வருமஹுமுதரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

தெள்ளுமாமறைக்குருவே தேடினேனுமைத்திருவே

தேவடியேனின் பாவடிபுனை

சேவடியினை நாவடிநனை (தெரிவை

தொகையறா

ஒதைதினமாறாத வுவரிசூழுலகினில்

உறுபிழையொழித்த யோகா

தாதையெனுமாதநபி தரணியிலுதிக்கமுன்

தனியுருக் கொண்டதாகா.

சரணம் எடுப்பு

தம்பமாயுமைநம்பினேன் தாசீமே காசீமேரே

தமியேனுற்றிடு துயரகற்றிடு

தரணியிலிழை பவமகற்றிடு (தெரிவை

உசாத்துணைப் பகுதி

தொகையறா

அன்னாளி லாதிதன் னொளிவினி லுருக்கொண்ட

அஹதினிறைவான முத்தே

பின்னளிலன்னமாய் மின்னுமயிலாகவும்

பேருருவெடுத் தவித்தே.

சரணம் எடுப்பு

இன்னாளிலும் பதங்கள் இறைஞ்சினேனி சுமாயீலே

இடரகற்றிடு இறைமுன்கற்றிடு

இகபரத்தினுக் கிறையேயற்றிடு (தெரிவை

இலக்கம் 6.

கண்ணே நின் திவ்ய தரிசனம்தரலாகாதா - எ. மெட்டு.

நபியேநின் ஞான தரிசனந்தரலாகாதா - எங்கள்

நபியேநின் ஞான தரிசனந்தரலாகாதா

அண்ணலப்துல்லா திருமகவாய்

அவனிதனிலுதித்த தங்கம் (ஞானத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 அரிவையாமினா ரிருகண்மணியென
அவதார மெடுத்த மெய்ப்பொருளே
அடியேனுற்றிருக்கின்ற மிடிமைகளையகற்றி
நொடியினிற்றிடந்தர லா கா தா (ஞானத்

2 வீரியமிக்கசாலுறு ஹலிமா
வாரியணைக்க வளர்ந்தீர்
ஊரினிற்சிறந்த சீரியமதினா
உடையவர்க் கரசே வருவீரே (ஞானத்

3 சுந்தரமாமதி னாவுக் கரசே
சோபனித்தே னனு தினமே
எந்தனின் மனமே இருகணின்மணியே
ஏழைக்கிரங்க லா கா தா (ஞானத்

4 பையல்மனது நொந்து பதறிடும்வேளை
பரிவுடனே ஷபாஅத் தீந்து
துய்யோனுமக்கருளுந் தூய சுவனபதி
சூழ்ந்துமகிழ வெமக் கருள்வீரே (ஞானத்

5 மங்கையாசியா மரியமுடனடத்தும்
மாமணப் பவனியைக்காண
திங்கள்வதனரே தீனெறிகாட்டிய
தேசிகரே யெமக் கருள்வீரே (ஞானத்

6 ஆசமதிட்டன னாதவவிஸ்மாயீல்
ஆர்துயர்தீர்க் கலா காதா
சீரணிகதிஜா வார்மணவாழ்வில்
வேளைவந்தாள லா கா தா (ஞானத்

இலக்கம் 7

சிதம்பரம் போகாம லிருப்பேனோ - எ. மெட்டு.

1 மஹ்ஷர்மைதானை மறப் பேனோ நபி
மஹ்மூதைப் போற்றாமலிருப் பேனோ நான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | அல்லா |
| | மன்னனாய்வருநாளை மறப் | பேனோ | நான் |
| 3 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | கலி |
| | மாவின்பொருளுணரா திருப் | பேனோ | நான் |
| 4 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | சத்ய |
| | மார்க்கநெறி தவறி நடப் | பேனோ | நான் |
| 5 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | மாய |
| | மங்கையர்மீதாசை தொடுப் | பேனோ | நான் |
| 6 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | கன்னி |
| | மாரினகத்து னுளைந்திருப் | பேனோ | நான் |
| 7 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | உயர் |
| | மக்கமதினாவேகா திருப் | பேனோ | நான் |
| 8 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | வட்டி |
| | வாங்கிப்பணத்தைக் கட்டிப் | பேனோ | நான் |
| 9 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | ஏழை |
| | வரியையிறுக்காம லொழிப் | பேனோ | நான் |
| 10 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | நோன்பை |
| | மரண்புடனோற் காதூணேற் | பேனோ | நான் |
| 11 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | மூளை |
| | மண்மீது ருகுநாளை மறப் | பேனோ | நான் |
| 12 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | அன்று |
| | மன்றாடுவோர் தம்மை மறப் | பேனோ | நான் |
| 13 | மஹ்ஷர்மைதானை மறப் | பேனோ | நபி |
| | மஹ்மூதைப் போற்றாம லிருப் | பேனோ | |

இலக்கம் 8.

ஈனஜென்மமெடுத்தேன் - என்னுமிராகம்.

கருதிக்கடைக்கண் பாரும் - ஹாமீதரே

கடவுள ருஷிலேறும் ஹாமீதரே (கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 கானகமதனில் மானுயிர்மீட்ட
காதநறைகமழ் காரணக்கடலே (கருதி

2 பூதலமீதில் புரிவனகோதில்
லாதெனையாழ வாதுசெய்யாது (கருதி

3 நல்லமல்செய்யா தில்லுறைபாவி
நாணமில்லாமல் நாதரைக்கேட்டேன் (கருதி

4 மதுரமுங்கல்லும் மருமுனைஹின்னை
மன்னரேவாது பண்ணாதேயென்னை (கருதி

5 உமது ஷபாஅத் துவந்தேனிஸ்மாயீல்
உறுதுயர்போக்கு முயர்நிலைக்கோனே. (கருதி

இலக்கம் 9.

மங்களமாக வைந்தாம் - எ. மெட்டு.
கண்ணே கனிரசமே அண்ணல் முஹம்மதரின்
திண்யபதம்பணிந்து நில் நில் நில்

கானில்மானின் பிணையானவர்
தேனனைய மொழித்தாயகர்

ஹாமீத குமத்மகுமூதுமு ஹம்மதெனும்
காருண்ய நன்னபிபாற் செல் செல் செல் (கண்ணே

1 ஒயிலாயெகீன் மரத்தில் மயில்வடிவாயிருந்த
குயிலாமினாபாலரைப் பார் பார் பார்

ஓங்குமாதவர்க்கு நாயகர்
தேங்கமழ்மதினத் தாயகர்

பூங்குயிலாயிஷாவோ டோங்குபுகழ்கதிஜா
தாங்கித்துதித்ததேவைச் சேர் சேர் சேர் (கண்ணே

2 குறைஷிக்குலத்துதித்த கோனாரகுமதர் பால்
குயிலேஎங்கள் சலாத்தைச் சொல் சொல் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனருள்பெருகு கோலராம்
தீனவர்க்குதவு சீலராம்

கொண்டல்குடைபிடிக்கத் தென்றல்சாமரைவீசும்
வெண்டரளமணிமுன் நில் நில் நில் (கண்ணே

3 மக்கநகருத்தித்த ஹக்கன்நபிமுனரெம்
மன்றாட்டத்தை நவின்று சொல் சொல் சொல்

மாதவர்க்குமகா நாயகர்
மாதவர்க்குஜெக போதகர்

மன்றாட்டத்திற்கிரங்கி மஹ்ஷர்தனிலுதவும்
மன்னர்பாதம்பணிந்து வா வா வா (கண்ணே

இலக்கம் 10.

துலங்குசெம்பொன் - எ. மெட்டு
துலங்குமாநபி தூயமுஹம்மதர்
தோற்றப் - பொலிவதனைத்

தோகையே கூறக்கேளடி பொலிவதனைத்
தோகையே கூறக்கேளடி (துலங்கு

1 ஓங்குநடுத்தரவு யரந்
தாங்குமுஹம்மதனார்மீ
துற்றநிறம்வெண்சிவப்பாம் முஹம்மதனார்மீ
துற்றநிறம்வெண் சிவப்பாம் (துலங்கு

2 விஸ்தீர்ணவாயு நெற்றியும்
கஸ்தூரி - மணமுமுடைநபி
வியர்வைவிளையுனறையே விண்ணேறுநபி
வியர்வைவிளையுநறையே (துலங்கு

3 வாய்ந்தகன்னமும் வடிவுடைமூக்கும்
வலுப்பமு றுந்தலையுமுடை
வள்ளலின்கைகள்விரிவே - இமைசெறிவே
வள்ளலின்கைகள் விரிவே (துலங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 மெலிந்தபுருவமு மடர்ந்தரோமமும்
மேனின்றி றங்குநடையும்
மேதினிமேச்சுநறையும் - செறிந்ததாடி
காதினையெட்டு ஜடையும் (துலங்கு

5 குதிகாற்சதை குறைந்த
மதினாமு ஹம்மதனாரின்
கோலமிகவுஞ் சீலமே - முஹம்மதனாரின்
கோலமிகவுஞ் சீலமே (துலங்கு

இலக்கம் 11.

ஆண்டிப்பண்டாரம் - எ. மெட்டு.
அறியத்தக்கதுவே நபிபிறப்
பறியத்தக்கதுவே

1 ஆமினார் வயிற்றினின்று
ஆண்டஞ்ஞூற் றெழுபத்தொன்றில்
தோன்றும் ஏப்ரல் இருபத்
தோடிணை ரெண்டாந்தேதி (அறிய

2 மக்காநகரில் "இசதுல்
மக்யா" "ஜெம்றத்துல்வுஸ்தா"
திக்கோர்புகழ் பதியில்
திங்களென்னு நாளதனில் (அறிய

3 கைகளைத்தரையி லூன்றிக்
கனசிரம் மேலுயர்த்திக்
கொய்தொப்புள் "ஹதனாவுடன்"
கோதையுதரத்தினின்று (அறிய

4 இருகண்ணிற் சுருமாவுடன்
இமையோரிரைந்திறைஞ்ச
வருகன்னி "ஹூறுலீங்கள்"
வானிழிந்து வாழ்த்திநிற்க (அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 “நவுஷேருவா”ன மரு
“கிஷ்ரா”க்கோட்டைசிதற
பவுஷேரிலங்கு நபி
பரிமளப்பூம் பாயதனில் (அறிய

6 நாற்றிசையு நறைகமழ
நாயனொலி நாதமென
போற்றிசெயு தேவர்சூழப்
பூதலத்திலிவர் வருகை. (அறிய

இலக்கம் 12.

வாரும்பிள்ளாய் வாரும்பிள்ளாய் - எ. மெட்டு

1 வாழ்த்திடுவோமித்தினமே வள்ளல்நபியை
வள்ளல்நபியை - மறை
தெள்ளுநபியை

2 ஆதியினிற் பேரொளிவாய் அமலன்முனின்றார்
அமலன்முன்னின்றார் - அன்ன
வடிவையுங்கொண்டார்

3 மின்னுமயிலாயெகீன்மர மீதிருந்தாரே
மீதிருந்தாரே - பல
போதிருந்தாரே

4 குறைஷியர்கள் குலமணியாய்க் குவலயமுற்றார்
குவலயமுற்றார் - ஏழு
மதலையைப்பெற்றார்

5 பாவையர்கட் காசியெனும் பாத்துமாவீவி
பாத்துமாவீவி - இவர்
நேத்திரத்தேவி

6 காதவழிநறைகமழும் காத்திம்றசூலை
காத்திம்றசூலை - பணிந்
தேத்துமிவ்வேளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஹுறுலிங்கள் கூடிப்புகழ்பாடிடுவோரை
பாடிடுவோரை - நமை
நாடிடுவோரை

8 மானுடனுமீன்முயலி னோடுநவின்றார்
ஓடுநவின்றார் - மிடி
யோடநவின்றார்

9 நாயனருளோடெமையீ டேற்றணுவேவந்தார்
ஏற்றவேவந்தார் - மறை
போற்றவேவந்தார்

10 தாசனிசுமாயீலெனின் தோசத்தைத்தீர்ப்பார்
தோசத்தைத்தீர்ப்பார் - உயர்
நேசத்தைச்சேர்ப்பார்.

இலக்கம் 13.

மஹ்ஷரில்யார்துணைசொல் - எ. மெட்டு
மாமதினா ஏகினார் - நபிமுஹம்மத்
மாமதினா ஏகினார்.

1 மங்கையணிகதிஜா மரணமடைந்தபின்னர்
மரணமடைந்தபின்னர்,
சங்கையபூபக்கருடன் சற்குணஸீலர்.

2 தடித்தபகைவர்க்கஞ்சி "தவுறு" மலைக்குகையில்
"தவுறு" மலைக்குகையில்
தரித்தனர்மூன்றுதினம் தாஹானன்னபி.

3 சிலந்திவலைபின்னியும் சிறந்தபுறாவளைத்தும்
சிறந்தபுறாவளைத்தும்
தொடர்ந்தோரடராதோட்டின திருமுஹம்மத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 நபியாமுஹம்மதரும் நாதரபூபக்கரும்
நாதரபூபக்கரும்
பகிதரைவென்றுசென்றனர் பயஹாம்பரும்

5 நபிதன் சிரந்துணிக்க நாடிசுறாக்கத்தென்போன்
நாடிசுறாக்கத்தென்போன்
நடத்தினன்தன்பரியை நபிமுஹம்மத்

உடசாத்துணைப் பகுதி

6 ஹாமீதவணிரக்க ஹக்கனருளின்படி
ஹக்கனருளின்படி
கால்களைப்பூமிகௌவிற்றே ஹபீபிறசூல்

7 குதிரைநிலையினிற்கக் குதித்து சுறாக்கத்தென்போன்
குதித்துசுறாக்கத்தென்போன்
குறைதவிர்த்திடவேண்டினான் குறைஷிமணி

8 அண்ணலகுமதனார் அபூபக்கர் சித்தீக்குடன்
அபூபக்கர் சித்தீக்குடன்
அடைந்தனரவ்வல்றபீஇல் அலர்பன்ரெண்டில்

9 குறைஷிகுலமணியும் கூபாவெனுந்தலத்தில்
கூபாவெனுந்தலத்தில்
நறையுடனேயிறங்கினார் நபிமுஹம்மத் (மாமதினா

இலக்கம் 14.

மங்குல்கவிகைதங்கும் - எ. மெட்டு.
மன்னருமர்தம்மரசு மாமதினாமீதிலங்கு
மாண்டவணடந்தகதை பூண்டுரைப்பனே.

அனுபல்லவி

மன்னராயிருந்தமகு - மூதருமடிந்துவரு
மாட்சியபூபக்கரின் தாட்சியுமுடிந்தபின்னர் (மன்னரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 சோதிநபியாருமர்கத் ததாபுமன்னவர் - அனை
மீதிலங்குநாளிலி சுலாமுமோங்கியே
ஆதிமறையோதவிறை ஆதரவேறி - நெறி
நீதிநாடெங்குஞ்சென்றவ ணின் றுலாவிட
நீதியுதுமானலியு மாதியருளாடவவ
ரோடமைச்செனவிலங்கு நாடனிநடந்தகதை (மன்னரு

2 மன்னவருமர்ஹஜ்ஜினை யுன்னியெழுந்து - திரு
மக்கநகர்நோக்கிப்பரியேறியேகினார்
இன்னவருடனேஜஹ மென்னுமன்னவன் புதல்வன்
ஈசனடிநாடியவ ரோடுகூடி
ஏகினனவனிநாம மோதுமேஜிபில்லாவென
ஆகினர்பலருமக்கத் தூருயிர்கஉபாவின்பால் (மன்னரு

3 மன்னருமறுஞ்ஜிபில்லா மற்றுயாவரும் - கஉபா
மஸ்ஜிதைவலம்வருமா றேதிரண்டு
துன்னியேநடக்கஜஹ - மன்னவன்மகன் கலிங்கம்
தூசுறவொருபிரசை காலினாலே
மன்னனென்றறியாதாலுந்துன்னிய செறிவினாலும்
தன்னறிவிழந்துதைக்க மன்னுஜிபில்லாசினந்தே (மன்னரு

4 தன்னுடைதனிலுதைத்த அன்னவன்றனை - ஜிபில்லா
கன்னமீதிலேயடிக்கக் கண்டதேசெந்நீர்
அன்னவனரசரிட மின்னதைக்கூற - உமர்மன்
ஆங்கிதைவினவஜிபில் லாவைக்கூவி
இன்னெறிநிகழ்த்தினை நியின்னொடியிலேயிவற்கு
மன்னுபணமீகுமவன்மான நஷ்டமாகவென்றார் (மன்னரு

5 என்றவுரைமீறினவன் தேகமீதிலே - நீயும்
குன்றெழவடித்ததேபோல் கொண்டவன்கையால்
இன்றுனையடிப்பனென் ஏந்தல்கூறிடஜிபில்லா
ஈதுநெறிகோதெனப்பல் வாறுமோதி
நின்றமன்னவர்மனதை ஒன்றினுமருட்டொணாது
நீதரேயெனக்கரைநாள் தாருமேதவணையென்றான் (மன்னரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 மாதவருமறகந்தவணை கேட்டே - ஜிபில்லா
மன்மகனுந்தன்னயலா ரோடுகூறுவான்
கோதுறுமிசுலாமி சாதிபேதமில்லாதது
கொற்றவனுக்குமேழைக்கும் முற்றுமோர்நீதம்
ஆதலினினியிம்மதக் காதலைத்துறந்தேயோட
ஆதாரவருளுமென ஓதினனவைமுன்னமே (மன்னரு

7 கோமகன்ஜிபில்லாவோடு கூடவேஐஞ்ஞூறுபேரும்
கொன்ஸ்டான்டிநோபிலை நோக்கிக்குடிபுகுந்தாரே
தாமதமிலாதிவர்தமன்னுமர் தம்மையஞ்சி
தாக்குமிஸ்லாத்தைத்துறந்து தகுதியென்றே
ஆக்குளகிறிஸ்துமதந் தாங்கியேயவணிருந்து
ஓங்கவேஜிபில்லாதலை உற்றுமேயரசனானான் (மன்னரு

8 அன்பரேஜிபில்லாமன்னன் அகுமதர்மதந்துறத்தற்
கானகாரணமீங்குள்ள நீதிசமத்துவமே
இன்பரேயிக்கதைதன்னால் - முன்பிருந்தமன்னவர்கள்
ஈசனடிபோற்றியாண்ட வாறுதேர்வீர்
அன்பரேயெமதுமத மின்பமேயேழைகளுக்கே
ஆதியிறைதானளித்த நீதியேயிதிலுளதே (மன்னரு

இலக்கம் 15.

காந்திரிஷி நம்மை - எ. மெட்டு

செய்யிதலி எங்கள்
செம்மல்மு ஹம்மதர்புலி செய்யிதலி
செய்யிதலி உயர் செய்யிதலி
எங்கள்
செம்மல்மு ஹம்மதர்புலி. (செய்யிதலி

1 மன்னபிமுஹம்மதரின் மருகராக வந்தவர்
மாதவரபூதாலிபின் மதலையெனநின்றவர்
கன்னல்மொழிபாத்திமத்தின் கல்பிலுறைகின்றவர்
கண்மணியெனத்திருஹ சன்ஹுசனைக்கொண்டவர் (செய்யிதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வஞ்சகனிபுனியனை நெஞ்சதிரவென்றவர்
வள்ளல்நபிதம்முரையையுள்ள முறக்கொண்டவர்
நெஞ்சதிரவாகைபுனைந் தஞ்சேலெனநின்றவர்
நேமியிலிலங்குமிசு லாத்தினணிபோன்றவர் (செய்யிதலி

3 ஆதிஸமதானவனின் அறுஷிலுறை நாயகா
நீதியுடனேறியுயர் நெறியருளுந் தாயகா
வேதியர்துதிக்கவுயர் வீடடையுவீரேகா
வேதபுறுக்கானைநனி ஓதுமலிநீரேகா (செய்யிதலி

4 முந்தியஸுஹாபிபலு லூன்மீடிமையோட்டவே
பந்தமறாதுறுசிசுவாற் பாரிலுரைகாட்டியே
பிந்தியிசுமாயீலெனும் பேதைக்கறிவூட்டவே
உந்தனசுமாவதெனும் ஓரலியைக்காட்டியே (செய்யிதலி

5 கானவிருட்சங்குலவிக் கனியுதிருங்கல்ஹின்னை
வானகத்திலேறுநபி மகள்கணவாவந்தென்னை
கோனகத்திலேறுநஸீஹத்தருளித் தந்தென்னை
குங்குமப்பதப்புலியாய்க் குதித்துவருவாயன்னை (செய்யிதலி

இலக்கம் 16.

அதிபதிவாறார் - என்ற மெட்டு.

குறு ஆனைக்காணும் - அதன் சிறப்பை
மறவாமல்பேணும் உயர்
குறைஷிமுஹம்மதர்பாலிறை யவனருளிய (குறுஆனை

அனுபல்லவி

அனுப்பியவரெமக்கு உரைக்குமாறருளிய
சல்லாபவுல்லாச சாரம்பொதிமறையைச்
சாலவுமதினக மூலமுணருங்காணும் (குருஆனை

சரணம்.

1 இறைவன் புவியைப்படைத் தெமையும்படைத்தெமக்கு
நிறையுமறிவுரைக்க நபியையனுப்பிவைத்தான்
அனுப்பியநபிமாரில் ஆதம்முதலீறிஷா
அதன்பின்னெமதுநபி அகுமதையமலனும்
அனுப்பினன்நபியாய் - அறிவுரைக்கும்
அருமைநல்மனுவாய் - அனுப்பியபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையாயவர்க்குப்பல முறையாய் ஜிபுரீல்மூலம்
மனிதரிடைபரப்பு மெனவேயிறையனுப்பி
குறையாதெமக்கரிய பலவுமதிலடக்கி
கொண்டாடுமெனவிறை விண்டானதனுரையைக்

குறைவறவுணர்வீர் - உணர்ந்துவரு
முறைபோலதிரிவீர் திரியினுமை

தரையிலடருமொரு மிடியுமடராதுகாண்
தனியனுரைப்படியே தகுதிபெறுவீர்நாளை
விரையுமிறசூலவர் உரையென்றுணராதுயர்
இறையினுரையெனவு மிதயமுணருங்காணும் (குருஆனை

2 மாபர்றதனாபில்கி - தாபமின்செய் இனெனு
மாயத்ததனினுரை யறியுமிறைமறையில்
கூறாதொருபொருளுங் குறையினவிடவிலையென்
றேதினானிறைவ னுயருமறையிதனில்

உற்றவறமும் - பொருளின்பம்
நற்றலவீடும் உணரவோதி

உலகில்மனிதரிடை நிகழுஞ்சேதியுங்கூறி
ஊத்தைவிலக்குமுறையுரைத்துப்பலவிடத்தில்
அலகிலிறையுரையென் றிதைநீருணருமென்றே
அமரர்ஜிபுரீல்மூலம் அனுப்பினனிறசூல்பால்

அதையுவந்தோதும் - ஆலிமையண்டி
அதனிரையோரும் ஓர்ந்திடிலும்

தகமுமுயிருமுறு முடலுமொளிலடையும்
அமலனருள்பெருகி ஆட்டுமருணீரிடை
ஜெகமுமுமைப்பரவுஞ் சிறக்குமிதையறிஞர்
ஜோர்ஜுபெர்னாண்டுஷா ஏற்றிப்புகழ்ந்தாரன்று

இதுவேநல்வேதம் - மனிதர்க்கரும்
இனியோபதேசம் எனவுங்கூறி

இப்போதையவுலகி - லிருக்குமரசிதற்கு
இனியமுஹம்மதினை அனையவொருவர் தமை
சருவாதிகாரியெனச் சாட்டின்சங்கடமொன்றும்
சாராதெனவிரித்துச் சாற்றினவர்காணும் (குருஆனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 திருமறையிதிலுள சிறியவொருசொல்லுரை
தேடினலைகடலின் திரையெனப்பெருகிடும்
பெருகிப்பெருகிமிகுந் தருகியனுட்பொருள்
பேணுவாரியினாழி காணுமாணிக்கம்போலென்

றுரைத்தனரன்று - பூசரியென்போர்
நிரைத்தபுறுதாவில் உரைத்தார்பின்னும்

இதனினிணைவசன மெடுத்திங்குணரும்போது
மனதுமகிழ்ந்தொருபால் நினைவுமகன்றொருபால்
வயிறுநிறைந்தொருபால் வளைந்துடல் சுருண்டோர்பால்
வாடிமனதொருபால் நாடியிறைதனடி

தேடுறுவெனவும் - பூசரியுரை
நாடிநீருணர்வீர் இதனைப்போல்

அறையப்பலவறபிப்புலவர் துணிந்துந்தோற்றார்
ஆண்டுஒருகுபிரின் அறிஞனுரைத்ததனனால்
அல்பீலுமல்பீலுவ மாஅதுறாக்மல்பீல்
என்றுவுரைக்கவவன் வென்றியிழந்துகெட்டான்

ஆனையைப்பற்றி - அவன்குறு
ஆனைப்போல்கட்டி உரைத்திடலும்

ஆஹாவிவன் மடமைப் பேயனெனப்பலரும்
அவனிதனிலிகழ்ந்து அருமைமறைபுகழ்ந்தார்
ஆதலினிதுவுயர் வேதமெனவுளஞ்சி
அல்லும்பகலும்மிதை உள்ளுளிருத்துங்காணும் (குருஆனை

இலக்கம் 17.

காந்திரிஷி நம்மைக்காத்திடும் - எ. மெட்டு
பைங்கிளியே சித்தி
பாத்திமத் தைப்பணிவோம் பைங்கிளியே
பைங்கிளியேமிளிர்பைங்கிளியே

சித்தி
பாத்திமாத்தைப் பணிவோம் - பைங்கிளியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 பாரிலங்குமாமதினப் பதியிலங்குந்தாயகி
பாவைகதிஜாவருளும் பாத்திமத்து நாயகி
காரிலங்குமாமதியைக் காட்டுநபி பாலேகி
காவலரலிப்புலியார் கல்பிலுறைநாயகி (பைங்

2 செய்யிதுனாதையிபொடு தாகிர்காசீமி புறாகீம
செல்வியும் முகுல்தூமுடன் செய்னபுறுகய்யாவை
துய்யநபீயீந்தருளச் சோதரராய்க்கொண்டீரே
தூதர்ஜிபுரீல்தருநும் சூறத்தினைக்கண்டீரே (பைங்

3 தம்புதல்வர் கையெழுத்தின் தர்க்கமதையோட்டவே
உம்பரிலுறுங்கனியுயர் துப்பாஹைமீட்டியே
நம்புமடியார்களாக நாட்டங்களைக்கூட்டவே
நாயனருளுந்தகுதி நற்சடிதமீட்டினோர் (பைங்

4 காவலர் குவைலிதருள் கண்மணிதனன்மணியே
காலமெழு நாலியாண்டிஞ் ஞாலமிருந்தீரணியே
நாவலரினாவதனினடனமிடு மாமணியே
நாடுமிசு மாயீலெனைக் கூடியருள் தூமணியே (பைங்

இலக்கம் 18.

பூண்டமட்டின் பம் - எ. மெட்டு.

சீரிலங்குபகுதா துறையு மாதவமே
தாரிலங்கமலர்த்தாளருளுந் தாயகமே

பாரிலங்குதரீக்கத்ததி பரேதிருவே
பக்கீர்முகிய்யித்தீனே நும்பார்வையெனைச் சேரவருள்
(சீரிலங்

1 முந்தமுத்தாயு தித்தமு ஹம்மமதரின்
சந்ததிப்பேர ரேதிருவேசற்குருவே
தந்தையானவபூ ஸாலிகுத வப்பேறே
சாருமெனைக்காருமுகம் பாருமருள்தாருமுயர் (சீரிலங்

2 மூதுமாதினகவேதனையைப் போக்கவிரண்
டாறு ஆண்டின்முன ராமிமறைகப்பலினை
மேதினிபுகழவீரர் பொருளாதியுடன்
மினுனொடியிற் றனமடவாளினை யணையவருளுமுயர் (சீரிலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பூதலத்திலொரு மாதுபெறுசேயிருபத்
தானதும்மங்கை யானதினைக்கேட்டருளி
தீதகற்றவதி லோர்பத்தினையாணாக்கிய
செய்யுதுவேவையமதில் உய்யவருள் செய்திருவே (சீரிலங்

4 ஆதியிற்கபுறில் அடையுண்டுறையொருமனிதன்
ஓதும்பெயர்கொண் டுகார் செய்வினைதீர்த்தீர்
தேதிதோறுமுயர் திரு புகழைப்பாடுமெனைத்
தேடியருள்தாருமிறையோ டுரைசெய்பூரணரே (சீரிலங்

5 மானுமீனுமுயலோடு மொழிந்திடர்களையு
மாநபிமகளார் மகமகவாய் வருமேரே
கானுமலையுமுலைந் தலையுமிசுமாயீலெனின்
சறையொழியப் புவியில்விளை பகையழியத்தினமருளச் (சீரிலங்

இலக்கம் 19.

துலங்குசெம்பொன் - எ. மெட்டு
நலங்கனிந்துதிர் நாகையுறைந்தொளிர்
நாதா - மாறாவினோதா
நாடிவரந்தந்தாளுமே மாறாவினோதா
நாடிவரந்தந்தாளுமே. (நலங்

1. மிக்கபுகழ்ஹசன் குத்தூசருந்தவ
மேரே மீறானொலியே
மேவிவரந்தந்தாளுமே மீறானொலியே
மேவிவரந்தந்தாளுமே. (நலங்

2 தஞ்சைநகர்க்கரசன் பிணிபோக்கிய
தாசீம் ந பிபேரரே
தம்பமென்றும்மைநம்பினேன் நபிபேரரே
தம்பமென்றும்மை நம்பினேன் (நலங்

3 கடலிடையோடிடு கப்பலுறுந்தமர்
கண்ணாடிகொண்டடைத்த
காவலர்போற்றுங் கோலா பணிந்துதினம்
பாவலரேற்றுஞ் சீலா (நலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 வார்குமிழின்றியே மிதியடியிற்பதம்
வைத்துந டந்துசென்று
வாகைபுனைந்தகோவே உமைத்துதிக்க
வாழ்வையருளுந்தேவே. (நலங்

5 முக்கனியோடுத ருக்களுமேலமும்
மூடிமிளிர்கல்ஹின்னை
முடுகியென்மிடிதீர்ப்பீர் மிளிர்கல்ஹின்னை
முடுகியென்மிடிதீர்ப்பீர். (நலங்

6 நாகைபிறந்து பதினேழேறுநாலாண்டிந்த
நானிலம் வாழ்ந்தகோலே
நாடினனிஸ்மாயீலே உமதஸ்மாவை
நாடினனிஸ்மாயிலே. (நலங்

7 ஏகவிறையருளு வேதபுறுக்கானுரை
மீறிந டந்தபாவம்
ஏறிடாதெனைக்காப்பீர் - நடந்தபாவம்
ஏறிடாதெனைக்காப்பீர். (நலங்

இலக்கம் 20.

தெய்வமிருக்குதொருபக்கத்திலே - எ. மெட்டு.
மார்க்கமிலங்குதையாதிக் கெட்டிலே - சில
மனிதர்நடத்தையொரு பக்கத்திலே - சில
யோக்யமுஹம்மதரின் வாக்யத்திலே - வரு
பாக்யமுறுவதார் சுவர்க்கத்திரிலே.

1 பாசபுறுக்கானென்றன் மேசையிலே - அதை
பாமநாழிகையோதப் பாசமில்லை - வரு
நாசமகற்றுமறை நேசமில்லை - கெடு
காலநடத்தைபல பூசையிலே.

2 குறுஆனிருக்குதொரு மூலையிலே - கீதம்
குதூகலித்தாடுதையா காலையிலே - மனம்
சறுகாதிருக்கமறையேற் பாயெடா - மாய
சங்கீதக்கச்சேரியைத் தோற்பாயடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மாட்சிசரீ அத்தொருபக்கத்திலே - பெரு
மஅரிபத்துலவுது தர்க்கத்திலே - சில
மோட்டுமுரீதீன்களின் பக்கத்திலே - உயர்
மோட்சமிருக்குதாமே கக்கத்திலே.

4 சாதிமதம் போச்சு
சமத்துவமுண்டாச்சு
கூடியுண்ணலாச்சு
குலாவியேகலாச்சு

தொழுகையிலங்குதையா பள்ளியிலே - சில
துடுக்கருறங்குகிறார் கள்ளிமேலே
அழுகையுடன்தவிப்பார் துள்ளிமேலே - வரு
ஆகிறநாளையிலிப் யுள்ளிகளே.

5 ஜோக்குப்பெருகலாச்சு
ஜேக்குவிரவிப்போச்சு
பாக்குசிகறற்பேச்சு
பாலுனும்பேசலாச்சு

பாரின்நடத்தைநாக ரீகத்திலே - இன்னும்
பாடினடிப்பாரெமை வேகத்தோடே.

6 மஹ்ஷர்நாளை நம்பு
மனதுருகி வெம்பு
பறுலுஷறுத்தை நாடு
பரிந்துதௌபா தேடு

சீலமுடன்நபிசொல் பாருங்களே - இந்தச்
சிறுவனிசுமாயீல்சொல் தேருங்களே - வரு
காலநடைதிருத்திப் பாருங்களே - உயர்
ஹக்கையுணர்ந்து களிகூருங்களே.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் புதல்வர்கள்

- I. சித்தி பௌசியா (மரணம்)
- I. சித்தி வஜீதா
- IM. சம்சுல் பௌஸ் (CTB)
- I. நூறுல் பௌஸ்
  (முகாமையாளர், அல்-மஸ்ரபுல் இஸ்லாமியு)
- IM. நஜிமுல் பௌஸ் (கட்டடக் கொந்தராத்து)
- IM. கமறுல் பௌஸ்
- IM. ஜனுல் காமிலா
- IM. சித்தி மாஜிதா
- IM. சித்தி ஸம் ஸம்வீவி
- IM. வதுறுல் பௌஸ் JP (SLPA)

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டமிழ் பெரிய வாத்தியார்...



நூலாசிரியர்

இஸ்லாமிய நன்றிகளையும், பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்புகளையும், கலீபாக்களின் செயல் முறைகளையும், அன்னாரின் திலகங்கள் ஆயிஷா (ரலி), பாத்திமா (ரலி) போன்றோரின் சிறப்பம்சங்களையும் சித்தரித்துக்காட்டும் ஒரு பிரபந்தமே 'உபாக்கியான அந்தாதி' என்ற இந்நூலாகும்.

சரிபுத்தீன் வாத்தியாரைத் தொடர்ந்து பெரிய வாத்தியார் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தண்டமிழ் யூ.எல். இஸ்மாயில் அதிபர் இதன் ஆசிரியராவார். உபாக்கியான அந்தாதிப் பாடல்கள், தோத்திர கீர்த்தனாமிர்தம், கீர்த்தனைகள் என்பவற்றை உள்ளடக்கிய இப்பிரபந்தம் 1939 இல் வெளியாகிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலைமறை இலக்கியவாதியாய் தன்னை இருத்திக் கொண்ட இஸ்மாயீல் அதிபர் இந்நூலோடு மாத்திரம் நின்றுவிடாது 'முஹிம்மாதுல் முஸ்லிமீன், நபிகள் நாயகம் அவர்களின் பலதார மணத்தின் காரணங்கள் என்ற இரு நூல்களையும், பல தனிப்பாடல்களையும், கட்டுரைகளையும் எழுதி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்திருக்கின்றமை மருதமுனை மண்ணின் மகிமையை மேலும் ஒருபடி உயர்த்தியிருக்கின்றது.



பதிப்பாசிரியர்

அல்-மனாரில் ஆரம்பக் கல்வியைப் பயின்று அட்டாளைச் சேனையில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர், 1957 - 1962 வரை அல்-மனாரின் (மருதமுனை வடக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை) அதிபராய் உயர்ந்து நின்று தம் சமூகத்தை ஆற்றுப்படுத்திய இப்படைப்பாளியின் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் ஆராயப்பட வேண்டியவையாகும். இவரது இளைய புதல்வன் ஐ.எம். வதுறுல் பௌஸின் பதிப்பாக்க முயற்சிகள் இப்படைப்புக்கள் பற்றிய நுண்ணாய்விற்கு அடியெடுத்துக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி சத்தார். எம். பிர்தௌஸ்**
வருகை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

9 789553 876706

விலை : 450/-

நியு இளம்பிறை, மருதமுனை. 0773940406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org